கல்கி


KALKI 15.7.90 ரூ 2.50



அரசு உத்தரவு; அபத்த உத்தரவு!



புத்துணர்ச்சியும் பொலிவும் வழங்கும் ஹமாம்!



கண்டுகொள்வீர் ஹமாம் புரியும் ஜாலத்தை,
இதுவரை காணாத கூடுதல் புத்துணர்ச்சியும்
பொலிவும் உமக்கு. புதுமை குன்றாமல்
நீடித்துக் கமழும் நறுமணம். சொகுசான
நுரைவளம்—வழங்கும் என்றும் புதுமையான
ஹமாம். புத்துணர்ச்சியையும்
பொலிவையும் உணருவீர்.

ஹமாம்
குடும்ப சோப்



பாட்டா தயாரிப்பு

CLARION/B/T/23/173 TAM

இந்தியா கோப்பை—கால்பந்துப் போட்டி



"ஸேம்ஸைட் கோல்! ஸேம்ஸைட் கோல்!" என்று உரக்கக் கத்தினார் ரெஃப்பரி.

என்ன கத்தி, என்ன பிரயோஜனம்? தேவிலால் உதைத்த பந்து, ஜிவ்வென்று புறப்பட்டு, கோலை நோக்கிப் பறந்தது. குறுக்கிட்டுத் தடுக்க யாருமே இல்லை! நல்ல வேளை, கோல் கீப்பர் வி. பி. சிங் அப்படியே ஸூப்பர் மேன் போல் பறந்து தாவ, அதிர்ஷ்டவசமாக புட்பால் அவர் நெற்றியைத் தாக்கி, மேலெழும்பி, கோல் கம்பத்துக்கு மேலாகச் சென்று விட்டது!

"என்ன அக்கிரமம் 'இது?" என்று ரெஃப்பரி எண்ணி முடிவதற்குள், 'விஸில்' சத்தம் கேட்டது. ஹெக்டேதான் விசில் ஊதிக் கொண்டிருந்தார்! "என்னய்யா இது, என்னோட விசில் உங்ககிட்ட எப்படி வந்தது?" என்று ரெஃப்பரி மிஸ்டர் பொதுஜனம் கேட்டு முடிப்பதற்குள், ஹெக்டே அவரைப் பார்த்து, "நான் ஃபௌல் பண்ணிட்டதாச் சொல்றாங்க; அது உண்மையா இல்லையான்னு முதல்ல தெரிஞ்சுக்குங்க; அப்புறமா ஆட வரேன்; அதுவரை மைதானத்தை விட்டு வெளியே நிற்கிறேன்" என்றார்.

"அதையெல்லாம் ரெஃப்பரிதான் தீர்மானிக்கணும்; ஆட்டக்காரர் இல்லை" என்று ரெஃப்பரி பொதுஜனம் கூறியதைக் காதில் வாங்கிக் கொள்ளாத ஹெக்டே, மஞ்சள் அட்டையைத் தாமே தமது பாக்கெட்டிலிருந்து எடுத்துக் காட்டிவிட்டு வெளியேறினார்!

இதற்குள் சந்திரசேகர், "இந்த ஆட்டமே மோசம்! ரூல்ஸே தப்பு! எல்லாத்தையும் திருத்தி மாற்றி எழுதணும்!" என்று குதிக்க ஆரம்பித்தார்..

ரெஃப்பரி பொதுஜனம் தலையைச் சொறிந்து கொண்டு எதிரணியைப் பார்க்க, அங்கே காப்டன் ராஜீவைச் சுற்றி நாலைந்து பேரும் அவர்களுடன் சம்பந்தப்படாமல் பெனல்டி கார்னர் பக்கமாக நாலைந்து பேருமாகப் பிரிந்து எதையோ விவாதித்துக் கொண்டிருந்தனர்.

அவர்களிடம், "என்ன இப்படி ஆடாமல் நின்று கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?" என்று ரெஃப்பரி வினவ, அவர்கள், "காப்டன் சரியில்லை; டீமை நடத்திச் செல்ல அவருக்குத் தகுதியில்லை; அதனால் தனிக் கூட்டம் போட்டுத் தீர்மானம் நிறைவேற்றுகிறோம்" என்றனர்.

இதைக் கேட்டுக் கொஞ்சமும் பதற்றமடையாமல் காப்டன் ராஜீவ், "அவர்களுக்கு என்ன தெரியும்? மக்களுக்கு என்னைத்தான் பிடிக்கும்! மக்களைக் கவர்வதற்காகவே நான் இதாலி வரை இரண்டாம் வகுப்பிலேயே ரயில் பயணம் செய்து வந்தேனாக்கும்!" என்றார்.

ரெஃப்பரி மிஸ்டர் பொது ஜனத்துக்குப் போதும்போதும் என்றாகிவிட்டது. "நேபிள்ஸில் அவதிப்பட்டது போதும்; டூரினுக்குப் போகிறேன். அங்கேயாவது சரியாக ஆடுகிறார்களா பார்க்கலாம்" என்று எண்ணியபடி விமானத்தில் விரைந்தார்.

அங்கே, "ஆட்டத்துக்கு நான் தயார்! தயார்!" என்று எம்பி எம்பிக் குதித்துக் கொண்டிருந்தார் கருணாநிதி. அவருடன் சேர்ந்து குதித்த அன்பழகன், "ஸென்டர் ஃபார்வர்டா ஸ்டாலின் இல்லாதவரை ஜெயித்து விடலாம்" என்று கூறியவாறே, ஸ்டாலினை ஒரு தடவை முறைத்தார். "இப்படி முறைத்துக் கொண்டாலும் எங்க

செம்பியன்

ளிடையே வேற்றுமை இல்லை. எதிரணியைப் பாருங்கள்; காப்டனையே காணோம்!'' என்றார், ஸ்டாலின்.

எஸ். டி. எஸ். குனிந்து நிமிர்ந்து எக்ஸர்ஸைஸ் செய்து கொண்டே, ''ஆட்டம் ஆரம்பிக்கும்போது எங்கள் காப்டன் திடுமென்று வந்து குதிப்பார்! உனக்கென்ன ஆச்சு?'' என்று ஸ்டாலினைத் திருப்பிக் கேட்டவாறு, மற்றவர்களைப் பார்க்க, அவர்களோ, ''நாம் ஒவ்வொருவருமே காப்டன்தான்; முப்பத்தேழு காப்டன்கள்!'' என்று கூறினார்கள்.

''காப்டன்களே முப்பத்தேழு பேர் என்றால் ஆட்டக்காரர்கள் எத்தனை?'' என்று ரெஃப்ரி கேட்கவில்லை. அவருக்குத் தலை சுற்ற ஆரம்பித்தது! ஆனால் அவர் கீழே சாய்வதற்கு முன்பாக வேறு ஒரு காட்சி அவர் கவனத்தைக் கவர்ந்து அதிசயத்துடன் நிமிர்ந்து பார்க்கச் செய்தது.

ஃபுட்பால் மைதானத்தை நோக்கி ஒரு டீம் ஓடி வந்து கொண்டிருந்தது. அதில் பாதிப் பேருக்குத் தலைமை வகித்த வாழப்பாடி, பந்தை முன்னோக்கி உதைத்தவாறு, ''கருணாநிதி, ராஜினாமா!'' ''கருணாநிதி, ராஜினாமா!'' என்று கோஷம் எழுப்பிக் கொண்டிருந்தார். டீமின் மறு பாதி கோஷ்டி, இவர்கள் முதுகுகளுக்கு முதுகுகள் காட்டியவாறு பின்னோக்கியே ஓடி வந்தது! அதில் அனைவருக்கும் பின்னால் (அல்லது முன்னால்!) காப்டன் மூப்பனார் பந்தைப் பின்நோக்கி உதைத்தபடியே வந்து கொண்டிருந்தார்! அவரும் ''ராஜினாமா'' கோஷத்தையே எழுப்பினார்.

''இப்படி ஒரே அணியில் ஒரு கோஷ்டி பந்தை முன்னோக்கியும் இன்னொரு கோஷ்டி பந்தைப் பின்னோக்கியும் அடித்துக் கொண்டிருந்தால் ஃபுட்பால் மேட்சை எப்படி நான் நடத்தித் தருவது?'' என்று ரெஃப்ரி கேட்க, ''நாங்கள் இப்படித்தான் ஆடுவோம்; உனக்கு ரெஃப்ரி பண்ணத் தெரியவில்லை என்றால் நாங்கள் என்ன செய்யட்டும்? முதலில் கோல் நெட்டைச் சரியாகப் போடாத கருணாநிதியை ராஜினாமா செய்யச் சொல்லு! அதிலிருக்கிற ஓட்டை வழியாகப் பந்து என்ன, போராளிகளே புகுந்து தப்பி விடுகிறார்கள்'' என்றார் வாழப்பாடி.

''உனக்கு முன்னால் உன் அணிக்குக் காப்டனாக இருந்தவன் காலத்தில், கோல் போஸ்ட்டே உடைந்து சரிந்து கிடந்ததே; அதற்கு என்ன சொல்கிறாய்?'' என்று கருணாநிதி திருப்பிக் கேட்க...

பந்தை உதைப்பதற்குப் பதில் ஒருவரை ஒருவர் உதைத்துக் கொள்ள ஆரம்பித்து விடுவார்கள் போல் தோன்றவே, ரெஃப்ரி, நீண்டதாக ஒரு விசில் கொடுத்து ஆட்டத்தையே ரத்து செய்வதாக அறிவிக்கக் கருதி விசிலைத்தேடினார்...அகப்பட்டால்தானே?

''எங்கே? எங்கே?'' என்று பரபரப்புடன் திருவாளர் பொதுஜனம் விசிலைத் தேட, திருமதி பொதுஜனம் அவரைத் தட்டி எழுப்பினார்.

''அழகுதான்; நள்ளிரவுக்கு மேல் டீ. வி. யில் உலகக் கோப்பை ஃபுட்பால் ஸெமி ஃபைனல் பார்க்கிறேன் பேர் வழியென்று இப்படித் தூங்கி வழிந்து, சொப்பனம் கண்டு, உளறிக் கொட்டுகிறீர்களே!'' என்றாள்.


''அந்த அசல் செமி ஃபைனலைவிட, இந்தக் கனவு செமி ஃபைனல் ரொம்ப சுவாரஸ்யமாக இருந்தது!'' என்றார் திருவாளர் பொதுஜனம்.

ஒரு நடிகை அழுகிறாள்

அன்று —
கிளிசரைப் போட்டுக் கொண்டு
நிஜமாக அழுதேன்;
என்னைத் தெரிந்தவர்கள்
போலியாக அழுதார்கள்;
இன்று —
கிளிசரின் போட்டுக் கொண்டு
போலியாக அழுகிறேன்;
எனக்குத் தெரியாதவர்கள் கூட
நிஜமாக அழுகிறார்கள்!

— ஆரூர் சேகர்.





''அந்தக் கார்ப்பரேஷன் ஆளோட உங்களுக்கு என்ன தகராறு?''

''இந்தத் தெருவுக்கு ஒரு குப்பைத் தொட்டி 'அலாட்' பண்ணியிருக்காங்களாம். 'நீங்கதான் எழுத்தாளராச்சே, உங்க வீட்டு வாசல்லே வைக்கட்டுமா?' 'ன்னு கேட்கிறான்!''

— டி. என். பாலகிருஷ்ணன்.



* பரணி: எத்தனை சோகம்!

சினிமாவை விட நிஜம்தான் சோகம்!

●● நடிகை பானுப்பிரியாவின் சொந்தப் படம் 'சிறையில் பூத்த சின்ன மலர்'. 'தூக்கு மேடை' படத்திற்குப் பின் நிறைய இடை வெளி விட்டு இந்தப் படத்தை இயக்கியிருக்கிறார் அமிர்தம். இந்தத் தலைமுறையினர் நடிக்கும் படம் ஒன்றையாவது இயக்க வேண்டும் என்று இவருக்கு நீண்ட நாளாகவே ஓர் ஆசை. விஜயகாந்தைச் சந்தித்துக் கதையைக் கூறியிருக்கிறார் அமிர்தம். விஜயகாந்துக்குக் கதை பிடித்துப் போக, உடனே கால்ஷீட் கொடுத்து விட்டார். எக்கச்சக்க பிஸியாய் இருக்கும் விஜய்காந்த் உடனே கால்ஷீட் கொடுக்கும் அளவுக்குக் கதையில் அப்படியென்ன விசேஷம்? பார்க்கத்தானே போகிறோம்!

●● டாக்டர் ராஜசேகர் கால் முறிவுக்குப் பின்பு நடித்த படம் 'ரவுடிஸம் ஜிந்தாபாத்' என்ற தெலுங்குப் படம். டைட்டில் வன்முறையை ஊக்கப்படுத்தும் விதமாக உள்ளது என்று சென்சார் மறுப்புச் சொன்னவுடன் 'ரவுடிஸம் நஸிஞ்சாலி' (ஒழிக) என்று அப்படியே பிளேட்டை மாற்றி விட்டார்கள். தெலுங்கில் இப்படி டைட்டில் மாற்றிய படங்கள் எல்லாம் நன்றாக ஓடும் என்று நம்புகிறார்கள். ஒரு வேளை அதற்காகவே முதலில் அப்படி தலைப்புக் கொடுத்தார்களோ என்னவோ! இப்போது தமிழிலும் ''ஆம்பளை'' என்று ரீமேக் செய்திருக்கிறார்கள். தெலுங்கு மாதிரி தமிழில் எடுபடுமா?

●● நம்ம 'சந்தன வீரப்பன்' கதையை அப்படியே மலையாளத்தில் ஒரு படமாக எடுத்து விட்டார்கள். இந்தப் படத்தில் மம்முட்டிக்குத் தங்கையாக நடிக்கிறார் ஐஸ்வர்யா! 'பொண்ணுக்குச் சேதி வந்தாச்சு' என்ற பட பூஜையில் கலந்து கொள்ள வேண்டும் என்று ஷூட்டிங் முடிந்தவுடன் கேரளாவிலிருந்து அவசர அவசரமாகக் கிளம்பி சென்னைக்கு வந்தார் ஐஸ்வர்யா! விழா முடிந்தவுடன் உடனே வீட்டிற்குக் கிளம்பி விடாமல் சங்கர் — கணேஷின் மியூசிக் கம்போஸிங் முழுவதையும் கவனித்தார். சங்கர் — கணேஷிடம் ''சார் எனக்கும் கூட சில கருவிகளை வாசிக்கத் தெரியும்'' என்று வாசித்துக் காட்டினார். அதோடு விடவில்லை! சவுண்ட் எஞ்ஜினியரிடம் அனுமதி வாங்கி, ரிக்கார்டிங் சவுண்ட் கரெக்‌ஷனையும் செய்து பார்க்கத் துவங்கி விட்டார்!



* ''ஆம்பளை'' — தமிழில் எடுபடுமா?

* ஐஸ்வர்யா: இசையும் தெரியும்!

●● தமிழ் நாட்டில் சுற்றிக் கொண்டிருந்த தெலுங்குப் பட யூனிட் மொத்தமும் இப்போது ஹைதராபாத், பெங்களூர் என்று கூண்டோடு கிளம்பி விட்டது. என்ன திடீரென்று? ஆந்திராவில் ஷூட் செய்யப்பட்டு வெளிவரும் தெலுங்குப் படங்களுக்குக் கூடுதல் சலுகைகள் வழங்கப் போவதாக ஆந்திர அரசு அறிவித்ததன் எதிரொலி தான் இது! இந்தச் செய்தி வந்தவுடன் சென்னையிலிருந்து சுமன், சிரஞ்சீவி, விஸ்வநாத், டாக்டர் ராஜசேகர் கம்பெனிகள் உட்பட மொத்தம் முப்பது யூனிட்கள் ஆந்திராவுக்குக் குடிபெயர்ந்து விட்டன.

●● பிரபல டைரக்டர்களான ஸ்ரீதர், மகேந்திரன், பாலசந்தர், மணிரத்னம் போன்றவர்களின் படங்களுக்கு ஆர்ட் டிசைனராகப் பணியாற்றியவர் பரணி. பழைய எம். ஜி. ஆர். படங்களிலிருந்து அக்னி நட்சத்திரம் வரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட படங்களுக்கு ஆர்ட் டிசைனராகப் பணிபுரிந்திருக்கிறார். சமீபத்தில் மரணமடைந்து விட்ட பரணிக்குச் சொந்த வீடு கூடக் கிடையாது. இப்போது அவர் குடும்பம் வறுமையில் வாடுகிறது. அவரிடம் உதவியாளராக இருந்த பாண்டியன் (நடிகர் சந்திரசேகரின் அண்ணன்) என்பவர் இப்போது பரணியின் குடும்ப உதவிக்காகச் சினிமா வட்டாரங்களில் நிதி திரட்டிக் கொண்டிருக்கிறார். சினிமாவை விட நிஜம் தான் எத்தனை சோகமாக இருக்கிறது!

— எஸ். பாலு

அரசு உத்தரவு! அபத்த உத்தரவு!



கார்களையே குறைக்க அரசு முன்வருமா?

பெட்ரோல் பங்குகள் இனி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை ஏழு மணி முதல் பன்னிரண்டு மணி வரை திறந்திருக்கும் என்று அரசு அறிவித்துவிட்டது. ஞாயிறு முழுவதும் பங்குகள் மூடப்பட வேண்டும் என்ற உத்தரவு வந்த பத்தே நாட்களுக்குள் இப்படி மறு உத்தரவு வந்திருப்பதே இவ் விஷயத்தில் அரசின் அணுகுமுறை அபத்தமானது என்பதை நிரூபிக்கிறது.

"**சா**ர்! இயூல வாங்க!"

"பத்து லிட்டர் போடுப்பா."

"எனக்கு ஒண்ணு — ஒண்ணு."

"பெட்ரோல் போட்டாச்சில்ல! நகருங்க சார்!"

— மவுண்ட்ரோடில் உள்ள பெட்ரோல் பங்கில் கடந்த ஜூன் மாதம் இருபத்து மூன்றாம் தேதி மாலை நாலரை மணிக்கு, ஏறத்தாழ அறுபது இரண்டு சக்கர வாகனங்கள்; ஆறேழு கார்கள். கூட்டம் குறைந்த வழியாய்க் காணோம். மேலே மேலே வாகனங்கள் வந்த வண்ணம் இருந்தன. பங்கில் வேலை பார்க்கிறவர்கள் களைத்துப் போனார்கள். பில் போடுகிறவருக்கு


பெண்டு நிமிர்ந்து விட்டது. பெட்ரோல் பங்கின் முதலாளி வாகனங்களின் கியூவை முறைப்படுத்திக் கொண்டிருந்தார்.

பலருடைய முகத்திலும் ஒரு விதச் சலிப்பு தான் குடிகொண்டிருந்தது. யாரிடம் பேச்சுக் கொடுத்தாலும், ''ஞாயிற்றுக்கிழமைகளில் பெட்ரோல் பங்க்குகளை மூடுவது என்பது பிரச்னைக்குத் தீர்வு அல்ல! இது பெட்ரோல் உபயோகிக்கும் அளவைக் குறைக்க நிச்சயம் உதவாது'' என்கிற எண்ணத்தையே வெளிப்படுத்தினார்கள்.

இந்த எண்ணத்தையே மறுநாள் காலை செய்தித்தாள்களும் பிரதிபலித்தன. சென்னையில் மட்டுமின்றி, இந்தியா முழுவதிலுமே, பெட்ரோல் பங்க்குகளில் சனிக்கிழமை விற்பனை இருபது முதல் இருபத்தைந்து சதவீதம் கூடியிருந்தது. விடுமுறைக்கு அடுத்த நாளான திங்களன்றும் விற்பனை கூடியிருந்தது! ஆக மொத்தம், வழக்கமாக ஞாயிற்றுக் கிழமைகளில் விற்பனையாகும் பெட்ரோலின் அளவை விடக் கூடுதல் விற்பனை ஆகியிருந்தாலும் வியப்பில்லை!

''பெட்ரோல் பங்க்குகளை ஒரு நாள் மூடியது வேறு பல புதிய பிரச்னைகளையும் கிளப்பியுள்ளது...'' என்கிறார் டூரிஸ்ட் கார் டிரைவர் பிச்சை. ''சென்னையிலிருந்து, கோவைக்குச் சனிக்கிழமை இரவு புறப்படும் ஒரு காரை எடுத்துக் கொண்டால், முக்கால் வாசித் தூரம் போனபின், பெட்ரோலுக்குத் திண்டாட வேண்டியதுதான்! இல்லையெனில் டிக்கியில் கேனில் பெட்ரோல் கொண்டு போக வேண்டும். இது ரிஸ்க் இல்லையா?'' என்று கேட்டார் பிச்சை.

லாரி டிரைவர் கண்ணப்பன் குறிப்பிட்ட பிரச்னையும் நியாயமானதுதான். ''லோடு ஏற்றிய லாரிகள் வழக்கமாக இரவு ஒன்பது மணிக்கு மேல்தான் டாங்க் நிறைய டீசல் பிடித்துக் கொண்டு புறப்பட்டுச் செல்லும். ஆனால் இனி காலை ஏழு மணி முதல் இரவு ஏழு மணி வரையே பங்க்குகள் திறந்திருக்கும் என்கிற நிலை எங்களுக்கு ஓய்வு நேரத்தைக் குறைத்து விடுகிறது'' என்றார். எட்டு மணிக்கு டியூட்டிக்குச் சென்றவர்கள் இனி





• வங்கி அதிகாரி விஸ்வநாதன்

ஐந்து அல்லது ஆறு மணிக்கே போக வேண்டும்.

''ஜனத்தொகைப் பெருக்கத்துக்கு ஏற்ப, பொருளாதார வளர்ச்சிக்கேற்ப வாகனங்கள் பெருகவே செய்யும். அது காலத்தின் கட்டாயம். வாகனங்கள் அதிகரித்தால், பெட்ரோல் உபயோகமும் அதிகரிக்கத்தானே வேண்டும்! புதிய புதிய மாடல்களில் இரண்டு சக்கர வாகனங்கள் நிறைய வந்துவிட்டன. போதாக்குறைக்கு மோபெட்கள் வேறு. அரசாங்கம், சகட்டு மேனிக்கு, இரண்டு சக்கர வாகனங்களை உற்பத்தி செய்ய லைசென்ஸ் அளித்துவிட்டு, இப்போது, 'ஐயோ! பெட்ரோலிய இறக்குமதியால் பல கோடி அந்நியச் செலாவணி பாழாகிறதே!' எனப் புலம்புகிறது. இதில் நியாயமே இல்லை. பெட்ரோல் செலவைக் குறைக்கவேண்டுமென்றால் அப்புறம் வாகன உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கு என்ன வேலை? தொழில் வளம் நசிந்து போகாதா? வேண்டுமானால் ஒன்று செய்யலாம்... பெட்ரோல் சிக்கனத்துக்குப் பேருதவி புரியும் மோபெட்களுக்கு, விலை குறைப்பு, வரிச் சலுகை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டால் ஓரளவு நல்ல பலன் இருக்கும்'' என்கிறார் வங்கி அதிகாரியான விஸ்வநாதன்.

பெட்ரோல் பங்க் அடைப்பு எத்தனை மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதற்கு, பெசன்ட் நகரைச் சேர்ந்த கிருஷ்ணகுமார் கூறும் சம்பவம் ஒரு நல்ல உதாரணம். ''போன ஞாயிற்றுக் கிழமை அவசரமாகத் திருவல்லிக்கேணி போக வேண்டியிருந்தது. ஓர் ஆட்டோவை நிறுத்திய போது, 'இன்றைக்குப் பெட்ரோல் பங்க் லீவு; மொத்தமாக இருபத்தஞ்சு ரூபாய் கொடுத்திடுங்க' என்றார் டிரைவர். வேறு வழியில்லாமல் கொடுத்து அழுதேன்!'' என்கிறார். இதுமட்டுமல்ல; ''பெட்ரோல் பங்க்குகளிலேயே ஞாயிறு மற்றும் இரவு நேரங்களில் கள்ள மார்க்கெட்டில் பெட்ரோல்

விற்பனை செய்வதற்கு நிறைய வாய்ப்புக்கள் உண்டு'' என்று மந்தைவெளியிலுள்ள பெட்ரோல்விற்பனையாளர் ஒருவரே ஒப்புக் கொள்கிறார்.

பெட்ரோல் செலவை இருபது சதவீதம் குறைக்க வேண்டும் என்று அரசாங்கம் கெடுபிடி பண்ணுகிறது. ஆயினும் அரசுத் துறைகளும், வாரியங்களும், பொதுத் துறை நிறுவனங்களும் இதை எவ்வளவு சீரியஸாய் எடுத்துக் கொண்டு செயல்படுத்தப் போகிறார்கள் என்பது பெரிய கேள்விக் குறிதான்.

இதுபற்றிக் கேட்ட போது, ''ஓர் அமைச்சர் விழா ஒன்றுக்கு வருகிறார் என்றால், அரசு அதிகாரிகள், கட்சிக்காரர்கள் மற்ற பிரமுகர்கள் என்று எத்தனை கார்கள்! இரண்டு அமைச்சர்கள் ஒரே இடத்திலிருந்து புறப்பட்டு, ஒரே இடத்துக்குப் போனாலும் கூட, தனித்தனிக் கார்களில்தான் போவார்கள். தப்பித் தவறி, இருவரும் ஒரே காரில் போனாலும் கூட இன்னொரு காரும் காலியாகக் கூடவேதான் வரும். இது வேஸ்ட்தானே? இதேபோல் வி. வி. ஐ. பிக்கள் விமான நிலையத்தில் வந்து இறங்கும் போது அல்லது புறப்படும் போது வரவேற்பு, வழியனுப்பு, செக்யூரிட்டி என்ற பெயர்களில் எத்தனை கார்கள், ஜீப்கள் சுற்றிச் சுற்றி வருகின்றன. இவையெல்லாம் வேஸ்ட் இல்லையா? அரசாங்கக் கார்கள்: பெட்ரோல் செலவை இருபது சதம் குறைக்க வேண்டுமென்பது இலட்சக்கணக்கில் முதலீடு செய்து வாங்கிய கார்களை, முழுமையாகப் பயன்படுத்தாத ஒரு நிலைக்குத்தான் வழி வகுக்குமே தவிர, அது சிக்கனத்துக்கு வழி செய்யாது. மாறாக, இருபது சதவீத அரசாங்கக் கார்களை விற்று விடுவதுதான் சிக்கனத்துக்குச் சரியான வழி. செய்வார்களா?'' என்று கேட்கிறார் ஓய்வு பெற்ற ஓர் அரசு அதிகாரி.

''சுமார் ஏழெட்டு ஆண்டுகள் வரை அரசு போக்குவரத்துக் கழகங்களில் ஓடிய பஸ்களைத்தான் சில தனியார்கள் வாங்கிப் பயன்படுத்துகிறார்கள். ஏழெட்டு ஆண்டு கால உழைப்பின் காரணமாக, அவை குறைந்த மைலேஜ்தான் கொடுக்கின்றன. இதனால் டீசல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். ஆனாலும் கூட ஆரம்ப முதலீடு குறைவு என்பதால் இந்தப் பழைய பஸ்கள் உபயோகத்தில்தான் இருக்கின்றன. அரசு இதற்கு என்ன செய்யப் போகிறது?'' என்று கேட்கிறார் கண்டக்டர் மோகன்தாஸ்.

எரிபொருள் சேமிப்பு, சிக்கனம் பற்றி மக்களுக்கு ஆழமாய் உணர்த்த வேண்டியது அவசியம்தான். ஒவ்வொருவரும் இதை உணர்ந்து செயல்பட்டால்தான் பலன் இருக்கும். அதைத்தான் செய்து வருகிறது 'பெட்ரோலிய சேமிப்பு ஆய்வுச் சங்கம்.' இந்த அரசாங்க அமைப்பு, பெட்ரோலியப் பொருட்களை – வீடுகளில், தொழிற்சாலைகளில் – சாலைகளில் திறமையாய் – சிக்கனமாய்ப் பயன்படுத்தும் முறைகள் பற்றி ஆராய்ச்சிகள் செய்து, வழி சொல்லிக் கொடுக்கிறது. ''இந்த அமைப்பின் முயற்சியால் ஆண்டுக்குச் சுமார் 250 கோடி பெறுமானமுள்ள பெட்ரோலியப் பொருட்கள் வீணாவது தடுக்கப்படுகிறது'' என்கிறார் இவ்வமைப்பின் சென்னைக் கிளையைச் சேர்ந்த இளநகை.

''நம் நாட்டில் உற்பத்தியாகும் எரிவாயுவில் சுமார் முப்பது சதவீதம் எடுக்கப்படும் இடத்திலேயே வீணாக எரிக்கப்படுகிறது. இதன் மதிப்பு சுமார் 1800 கோடி ரூபாய். ஆனால், சமீப கால ஆராய்ச்சிகள் மூலம், இந்த எரிவாயுவை, பெட்ரோல் – டீசலுக்குப் பதிலாக வாகனங்களை ஓட்டுவதற்குப் பயன்படுத்தலாம் என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. மேற்கத்திய நாடுகளில், இது போல, எரிவாயுவினால் சுமார் ஐந்து லட்சம் வாகனங்கள் ஓடுகின்றன. நம் நாட்டிலும், குஜராத் மாநில அரசு போக்குவரத்



அடுத்த இதழில்....

● சிதாரா:

திரையுலகில் ஒரு புது வசந்தம்

— அட்டைப்படப் பேட்டிக் கட்டுரை


வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



ஏனெனில், காம்ப்ளான், குழந்தைகளுக்கு அன்றாடம் தேவைப்படும் அத்யாவசிய ஊட்டச்சத்தை வழங்குகிறது.

குழந்தைகளின் வளர்ச்சிப் பருவம் சாதாரணமாக 15 அல்லது 16 வயதிலே நிறைவு பெறுகிறது. இந்த வளர்ச்சிக்கு அடிப்படையான ஊட்டச்சத்து, புரதமாகும். ஆகவே, உங்கள் குழந்தைகளுக்கு இப்போது காம்ப்ளான் மிகமிக அவசியம். புரதச் சத்துக்களிலேயே தலைசிறந்த பால்-புரதம் (20%) கொண்டது காம்ப்ளான். மேலும் 22 ஆதார உணவுச்சத்துக்களும் காம்ப்ளானில் உள்ளன.

குழந்தைகள் ஆசையோடு கேட்டு அருந்தும் சுவைகளில் கிடைக்கிறது காம்ப்ளான்.



23
மூலாதார
சத்துணவுகள்
திட்டமிட்ட விகிதங்களில்
பால் சேர்க்கத் தேவையில்லை

காம்ப்ளான்®

GX/62/203 TAM

திட்டமிட்ட பரிபூரண உணவு

துக் கழக பஸ்கள் சிலவற்றில் பரீட்சார்த்த ரீதியில் பயன்படுத்தி வெற்றி கிடைத்திருக்கிறது!'' என்கிறார் எண்ணெய் – நிலவாயு கமிஷனின் அதிகாரி ஒருவர்.

இதுபோலவே இன்னும் பல வழிகளில் பெட்ரோல் – டீசல் போன்றவற்றை மிச்சப்படுத்த முடியும். ''நிலக்கரி நம் நாட்டில் அதிகமாய்க் கிடைக்கும் ஒன்று. அதனை நாம் முழுமையாய்ப் பயன்படுத்திக் கொள்ளாமல், பெட்ரோலியத்தை நாடுவது விசனமளிக்கிற விஷயம். நவீனமயமாக்குகிறோம் என, நீராவி எஞ்ஜின்களையெல்லாம் டீசல் எஞ்ஜின்களாய் மாற்றியது அவசரப்பட்டு எடுத்த முடிவு'' என்கிறார் ஓர் அரசு அதிகாரி. மேல் நாடுகளில் தொழிலக, மின்நிலைய பாய்லர்கள் பலவற்றில் பெட்ரோலியம் எண்ணெய் பயன்படுத்தப்பட்ட நிலை மாறி மீண்டும் நிலக்கரிக்கே மவுசு அதிகரித்திருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

''சீனாவில் ஒரு லட்சம் குடும்பங்களுக்கு எண்பதாயிரம் குடும்பங்களில் சைக்கிள் இருக்கிறதாம். இங்கேயும், சைக்கிளின் உபயோகம் பெருக வேண்டும். அருகில் உள்ள இடங்களுக்காவது சைக்கிளில் செல்ல வேண்டும் என்று வைத்துக் கொள்ள வேண்டும். இதனால் உடலுக்கும் பயிற்சி. எரிபொருள் செலவும் மிச்சம்'' என்கிறார் கல்லூரி மாணவர் ரகுராம்.

இவை எல்லாவற்றைவிட இன்னொரு முக்கியமான விஷயம் உண்டு. அதுதான் மக்கள் தாங்களாகவே பெட்ரோலைச் சிக்கனமாகப் பயன்படுத்த முன்வருவது. ஜப்பான் போன்ற நாடுகளிலெல்லாம் ஞாயிறு போன்ற விடுமுறை தினங்களில் மக்கள் தங்கள் தேசத்தின் வளர்ச்சிக்காகத் தாங்களாகவே முன்வந்து கார்களையும் வாகனங்களையும் பயன்படுத்துவதில்லை. காரணம், தேசபக்தி. தேசம் நன்றாக இருந்தால்தான் நாம் நன்றாக இருக்க முடியும் என்று அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். அந்த உணர்வு நமக்கும் வர வேண்டும். அந்த உணர்வை நம் மக்களிடையே வளர்க்க, நமது தலைவர்கள்தான் முன்னுதாரணங்களாகத் திகழ வேண்டும். இவையெல்லாம் இல்லாமல் வெறும் சட்டங்களும், உத்தரவுகளும் மட்டுமே எதையும் சாதித்து விட முடியாது.

— எஸ். சந்திரமௌலி

அட்டை வண்ணப்படமும், படங்களும்: யோகா

இந்தியா ஏன் முன்னேறவில்லை?



அயல் நாட்டிலிருந்து வந்த ஒருவருடைய டாக்ஸி ஒரு கிராமம் வழியே செல்லும் போது ஒரு கோழியை அடித்து விட்டது. உடனே ஏகக் கூட்டம் கூடி ஆளுக்கு ஒன்றாகப் பேச ஆரம்பித்தார்கள்.

கோழியின் சொந்தக்காரர் முந்நூறு ரூபாய் தந்தால் கார் மேலே செல்ல அனுமதிப்பதாகக் கூறினார். அந்த அயல்நாட்டவர் அவ்வாறே செய்தார். பயணம் தொடரும் போது டாக்ஸி டிரைவர் கேட்டார்: ''முப்பது ரூபாய் பெறுமானமுள்ள கோழிக்கு முந்நூறு ரூபாய் தந்து விட்டீர்களே?

அயல்நாட்டவர் சொன்னார்: ''நான் கொடுத்தது கோழிக்காக அல்ல; இந்தியா ஏன் முன்னேறவில்லை என்ற உண்மைக் காரணத்தை இந்த மக்கள் எனக்கு உணர்த்தி விட்டார்கள். ஒரு கோழிக்காக இத்தனை பேர் நேரத்தை வீணடித்துக் கொண்டு வாக்குவாதம் பண்ணுகிறார்கள் என்றால் அந்த அளவுக்கு வேலையின்றிச் சோம்பியிருக்கிறார்கள் என்று அர்த்தம். இந்த அடிப்படையில் இந்தியா ஏன் முன்னேறவில்லை என்று புத்தகம் எழுதி நான் மூன்று லட்சம் டாலர் சம்பாதித்து விடுவேன்!''

— வைரமுத்து கூறக் கேட்டவர்: எஸ். என். சுகுமாரன்

"அந்தக் காலத்து ராஜராஜன் விருது இந்தக் கால ராஜராஜனுக்கு!"



ராஜராஜன் விருது பெற்ற கலைஞருக்கு, அகில இந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஒரு பாராட்டு விழா நடத்தியது. இந்த மாதிரி விழாக்களில் பலர் அளவுக்கு மீறிப் புகழ்ந்து கொம்பு சீவி விடுவதும், சிலர் விஷயத்தோடு பேசுவதும் சகஜம்...

● "நான் இந்திரா காந்திக்கும் எம். ஜி. ஆருக்கும் பாலம் மாதிரி இருந்திருக்கிறேன். எம். ஜி. ஆரைக் காஞ்சிப் பெரியவரிடம் அழைத்துச் சென்றிருக்கிறேன். கலைஞரையும் காஞ்சிபுரத்துக்கு அழைத்துச் செல்ல விரும்புகிறேன். இந்த மாதிரி சந்திப்புக்களினால் நல்லவை நடக்கட்டும் என்பது தான் என் ஆசை."

— 'இதயம் பேசுகிறது' மணியன்.

● "நான் 1942 லேயே காஞ்சிபுரத்துக்குப் போயிருக்கிறேன். எனக்கும் ஒரு பெரியவர் அங்கே இருந்தார்."

— கலைஞர்

● "நம்முடைய படைபலத்தையோ — பலவீனத்தையோ விட, எதிராளியின் ஒற்றுமையின்மையைத்தான் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று 'தென்பாண்டிச் சிங்க'த்தில் வெள்ளை அதிகாரி சொல்லுகிறார். இது இன்றைக்கும் பொருந்துகிறது... தமிழில் அறிவியல் சொற்கள் எளிதாகப் புழக்கத்தில் வரக்கூடிய அளவுக்கு உருவாக, தமிழக அரசு உதவ வேண்டும். ஸ்ரீதேவியின் மூக்கு பற்றி எழுதி, லட்சக்கணக்கில் விற்பனை ஆகும் பத்திரிகைகள் இருக்கின்றன. இவை எப்போதாவது, தமிழில் அறிவியல் கட்டுரை வெளியிடாமல் போனால், அவற்றுக்கு மின்சார இணைப்பைப் பிடுங்கி விட வேண்டும்."

— எழுத்தாளர் 'சுஜாதா'

● "தென்பாண்டிச் சிங்கத்தில் எல்லாப் பெண் பாத்திரங்களையும் உயர்வாகப் படைத்திருக்கிறார் கலைஞர். தாம் ஒரு மேல் ஷாவனிஸ்ட் அல்ல என்று இதில் அவர் காண்பித்திருக்கிறார்.

— எழுத்தாளர் 'வாஸந்தி'

● "அந்தக் காலத்து ராஜராஜன் விருது, இந்தக் காலத்து ராஜராஜனுக்குக் கிடைத்திருக்கிறது; அவ்வளவுதான்."

— மீ. ப. சோமு.

● "கலைஞர், கம்பனுக்கும் ஒரு படி மேலே."

— டாக்டர். எஸ். நல்லபெருமாள்


● "ஒரு வண்டின் மீது சர்க்கரையைக் கொட்டி, அது நகரத் தத்தளித்துத் தடுமாறும் போது அதன் மீது தேனையும் ஊற்றினால் அந்த வண்டுக்கு எப்படி இருக்குமோ அப்படி இருந்தது எனக்கு... காலையில் எழுந்ததும், தேகப் பயிற்சிக்காக ஒரு நடை நடந்து விட்டு, 'முரசொலி'க்கோ, 'குங்கும'த்துக்கோ எழுதுவதுதான் எனக்கு டானிக் மாதிரி... ஒரு முதல்வரை அதிகாரிகள் பாராட்டுவார்கள்; ஒரு கட்சித் தலைவரைத் தொண்டர்கள் பாராட்டுவார்கள். ஆனால் எழுத்தாளர் சங்கம் தருகின்ற பாராட்டு ஒரு தாயின் மடியில் குழந்தை பெறும் சுகத்தைப் போன்றது... கடல் கடந்து, இலங்கையில் தமிழினம் குவியல் குவியலாக மடியும் போது இந்த விழா தேவைதானா என்று முதலில் யோசித்தேன். ஆனால் 'தென்பாண்டிச் சிங்கம்' மூலம் அதன் செய்தியை உணர்ந்தால் அதுவே ராஜராஜன் விருதுக்குக் கிடைத்த வெற்றி என்பதாக எடுத்துக் கொள்ளுவேன்! நான் கம்பனுக்கும் மேலே என்றார்கள். கம்பன் கடல்; நான் காவிரிப்பூம்பட்டினத்துக் காவிரி."

— ஏற்புரையில் கலைஞர்.

● மேடை முழுக்க ஜிகினா பளபளப்பு ஜொலித்தது. மேடைக்கு முன்னால் பச்சையும், சிவப்புமாக பிளாஸ்டிக் செடிகளைச் செயற்கையாக அடுக்கித் தள்ளியிருந்தார்கள். நாமகிரிப்பேட்டை கிருஷ்ணனின் நாதசுரம்தான் எல்லாரையும், விழா ஆரம்பமான ஒரு மணி வரை கட்டிப் போட்டு வைத்தது.

ஆமாம், கலைஞர் பாராட்டுப் பெறுகிறார், அவருக்குப் பொன்னாடை போர்த்த வேண்டியதுதான். இப்படியா எழுத்தாளர் சங்கத்துக்காரர்களே ஆளாளுக்குப் பொன்னாடை போர்த்திக் கொள்ளுவார்கள்!

— எஸ். வி. என்.



அகதிகள் பிரச்னை
டில்லி பேச்சு வார்த்தைகள்
டக்... டக்...
ஈழத் தமிழர்களையா தாக்குகிறோம்? விடுதலைப் புலிகளைத்தானே...
வெளுத்துக் கட்டுங்க, நாங்க கண்டுக்கப் போறதில்லை!
யாரு என்ன சொன்னாலும் சரி... உலகத்திலேயே அதிகமா சோப்பு பபுள் விட்டவன் நான்தான்னு 'கின்னஸ்'ல வரணும்... அதான் நம்ப லட்சியம்...!
கவலைப் படாதீங்க... 20% மின் வெட்டு பண்ணினாலும் அவ்வளவுதானே? பாரிஸ்ல 10 நாளைக்குப் பதிலா 8 நாளு... லண்டன்ல 20 நாளைக்குப் பதிலா 16 நாளு... நியூயார்க்குல ஒரு மாதத்துக்குப் பதிலா 24 நாளு...
அமைச்சர்கள் அதிகாரிகள்



கல்கி

1990 ஜூலை 15
மலர் : 48 இதழ் 50
பிரமோதூத ஆனி 31



கருணாநிதியின் உள்ளமும் ஜெயேந்திரரின் கருத்தும்

ராஜராஜன் பரிசு பெற்றதற்காக முதல்வர் கருணாநிதியைப் பாராட்ட அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்திய விழாவில், ஏற்புரையின் போது முதல்வர், ஒரு முக்கியமான நிகழ்ச்சியைக் குறிப்பிட்டிருக்கிறார். இன்றைக்கு அவர் வசிக்கின்ற கோபாலபுரம் வீட்டை 1956ல் அவர் வாங்க எண்ணிய போது அந்த வீட்டின் சொந்தக்காரரிடம் அந்த வட்டார மக்கள் ஒரு கோரிக்கையைச் சமர்ப்பித்தார்கள்: கருணாநிதிக்கு அந்த வீட்டை விற்கக் கூடாது. 'அப்படி விற்றால் அருகிலுள்ள கிருஷ்ணர் கோயிலுக்கு ஏதாவது சேதம் விளையலாம்' என்பது கோரிக்கையுடன் இணைந்து வந்த எச்சரிக்கை!

கிருஷ்ணன் கோயிலுக்குக் கருணாநிதியால் இல்லாவிட்டாலும் அவரைக் காண வருகிறவர்களால் ஏதேனும் சேதம் விளையலாம் என்று அவர்கள் பயந்ததில் வியப்பில்லை. இந்தக் கோரிக்கையையும் எச்சரிக்கையையும் பெற்ற வீட்டின் சொந்தக்காரர், கருணாநிதியை ஒரு நாள் தமது இல்லத்துக்கு விருந்தினராக அழைத்தார். அவருடன் சற்று நேரம் உரையாடிய பிறகு, ''உங்களைப் பார்த்தால் அப்படியொன்றும் கலாட்டா பண்ணுகிறவர் போல் தோன்றவில்லை. உங்களுக்கே என் வீட்டை விற்கிறேன்'' என்றார்.

''அன்று முதல் கடந்த முப்பத்து நாலு ஆண்டுகளாக அதே வீட்டில்தான் வசித்து வருகிறேன். கிருஷ்ணன் கோயிலுக்கு ஒரு சேதமும் உண்டாகவில்லை. மேலும் கோயில்கள் தொடர்பாக எனக்குக் கிடைக்கும் எந்தப் பரிசையும் நான் அந்தக் கோயிலுக்கே அளித்து வருகிறேன்'' என்று பேசியிருக்கிறார் முதல்வர்.

இதிலிருந்து நாம் சில முக்கியமான முடிவுகளுக்கு வர இயலும். (1) இறையுணர்வு பற்றிய முதல்வரின் தனிப்பட்ட கருத்து எத்தகையது ஆனாலும் அதனை அவர் பிறர் மீது திணிக்க விரும்பவில்லை. (2) முதல்வர் என்ற முறையில் மட்டுமின்றி, ஒரு கட்சித் தலைவர் என்ற அளவிலும்கூட அவர் ஆத்திக உள்ளங்களைப் புண்படுத்த விரும்பவில்லை. ஆத்திகர்களையும், நாத்திகர்களையும் சமநோக்கில் பார்க்கிறார். ஆத்திகர்களின் உரிமைகளில் தலையிடாமல் அரவணைத்துக் கொண்டு போக நினைப்பதுடன் அவர்களின் உணர்வுகளையும் மதிக்கிறார். (3) தமது சொந்தக் கருத்து எப்படியானாலும், முதல்வர் என்ற முறையில், திருக்கோயில்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை தமக்கு இருப்பதை உணர்ந்திருக்கிறார். (4) இந்தக் கடமை காரணமாகக் கோயிலுக்குப் போக நேர்வதையோ, அங்கே உள்ளன்போடும், இறையுணர்வோடும் தரப்படும் சன்மானங்களை ஏற்பதையோ அவர் தவறாகக் கருதவில்லை. (5) அந்தச் சன்மானங்களைத் தாமே வைத்துக் கொள்ளாமல் மீண்டும் இறைவனுக்கே — கோபாலபுரம் கோயிலுக்கே — அர்ப்பணிக்கிறார்.

முதல்வரின் உள்ளம் இவ்விஷயத்தில் எவ்வளவு உயர்வானது என்பது நமக்கு இப்போது நன்றாகப் புரிந்து போய்விட்டபடியால், சில நாட்களுக்கு முன் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கூறியுள்ள ஒரு கருத்தை அவர் பார்வைக்குக் கொண்டு வர நினைக்கிறோம். ஜெயேந்திரர் பின்வருமாறு கூறியிருக்கிறார்:

''கோயில்களில் உபரி வருமானம் இருப்பதாகப் பேசப்படுவது ஒரு மாயை. அப்படி ஏதும் கிடையாது. எனவே, உபரி வருமானத்தை அரசு தனது சமுதாயப் பணிகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளப் போவதாக அமைச்சர் கே. பி. கந்தசாமி கூறியிருப்பதை ஏற்பதற்கில்லை. உபரி வருமானம் உள்ள ஒவ்வொரு கோயிலுக்கும், ஒரு காலப் பூஜை கூட இன்றி இருளடைந்து கிடக்கும் நூறு கோயில்கள் இருக்கின்றன. எல்லாக் கோயில்களுமே அறநிலையப் பாதுகாப்புத் துறையின் கீழ்தான் வருகின்றன. எனவே ஒவ்வொன்றுக்கும் தனித் தனியே லாப நஷ்டக் கணக்குப் போட்டுப் பார்ப்பது சரியாகாது. மொத்தமாக ஒரே 'பட்ஜெட் — பாலன்ஸ்ஷீட்' போட்டுப் பார்த்தால் உண்டியல் வருவாயும் இதர வருமானங்களும் கோயில்களின் பராமரிப்புக்குப் போதவே போதாது; உபரி வருமானம் ஏதுமில்லை என்பது புரிந்து போகும். எனவே ஒரு கோயிலில் உள்ள உபரி வருமானம் இதர பல வருவாய் இல்லாத கோயில்களின் பராமரிப்புக்குத்தான் பயனாக வேண்டுமேயன்றி, அதனை ஏதோ வரிப்பணம் போல் கருதி, அரசு தனது பல்வேறு சமுதாய நலப் பணிகளுக்குப் பயன்படுத்தலாகாது. எம். ஜி. ஆர். காலத்தில் வருவாய் இல்லாத கோயில்களைப் புதுப்பிக்கவும், குறைந்தபட்சப் பூஜைகளையேனும் நடத்தவும், அர்ச்சகர்களுக்கும் கோயில் ஊழியர்களுக்கும் சம்பளம் தரவும் மூன்று நிதிகள் உருவாக்கப்பட்டன. அந்த நிதிகள் சரியான முறையில் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கவனிப்பதுடன் அவற்றை மேலும் விருத்தி செய்யவும் வேண்டும்.''

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

சிவகாமியின் சபதம்—சில அதிசயத் தகவல்கள்

00 சிவகாமியின் சபதத்தை அமரர் கல்கி முதலில் நாடக உருவில் திருச்சி நிலைய அகில இந்திய ரேடியோவுக்காகத்தான் எழுதினார். 21.5.41ல் ஒலிபரப்பாயிற்று. அதில் நாகநந்தி என்ற கதாபாத்திரமே கிடையாது!

00 அதற்கு நாவல் உருத் தந்து தொடர் கதையாக வெளியிடலாம் என்று யோசித்தார் கல்கி. இது மிக உன்னதமான நாவலாக அமையக்கூடும் என்பதை உணர்ந்தார். தாம் முதன் முதலாக எழுதப் போகும் சரித்திர நாவலாக இது இருக்க வேண்டாம்; சரித்திர நாவல் எழுதி அனுபவம் பெற்ற பிறகு இதனை எழுதலாம் என்று தீர்மானித்தார். அதனால் நாடகப் பிரதியை அப்படியே மேஜை இழுப்பறைக்குள் வைத்து விட்டு 'பார்த்திபன் கனவு' எழுத ஆரம்பித்தார். பார்த்திபன் கனவு எழுதி வரும்போதெல்லாம் சிவகாமியின் சபதம் அவர் மனத் திரையில் ஒரு திரைப்படம் போல உருப் பெற்று வந்தது. அதனால்தான் பார்த்திபன் கனவில் (அது முன்னதாக எழுதப்பட்ட போதிலும் கூட) சிவகாமி — மாமல்லன் காதல் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. பன்னிரண்டு வருஷ காலம் சிவகாமியின் சபதம் கல்கியின் இதயத்தில் மட்டுமே இருந்தது.

00 சிவகாமியின் சபதம் இரண்டு முறை இரு வேறு குழுவினால் நாடகமாக அரங்கேற்றப்பட்டது. முதல் தடவை கிருபா அமெச்சூர்ஸ் ஏராளக் காட்சிகளை நடத்தி வசூல் தொகைகளை நற்பணிகளுக்கு உதவினர். இரண்டாவது தடவை டி. கே. எஸ். சகோதரர்கள் நாடகமாக அரங்கேற்றினார்கள். இந் நாடகம் டில்லி முதல் திருவனந்தபுரம் வரை பல ஊர்களில் பல நூறு முறை அரங்கேறி டி. கே. எஸ். சகோதரர்களுக்குப் பெரும் புகழ் ஈட்டித் தந்தது.

00 சிவகாமியின் சபதம் பின்னர் நாட்டிய நாடகமாகவும் அமைக்கப் பெற்று கலைமாமணி சந்திரகாந்தா குழுவினரால் நூற்றுக் கணக்கான முறை அரங்கேற்றப்பட்டது. பாடல்கள்: புத்தனேரி சுப்பிரமணியம்.

00 தமிழ் நாட்டின் மீதும் தமிழக மக்கள் மீதும் சிவகாமியின் சபதம் ஏற்படுத்தியுள்ள பாதிப்பு கொஞ்ச நஞ்சமல்ல. தமிழர்கள் தங்கள் தொன்மையான பண்பாடுகளையும், கலைகளையும் நன்கு புரிந்து கொண்டு பெருமைப்பட்டது சிவகாமியின் , சபதம் மூலமாகத்தான். அதற்குப் பின்தான் பெரு நகரங்களில் பேட்டைக்கொரு நாட்டியப் பள்ளி தோன்ற ஆரம்பித்தது. தாய்மார்கள் தங்கள் பெண் குழந்தைகள் பரத நாட்டியம் பயில வேண்டும் என்று ஆசைப்பட ஆரம்பித்தார்கள். மாமல்லபுரத்தின் அற்புதமான சிற்பங்களைப் பற்றித் தமிழக மக்கள் புரிந்து கொண்டு பெருமைப்படத் தொடங்கினார்கள். இன்றும் மாமல்லபுரம் செல்லும் யாரும் சிவகாமி பற்றி நினைக்காமலோ அல்லது பேசக் கேட்காமலோ இருக்க முடியாது.

00 இவ்வாறு நமது தெய்வீகக் கலைகளின் உன்னதச் சிறப்புக்களை நாவலுடன் பின்னிப் பின்னி கல்கி அவர்கள் எழுதக் காரணமாக இருந்தவர் ரசிகமணி டி. கே. சி. அவருடைய நட்பும் அவர் இறையுணர்வோடு இணைத்து இணைத்து இலக்கியத்தையும் இதர கலைகளையும் ரசித்த விதமும் கல்கி அவர்களைப் பண்படுத்தி, அவர் சிந்தனைகளுக்கு ஊக்கமளித்தன. குறிப்பாக அந்நாட்களில் அவர் ருக்மிணி தேவி, பால சரஸ்வதி, ஆகியோரின் பரத நாட்டிய நிகழ்ச்சிகளைப் பார்த்து அக் கலையில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

00 சரித்திர நாவல்களை இருந்த இடத்திலிருந்தே எழுதி விடுகிறவர் அல்ல கல்கி. சிவகாமியின் சபதம் எழுதும் போதும் அவர் காஞ்சி, மாமல்லபுரம் மட்டுமின்றி, அஜந்தா, எல்லோரா முதலிய பல இடங்களுக்கும் நேரில் சென்று வந்து அந்தப் பயண அனுபவங்களையும் தனி கட்டுரைகளாக எழுதினார்.


00 இந்த நாவலைத் திரைப்படமாக்க முதலில் எஸ். எஸ். வாசன் யோசித்தார். சந்திரலேகாவை எடுத்த அவர் கூட இதனைத் திரைப்படமாக்கத் தயங்கவே செய்தார். பின்னர் ஆர். எம். கிருஷ்ணசாமி முயற்சி மேற்கொண்டு கை விட்டார். அப்புறம் எம். ஜி. ஆர். படம் எடுப்பதாகத் திட்டமிட்டு, இருமுறை ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக் கொண்டாரேயன்றிப் படம் எடுக்கவேயில்லை! தற்போது கே. பாலசந்தர் இதனை டீ.வி. தொடராக்கத் திட்டமிட்டு வருகிறார்!

ஆதாரம்: பொன்னியின் புதல்வர்: "சுந்தா"



* பட்டுத்துரை

மாமண்டூர் மோட்டல்!



* வெளிச்சோடிப் போன நரசிம்ம விலாஸ்: பிஸினஸ் பாதிப்பு உண்டு.

சாப்பிட்ட பின், இலையை விட்டெறியும் பயணி ஒருவரிடம், ஒரு பணியாளர், "தயவு செய்து குப்பைகளைக் குப்பைத் தொட்டியில் போடுங்கள்" என்கிறார். பஸ்ஸை விட்டு இறங்கிக் குழந்தையை வெளியிலேயே சிறுநீர் கழிக்க வைக்கும் ஒரு தாயிடம், டாய்லெட்டை உபயோகிக்கும்படி சொல்கிறார் ஒரு பணியாளர். ஒரு பஸ் புறப்பட்டுச் சென்றதும், அந்த பஸ்ஸிலிருந்து பயணிகள் வெளியில் போட்ட குளிர்பான பாக்கெட்டுகள், சாப்பாட்டு இலைகள் போன்றவற்றைப் பெருக்கிச் சுத்தப்படுத்துகிறார்கள் இன்னும் சில பணியாளர்கள். "பதினைந்து பணியாளர்கள் பம்பரமாய் வேலை செய்தும் சமாளிக்க முடியவில்லை; நம் ஊர்ப் பயணிகளுக்குச் சுத்தம், சுகாதாரம் பற்றித் தெரியவே இல்லை" என்று வருத்தப்படுகிறார் ஓர் ஊழியர்.

திருச்சியைச் சேர்ந்த ஆர்க்கிடெக்ட் ஒருவரின் திட்டப்படி, சுமார் எழுபது லட்சம் ரூபாய்ச் செலவில் உருவாகியுள்ளது மாமண்டூரில் பயண வழி உணவகம். தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் இந்த "மோட்டல்", சுமார் இருநூறு பேர் அமர்ந்து சாப்பிட வசதியாக உள்ளது. காலை ஐந்தரை முதல் இரவு பதினோரு மணி வரை இயங்குகிறது. சென்னையை நோக்கிச் செல்லும் பெரியார் பஸ்களுக்காக ஒன்று, சென்னையிலிருந்து வரும் பெரியார் பஸ்களுக்காக ஒன்று, மற்ற போக்குவரத்துக் கழக பஸ்களுக்காக வேறொன்று, தனியார் வாகனங்களுக்காக மற்றொன்று என நான்கு பிளாட்ஃபாரங்கள். அமர இருக்கைகள், தண்ணீர் வசதி உள்ள டாய்லெட்டுகள் என்று ஒவ்வொன்றையும் திட்டமிட்டுச் செய்திருக்கிறார்கள். பிளாட்ஃபாரங்களின் நடுவே கொரியன் புல் கொண்டு உருவாகியுள்ள பூங்கா, மனசுக்கு ரம்மியமாக இருக்கிறது.

உணவகத்துக்கு மாதாந்திர குத்தகைத் தொகை ஒரு லட்சம் ரூபாய் என்று அறிந்த போது நம்புவது சிரமமாகத்தான் இருந்தது.

விசாரித்த போது, பயணிகளுக்கு வசதியாய் இருந்தாலும் உணவகக் குத்தகை எடுத்தவர்களுக்குச் சில பிரச்னைகள் இருப்பதாகத் தெரிகிறது. உணவகத்துக்கு ஸ்டோர் ரூம் வசதி இல்லை. அதனால் உணவக வராந்தாவிலேயே காய்கறிகளும், மளிகைச் சாமான் மூட்டை



* வராந்தாவில் காய்கறி மளிகை சாமான்கள்.



களும் வைக்கப்பட்டுள்ளன. உணவகத்தில் வேலை செய்யும் சுமார் நூறு தொழிலாளர்களுக்குத் தங்க இடவசதி இல்லை. மரத்தடியிலும், பிளாட்பாரத்திலும்தான் படுத்துக் கொள்கிறார்கள். இவற்றோடு இன்னொரு நாசூக்கான அதே சமயத்தில் சிக்கலான பிரச்னையும் இருப்பதாகத் தெரிய வந்தது.

வழக்கமாக, இதுபோன்ற வழித்தட ஓட்டல்களில் பஸ்களின் கண்டக்டர் — டிரைவர்களுக்கு உணவு இலவசம் என்பது பகிரங்கமான ரகசியம். பஸ்ஸை, தங்கள் ஓட்டல் அருகே நிறுத்த வைக்க ஓட்டல்காரர்கள் கையாளும் தந்திரம் அது. அவர்களுக்கு இலவசமாய்த் தருவதை, அந்த பஸ் பயணிகள் சாப்பிடும் ஐட்டங்களில் விலையை அதிகப்படுத்திச் சரிக்கட்டி விடுவார்கள் ஓட்டல்காரர்கள்.

இந்தப் புதிய உணவகத்திலும் டிரைவர், கண்டக்டர்களுக்கு இலவசமாகத்தான் போடுகிறார்கள். ஒரு நாளைக்குச் சுமார் ஐநூறு பஸ்கள் வந்து போவதாய் வைத்துக் கொண்டால் கூட ஐந்நூறு டிரைவர்கள், ஐந்நூறு கண்டக்டர்கள்! இவர்கள் குறைந்த பட்சம் ஆளுக்குச் சுமார் ஐந்து ரூபாய்க்குச் சாப்பிட்டால் கூட ஒரு நாளைக்கு ஐயாயிரம் ரூபாய் ஆகிறது. மாதத்துக்குச் சுமார் ஒன்றரை லட்சம் ரூபாய்! இது உணவக நிர்வாகத்துக்கு அதிகப்படியான செலவுதானே! நிர்வாகத்தினரிடம் காண்ட்ராக்டர்கள் இது பற்றிக் கேட்ட போது, ''நாங்களா இலவசமாகக் கொடுக்கச் சொல்கிறோம்?'' என்கிறார்களாம். ஆனால் இலவசமாகத் தரவில்லையெனில் கண்ட்ராக்டருக்கு வாடிக்கை போய் விடும், நிச்சயம்.

ஒரு லட்சம் ரூபாய் வாடகை. ஒன்றரை லட்சம் ரூபாய்க்கு இலவச உணவு. இத்தனையும், அங்கே சாப்பிடும் பயணிகள் தலையில்தானே கட்டப்படும்!

இந்த மோட்டலைப் பார்த்துப் பாராட்டும் ஒவ்வொருவரும் தவறாமல் எழுப்பும் ஒரு சந்தேகம்! ''இன்னும் எத்தனை நாட்களுக்கு இதே போலப் பராமரிப்பார்கள்'' என்பதுதான். ''எல்லாம் புது ஜோர்!'' என்கிறார்கள். இதற்கு பெரியார் நிர்வாகத்தினர், ''இதே போல் தொடர்ந்து பராமரிப்போம். ஆனால் அதற்கு மிகவும் அவசியமானது பொது மக்களின் ஒத்துழைப்பு!'' என்கிறார்கள்.

இந்தப் பயண வழி உணவகம் திறக்கப்படும் முன்பு, அத்தனை பஸ்களும் மாமண்டூரில் உள்ள நரசிம்ம விலாஸ் ஓட்டலில்தான் சாப்பாட்டிற்கு நிறுத்தப்படும். அங்கே இப்போது பிசினஸ் பாதிக்கப்பட்டுள்ளதா? நரசிம்ம விலாஸின் உரிமையாளர் பட்டுத் துரையைச் சந்தித்தோம். அவர் சொன்னார்: ''55ம் வருடம் டூரிஸ்ட் பஸ்கள், கார்களை நம்பித்தான் நாங்கள் இந்த ஓட்டலை ஆரம்பித்தோம். அதன்பின் திருவள்ளுவர் பஸ்களையும் இங்கே சாப்பாட்டிற்காக நிறுத்த ஆரம்பித்தார்கள். தொடர்ந்து மற்ற பஸ்களும் நிற்க ஆரம்பித்தன. எங்கள் ஓட்டலில் காமராஜ், பெரியார், எம். ஜி. ஆர்., கலைஞர் மற்றும் பல சினிமா ஸ்டார்கள் என்று பல வி. ஐ. பி.க்களெல்லாம் சாப்பிட்டிருக்கிறார்கள்.

''டிரைவர்களுக்கும், கண்டக்டர்களுக்கும் சாப்பாடு, டிபன் எல்லாம் இலவசமாகவே கொடுக்க ஆரம்பித்தோம். நடு இரவில் ஊர்ப் போய்ச் சேரும் சில பஸ்களின் கண்டக்டர், டிரைவர்களுக்கு டிபன் பார்சலும் கொடுத்தனுப்புவோம்! பெரியார் பஸ் நிலைய மோட்டல் வருவதை நாங்கள் தடுக்க முயன்றோம் என்பது உண்மையில்லை. எங்களின் பிசினஸ் இப்போது கணிசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்பது உண்மைதான் என்றாலும் இந்த பிசினஸே எங்களுக்குப் போதுமானது என்று திருப்தியடைகிறோம்!''

கட்டுரை, படங்கள்: மௌஷ்மி

கவிதை பாடும் செய்திகள்!




● அப்போ கொடுத்த ராஜிநாமா,
டெலிபோன் ஒட்டுக் கேட்டதுக்கு.
இப்போ கொடுத்த ராஜிநாமா,
குல்தீப் சிங் ரிப்போர்ட்டுக்கு.
சும்மா இருக்காதீர்
சுப்பிரமணிய சுவாமி,
எம். எல். ஏ. பதவியை
இன்னும் வச்சிருக்கார் ஹெக்டே.



● ஜெ — தோஷம் விலகி
ஜெயகோஷம் போட்ட தினம்,
புலிங்க எல்லாம் வந்து
பொசுக்குனு பண்ணிட்டாங்க!



● பஞ்சகச்சம் வேட்டி கட்டி,
பதுங்காம வந்துப்புட்டு,
பத்திரிகைக்காரன் காரணம் கேட்டா,
பப்ளிக்கா ஜெயேந்திர சுவாமி
பழைய நாள் நண்பர்னு சொல்ல
பயமில்லே ஜார்ஜ் உமக்கு?



● இயற்கை வைத்திய இன்ஸ்டிட்யூட்டில்
இனி ஃப்ராக்சருக்கும் வைத்தியம்
உண்டு.
ஹெக்டே — தேவிலால் முறிவை
இங்கேதானே ஒட்ட முடிஞ்சது!



● எல்லா இலாகாவும் செலவை,
பத்து பர்செண்ட் குறைக்கணுமாம்.
எப்படின்னு முடிவு கட்ட
இருபது சதம் வீண் செலவு
எல்லாரும் செய்யணுமாம்!

— சாருகேசி


இரு வித அனுகூலங்களுடன் உங்கள் குழந்தையைப் பள்ளிக்கு அனுப்புங்கள் !




ருசி + ஊட்டச்சத்து கொண்ட பானி மிக்ஸ்.

ஆரோக்கிய வாழ்க்கைக்கு ஊட்டச்சத்து மிகுந்த உணவு தேவை. பானிமிக்ஸ் ஊட்டச்சத்து நிறைந்தது. எனவே உங்கள் குழந்தைக்கு இதனைத் தவறாமல் என்றும் கொடுங்கள். இதில் சுவையான ஆப்பிள்,மாம்பழம்,பேரீச்சை, திராட்சை, முந்திரியுடன், கோதுமை, அரிசி மற்றும் சோளமும் அடங்கியது. இவை அனைத்தும் குழந்தைக்குத் தேவையான கூடுதல் சத்தை அளிக்க வல்லது.

பானிமிக்ஸ் தயாரிக்க எளிது
சமைக்கத் தேவையில்லை.
தேவையான அளவை கிண்ணத்தில் போடவும். முன்னமே கொதிக்க வைத்த பாலைச் சேர்க்கவும். மிருதுவான பாரிட்ஜ் கிடைக்க மெதுவாக கலக்கவும்.





GL/3/89-R-TAM

கட்டை விரல்

சிவகாமி தண்ணீர்க் குடத்தோடு வீட்டுக்குள் நுழைந்தாள். நுழைந்தவுடனேயே வித்தியாசமாக ஏதோ தென்பட்டது போலிருந்தது.

உள் அறையில் கட்டிலில் யாரோ படுத்திருப்பது போலிருந்தது. வெளிச்சத்திலிருந்து இருட்டுக்குள் நுழைந்தவளுக்கு முதலில் சரியாகத் தெரியவில்லை. கட்டிலில் யார் படுத்திருப்பது? கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தாள். பிம்பம் தெளிவாயிற்று.

அது கணவன்தான். ராகவன்தான்.

வேலைக்குப் போனவன் தினமும் மாலை ஐந்து மணிக்குத்தான் வீடு திரும்பும் வழக்கம் கொண்டவன். காலை பதினோரு மணிக்கே ஏன் வீடு திரும்பினான். உடல்நிலை சரியில்லையோ... ஏன் என்னாயிற்று? பதற்றத்தோடு அறைக்குள் நுழைந்தவளுக்கு அவன் முனகல் கலவரத்தைத் தூண்டிற்று.

குப்புறப்படுத்தபடி அவன் முனகிக் கொண்டிருந்தான். தொட்டு உலுக்கத் திரும்பினவனின் கை பார்த்துக் குபீரென அதிர்ந்தாள்.

விரல்... வலது கையின் கட்டை விரலில் பாண்டேஜ் போட்டிருந்தது. ரத்தம் அதையும் மீறி வெளியே கசிந்து நின்றது.

''ஐயோ... என்னங்க ஆச்சு?''

அவன் லேசாய்க் கண் விழித்தான். உதடு பசையாய் ஒட்டிக் கிடந்தது. நாக்கால் உதட்டைத் துடைத்தான்.

''ஒண்ணுமில்லே சிவகாமி. லேசா அடி.''

''ரத்தம் இப்படிக் கொப்பளிச்சு நிக்கிது. லேசா அடிங்கறீங்க?''

அவன் மௌனமாயிருந்தான்.

''சொல்லுங்க. என்னாச்சு?'' பதற்றப் பட்டாள்.

''கவனமாத்தான் வேலை செஞ்சுகிட்டிருந்தேன். என்னாச்சுன்னு தெரியலே. லேசா தலை சுத்தற மாதிரியிருந்திச்சு. மெஷின் மேலே இருந்த கை விசுக்குன்னு கீழே இறங்குச்சு. பசுர்னு ஒரு அடி... கட்டை விரல்ல. அவ்வளவுதான் தெரியும். மயக்கம் போட்டு விழுந்துட்டேன். எழுந்து பார்த்தப்பக் கட்டை விரல்ல பாதி...'' அவனால் மேற்கொண்டு சொல்ல முடியவில்லை. கண்களில் நீர் கோத்துக் கொண்டது.

''இங்கே எப்படி வந்தீங்க?''

''கம்பெனியிலிருந்து ஆஸ்பத்திரிக்கு ஆளுங்க கூட்டிட்டுப் போனாங்க. கட்டுப் போட்டு ஆட்டோவிலே கொண்டாந்து வீட்டுல விட்டுட்டுப் போனாங்க!''

தெய்வமே! அவள் மனசு குமுறியது. அவனுக்கு என்ன சொல்வது என்று தெரியாமல் உடல் நடுங்கினாள். வியர்த்திருந்த நெஞ்சைத் தன் புடைவைத் தலைப்பால் துடைத்து விட்டாள். அடிபட்ட ஒரு கையை ஆதரவாய்ப் பற்றினாள்.

அவன் தாகம் என்று சொல்ல, சமையலறைக்கு ஓடியவள் அரக்கப் பறக்கத் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். அடுத்த வீட்டுக்கு ஓடிப் போய் விசிறி வாங்கி வந்தாள். அவன் தலையைத் தன் மடி மேல் வைத்துக் கொண்டு விசிறி விட்டாள். ''இப்ப வலி எப்படியிருக்கு?'' என்றாள்.

அவன் குளிர்காற்றுப் பட மெல்லக் கண் அயர்ந்தான்.

அந்தத் தூக்கத்தின் இடையேயும் வலி பொறுக்காமல் அவன் லேசாக முனகுவதைக் கண்டதும் அவள் கண்கள் கலங்கின. துக்கத்தில் அழுகை வரும் போலிருந்தது. அழுதால் அவன் எழுந்து விடக் கூடுமே என்பதற்காய்ப் பல் கடித்து அழுகையை நிறுத்தினாள். அழுகை தன் சோகம் தாளாமல் கண்ணீராய் வடியத் தொடங்கிற்று.

ராகவனைப் பற்றிச் சிவகாமிக்குத் தெளிவாகவே தெரியும். எதிலும் அவசரப்படாதவன். பதற்றம் கொள்ளாதவன். அடுத்தவருக்குத் துன்பம் என்றால் அது தன்னுடையது போல் பாவித்து வழி சொல்பவன். வானம் லேசாய் இருட்டினால் கூடக் குடை கொண்டு போவான், மழையில் நனைந்து விடக் கூடாதே என்று. எதிலும் சர்வ முன் ஜாக்கிரதையாய் இருப்பவன்... பதினைந்து வருடங்கள் வேலை செய்தும் ஓர் அடிபடாதவன் இப்போது மட்டும்...

அவளால் ஜீரணிக்க இயலவில்லை. அடிபட்ட அந்தக் கட்டை விரலையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. கல்யாணத்தன்று தாலி கட்டியவுடன் பொட்டு வைக்கச் சொல்லிக் குங்குமச் சிமிழை நீட்டிய போது, இந்தக் கட்டை விரலால்தான் திலகம் இட்டான். நெற்றியில் அவனால் அவள் உணர்ந்த முதல் ஸ்பரிசம், இந்தக் கட்டை விரலால்தான்.

ரூசன்



ராகவனுக்குச் சாப்பிடும் போது ஒரு பழக்கம் உண்டு. அவன் தட்டில் இருக்கும் சாதத்தில் ஒரு கைப்பிடியை உருண்டையாக உருட்டித் தனியே வைத்து விடுவான். அது சிவகாமிக்கு. அப்படி அவன் உருட்டி வைக்கும் சாதத்திற்கு உருக் கொடுப்பதே இந்தக் கட்டை விரல்தான்! உள்ளங்கையில் சோறு அள்ளி, அதை நான்கு விரல்களால் மெல்ல அழுத்துவான். விரல் இடுக்கில் சிதறும் சோற்றுப் பருக்கைகளைக் கட்டை விரலால் மீண்டும் தள்ளித் தள்ளி உள்ளங்கைக்குக் கொண்டு வருவான்.

அந்த சோற்றுப் பருக்கைகளை நான்கு விரல்கள் மீண்டும் அழுத்தும். விரலின் அழுத்தம் கொண்டு, சாதம் லேசாய்க் குழையும். குழைந்த சாதத்தை அதன் பக்கங்களில் தட்டித் தட்டி உருண்டையும் அல்லாது செவ்வகமும் அல்லாது அது ஒரு மாதிரி வடிவத்தில் கொண்டு வருவதற்கு அந்தக் கட்டை விரல்தான் உதவும்.

சிவகாமி கணவனுக்குச் சாப்பாடு போட்டு விட்டு, அவன் உருண்டை பிடிக்கும் அழகை நின்று ரசிப்பாள். அது அவளுக்கு ஒரு தினசரிப் பொழுதுபோக்கு.

அவளுக்குச் சந்தோஷம் அதிகமானால் அந்தக் கட்டை விரலைப் பிடித்து நறுக்கென்று கடித்து வைத்து விடுவாள். கடிப்பதும் கிள்ளுவதுமாய் அவர்களின் பல பொழுதுகளை அர்த்தமுள்ளதாக்கியதே அந்தக் கட்டை விரல்தான். ஆனால் அது இப்போது....

அவளுக்கு எதுவும் நினைக்கத் தோன்றவில்லை. எல்லா நினைவுகளும் அப்படி அப்படியே ஸ்தம்பித்து நின்றால் தேவலை போலிருந்தது. அப்படியிருக்க நினைத்து, மனத்தை வேறு நிலைக்குக் கொண்டு போன போதுதான் வெளிக்கதவு தட்டப் பட்டது. திறந்தாள்.

யூனியன் லீடர் தன் சகாக்களோடு உள்ளே நுழைந்தார். சம்பிரதாயமாய்ப் பேசினார். போகும் போது ஒரு கட்டைக் கொடுத்தார்.

''ஒண்ணும் கவலைப்படாதே ராகவா. இந்த ஐந்நூறு ரூபாயைத் தற்காலிகத்துக்கு வெச்சுக்க. நஷ்ட ஈட்டுப் பணத்தை நிர்வாகத்துகிட்டே பேசிச் சீக்கிரமாக் கிடைக்க ஏற்பாடு பண்றேன்.''

அவர் போனதும் சிவகாமி சொன்னாள்...

''தெய்வாதீனம்தான் இது. நேத்தே ஸ்கூலுக்கு பீஸ் கட்டவேண்ணு ரெண்டு குழந்தைகளையும் வீட்டுக்குத் துரத்திடு வேன்னாங்க. இந்தப் பணத்திலே பீஸ் கட்டிடலாம்; புத்தகங்களும் வாங்கிடலாம். நஷ்டஈடு எவ்வளவு கிடைக்கும்?''

''ஆறோ ஏழோ கிடைக்கும்...''

அது கிடைத்தால் முதலில் ஐந்து மாத வாடகை பாக்கியைத் தீர்க்க வேண்டும். பேங்கிலிருந்து அடகு வைத்த தாலியை மீட்க வேண்டும். அப்புறம் நல்லதாய் இவருக்கு ஒரு சைக்கிள். பாவம் எத்தனை நாள்தான் நான்கு மைல் நடந்தே போவார்...

சிவகாமி யோசிக்கத் தொடங்கினாள். ஒரு கணம் அவள் நினைவிலிருந்து அந்தக் கட்டை விரல் மறைந்து போயிற்று!

'அன்னவாசல்' என்று சாலையில் பெரிதாக நடப்பட்டிருந்த பெயர்ப் பலகையைச் சிங்காரத்தின் மாட்டு வண்டி மெது வாகக் கடந்தது.

''என்னா மரிகப்புள்ளே கம்னு வர்றே?'' என்று கேட்டான் சிங்காரம்.

கௌதம் ''ம்ம்ம்'' என்று மட்டும் பதில் கொடுத்தான். மனம் சிங்காரம் சொன்ன தகவலில் உழன்றது.

இன்ஸ்பெக்டரும் துளசிங்கமும் நண்பர்கள்! சிங்காரம் சொன்ன தொனியில் துளசிங்கம் அடிக்கிற கொள்ளையில் இன்ஸ்பெக்டரும் கூட்டு என்ற பொருள் தொக்கி நின்றது.

மணல்வெளி மான்கள்

27

கௌதம் அதை முழுக்க நம்பி விடவில்லை. சிங்காரத்திற்குக் காமாலைப் பார்வை. கொஞ்சம் யோசித்தால் மனிதர்களில் பல பேருக்கு நல்லதாக ஒன்றை ஏற்கவே பொறுக்காது.

ஒன்றைக் களங்கப்படுத்தி, சிதிலமாக்கிச் சோபை குன்றச் செய்து பார்ப்பதில் ஒரு சுவாரஸ்யம். இந்த வக்கரிப்பு எதற்கு? தனக்குள் தானே உணரும் குறைகளைச் சாந்தி செய்து கொள்ளவா?

இன்ஸ்பெக்டர் துளசிங்கத்திற்கு நண்பனாக இருப்பது வேறு; கூட்டாளியாவது வேறு.

கௌதம் அறிந்த இருதயராஜ் வேறு. அவரை சிங்காரத்துக்கு அறிமுகம் செய்விக்க வேண்டுமா? தேவையில்லை. நம்ப விரும்பாதவனுக்கு நம்பிக்கை ஒரு கேலிப் பொருள்.

யோசித்துக் கொண்டே வரும் போது பின்னாலிருந்து கண கணவென்று இடைவிடாது சைக்கிள் மணி ஒலிப்பது கேட்டது.

அவன் திரும்பினான். ஒரு சைக்கிள். தலைதெறிக்கிற வேகம். கையை ஆட்டியாட்டிச் சைக்கிள்காரன் என்னமோ கூவுவது மங்கலாகக் கேட்டது.

''வண்டியை நிறுத்து சிங்காரம்!''

''என்னா விஷயம்?''

''எவனோ சைக்கிள்லே பின்னால ஓடி வர்றான்.''

''மடியிலே பணம் கனக்குது மரிகப் புள்ளே.''

''நீ கவலைப்படாதே.''

சிங்காரம் மூக்கணாங்கயிற்றை இழுத்துப் பிடித்தான்.

பறந்தடித்து வந்த சைக்கிள்காரன் பிரேக் பிடித்து சக்கரக் காலில் காலூன்றி மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கி நின்றான்.

''வண்டி எங்க போவுது. விட்டலாவரம் தானே?''

சிங்காரம் கௌதமைப் பார்த்தான்.

''ஆமாம். என்ன விஷயம்?'' என்று குரல் உயர்த்திக் கேட்டான் கௌதம்.

''மாசிலா பொண்டாட்டி ரஞ்சிதம் பூச்சி மருந்து சாப்பிட்டுட்டா. கொஞ்சம் வண்டியைத் திருப்பி அவள ஆஸ்பத்திரிக்கு இட்டுனு போயிடணும்.''

பளிச்சென்று பிடரியில் அறைந்த மாதிரி இருந்தது கௌதமுக்கு.

சிங்காரத்துக்கும் நம்ப முடியவில்லை.

''யாரு யாரு?'' என்று மீண்டும் வலியுறுத்திக் கேட்டான்.

சைக்கிளில் வந்தவன் அதையே சொன்னான்.

''எப்போ சாப்பிட்டா?''

''ரெண்டு மணி நேரம் ஆயிருக்கும்.''

''என்னய்யா கதை வுடர்றே! தோ ரெண்டு நிமிசத்துக்கு முன்னாடி தொளசிங்கம் மோட்டார் சைக்கிள்லே பூந்துறைக்குப் போனாரே.''

''ஐயோ அவருக்குக்கூடத் தெரியாதுங்க. தகராறே அவங்க ரெண்டு பேருக்கும் மத்தியிலேதான். அதனாலதான் ரகசியமா அவ பூச்சி மருந்தைக் குடிச்சிட்டா.''

கௌதம், ''வண்டியைத் திருப்பு சிங்காரம்'' என்றான்.

''இத பார் கௌதம், இதெல்லாம் பெரிய எடத்து வெவகாரம். ஆஸ்பத்திரிக்கு வண்டியிலே போட்டுக்கினு போனா ஒன்னை யார்ரா போட்டுன்னு போவச் சொன்னதுன்னு நாளைக்குக் கேள்வி வரும்.''

கௌதமுக்கு ஒருவேளை இது ஏதோ சதியோ என்ற சந்தேகம் தோன்றியது.

''ஏம்பா நெஜம்மாச் சொல்றியா?''

''யார்யா நீ சத்தியமாச் சொல்றேன்! இந்த விஷயத்திலே வேலை வெட்டியை விட்டுட்டு வெள்ளாடுவாங்களா?''

''அன்னவாசல்லே தொர்சாமி வண்டி இருக்கும். மயில்கண்ணு டிராக்டர் இருக்குது'' என்று சந்தேகமாகக் குறுக்கிட்டான் சிங்காரம்.

''அட நீ எவண்டா கோணப் புத்திக்காரன்! நீ வர்றியா இல்லே வேற வண்டியை இட்டாரணுமா? ஒரு உசுரு அங்கே இருத்துட்டிருங்குதுங்கறேன். இவன் என்னமோ சிபாரிசு பண்ணிட்டிருக்கானே...'' என்று சக்கரக் காலின் மேல் வைத்திருந்த காலை எடுத்துப் பெடல் மிதிக்க முற்பட்டான் சைக்கிள்காரன்.

''யோவ் யோவ் இருய்யா! நீ வண்டியைத்

வைரமுள்

திருப்பு சிங்காரம்.''

''நல்லா யோசனை பண்ணிச் சொல்லு.''

''யோசனையுமாச்சு... மண்ணாங்கட்டியு மாச்சு. நீ நகரு. கவுத்தை எங்கிட்டே வுடு'' என்று சீறிக் கொண்டு சிங்காரத்திடமிருந்து மூக்கணாங் கயிறு வாங்கப் போனான் கௌதம்.

அந்தப் பதைப்பின் பின்னணி நேர்மையே சிங்காரத்திற்கு சாட்டையடியாய் விழுந்தது.

''இரு கௌதம்! நானே ஓட்டறேன்'' என்று வண்டியை மடக்கி வண்டிப் பட்டடை மேல் எழுந்து நின்று சாட்டைக் கொம்பை வீசினான்.

மிரண்டடித்து மாடு தார்ச் சாலையில் பாய்ந்தது. கௌதமுக்கே மாட்டு வண்டி இவ்வளவு வேகம் ஓட முடியும் என்பது அன்றுதான் புலப்பட்டது.

ரஞ்சிதம் மயக்கமாயிருந்தாள். வாயி லிருந்து நொப்பும் நுரையும் வழிந்தது. கண்கள் அரைவாசி திறந்திருந்தன. அவள் சுய நினைவில் இல்லாத போது பாதி திறந்த அந்தக் கண்கள் பார்ப்பதற்கு விகாரமாக இருந்தன.

அவள் படுத்திருந்த கட்டிலில் மெத்தை யும் தலையணையும் வாந்தியால் சற்று நனைந்திருந்தன.

''கூட்டம் போடாதீங்கப்பா... வெலகி நில்லு... காத்து வரட்டும். யோவ்.. தலைப்பா ஒனக்குத்தான்யா சொல்றது.''

''எப்படி இப்பவே ஆஸ்பத்திரிக்கு எடுத் துட்டுப் போயிடலாமா... இல்லே தொள சிங்கம் ஐயா வர்றவரைக்கும் வெயிட் பண்ணலாமா?''

''இது 'வெயிட்' பண்ற வெவகாரமில்லே. அவருக்குத் தகவல் சொல்லி ஆள் அனுப் பிச்சுடுங்க.''

''இரு. இரு. டேய் பெரியவனே மட மடன்னு ஓடிப் போயி வண்டி மேலே கொஞ் சம் வைக்கோலை அள்ளிப் போடு. சின்னத் தம்பி ராத்திரி கரும்பாலையிலிருந்து வந்த தார்ப் பாயை மடிச்சு வண்டி மேலே போடு. ஓடு.''

''அதுக்கெல்லாம் நேரம் கிடையா துய்யா. தலைப்பக்கம் புடி...''

''அதுல என்னா நேரம் ஆவப் போது? ஓடுங்கடா சீக்கிரம்.. ஜல்தி.''

ஆணைகளும் கீழ்ப்படிதல்களும் அமளி



துமளிப்பட்டன. கௌதம் அந்த வீட்டிலிருந்து தூக்கி வரப்பட்ட அவள் உடலைச் சுற்றிக் கும்பலாகக் கூடிய கூட்டத்தைப் பார்த்தான்.

ஓர் உயிரின் மதிப்பு ஜுர வேகத்தோடு அங்கே உணரப்பட்டது புரிந்தது. இவர்களில் பலர் அவளால் அதிகாரம் செய்யப்பட்டவர்கள். அவளை உள்ளூரவும் வெளிப்படையாகவும் வெறுத்தவர்கள். இருப்பினும் எப்படியாவது இவள் உயிர் காப்பாற்றப்பட்டு விட வேண்டும் என்ற பதைப்பு இருப்பது புலப்பட்டது.

தார்ப் பாய் விரித்து அதன் மேல் வைக்கோல் பரப்பி அதற்கு மேல் ஒரு ஜமுக்காளம் விரித்த பின் ரஞ்சிதத்தின் உடலைக் கிடத்தினார்கள்.

''எங்கே ஆஸ்பத்திரிக்குதானே?''

''ஆமா.. டாக்டர் ஒருவேளை வீட்டிலே இருப்பாரோ என்னவோ. யார்கிட்டே யாவது ஒரு சைக்கிளைக் கொடுத்து இப்படி பூச்சி மருந்து சாப்பிட்ட கேஸ் ஒண்ணு வருதுன்னு தகவல் சொல்லி விடட்டா?''

''கரெக்டு... சின்னத் தம்பி நீ சைக்கிளை எடுத்துட்டு ஒரு மெறி மெறி. மாசிலான் பொண்டாட்டின்னு தகவல் சொல்லு... அவர் கண்டுக்குவாரு.''

இன்னும் இவளுக்கு மாசிலாவின் மனைவி என்ற விலாசம்தான். கௌதம் மனசில் ஒரு கைப்பு. கத்தி கீறியது போல் உறைத்த கைப்பு.

''நீயும் ஏறிக்கோ கௌதம்!'' சிங்காரம் குரல் கொடுத்தான்.

அந்த அழைப்பில் சிங்காரத்தின் அச்சம் புலப்பட்டது. இன்னும் அவன் மடியில் சீட்டுப் பணம். நாளை ரஞ்சிதத்தை வண்டியில் ஏற்றி வந்ததற்குத் துளசிங்கத்திடம் பதில் சொல்ல வேண்டும்.

வண்டியில் அவன் ஏறி உட்கார்ந்தான்.

மூக்கணாங்கயிற்றை நெகிழ்த்தி மாட்டின் முதுகைச் சிங்காரம் தட்டி விட்டான்.

வண்டிச் சக்கரத்தின் கடகடப்பை மீறி கௌதம் குரல் கொடுத்தான்.

''துளசிங்கம் வந்தா அவரை நேரா ஆஸ்பத்திரிக்கு அனுப்புங்க.''

- பின்னாலிருந்து ஏதோ பதில் மழுப்பலாக வந்தது. புரியவில்லை. ஒப்புதலாகத் தானிருக்கும்.

வண்டியில் கௌதமோடு நாலு பேர். பந்தயத்துக்கு வண்டியோட்டுபவன் போல் மாட்டை விரட்டினான் சிங்காரம்.

சேரிடைத் தெரு கடந்து மெயின் ரோடு சந்திக்கும் முனைக்கு சைக்கிள் எடுத்துக் கொண்டு முன்னெச்சரிக்கை தரப் போன சின்னத் தம்பி எதிர்த்து வந்தான்.

''என்னடா சங்கதி?''

''வண்டியை நேரா ஆஸ்பத்திரிக்கு ஓட்டுங்க.. சிங்காரம் அண்ணாத்தே.. ஜல்தி வுடு'' என்று கூவிக் கொண்டே அவன் சைக்கிளைத் திருப்பிக் கொண்டு வண்டியோடு இணை வேகமாக மிதித்து வந்தான்.

''டாக்டர் கைல சொன்னியா?''

சக்கர ஓசையை மீறிக் கொண்டு சிங்காரம் விசாரித்தான்.

''சொன்னேன்.. சொன்னேன்.. ஆஸ்பத்திரிலே மருந்து வசதி இல்லேன்னுட்டாரு. வேலூரிலேர்ந்து பெரிய ஆஸ்பத்திரி வேன் ஒண்ணு இன்னாமோ வேலையா வந்திருக்குதாம். நான் சீட்டுக் கொடுக்கறேன். அதிலே ஏத்தி அங்க கொண்டு போய்டுங்கன்னாரு.''

வழியில் இரண்டு முறை ரஞ்சிதம் வாந்தியெடுத்தாள்.

''வேலூர் போற வரிக்கும் தாங்குமா?'' என்றான் சிங்காரம்.

கௌதமுக்கு அவனை அறைய வேண்டும் போல் ஆத்திரம் வந்தது. அடக்கினான்.

''ஒண்ணும் பேசாதே... வண்டியை ஓட்டு.''

ஆஸ்பத்திரியை நெருங்கிய போது புளிய மர நிழலில் வேலூர் ஆஸ்பத்திரியின் வேன் நிற்பது தெரிந்தது.

டாக்டர் சாலையோரத்தில் நின்றிருந்தார்.

''வண்டியை நிறுத்து- டிரைவர் வேன் லைட்டைப் போடு.''

வேனுக்குள்ளிருந்த லைட் போடப்பட்டது. அதன் கதவு திறந்து டாக்டர் உள்ளே ஏறிப் பார்த்தார்.

''ரைட்.. அந்தம்மாவைப் பிடிச்சு உள்ளே தூக்கிட்டு வாங்க.''

வண்டியிலிருந்து நாலு பேரும் கீழே இறங்கினர்.

ஆளுக்கொரு கை பிடித்து ரஞ்சிதத்தைத் தூக்கிக் கொண்டு போய் உள்ளே படுக்க வைத்தனர்.

''கூட இத்தினி பேர் போக வேணாம். ரெண்டு ஆள் போதும்.''

''நான் வர்றேன்'' என்று இரண்டு அன்னவாசல்காரர்கள் முன்வந்தனர்.

''உங்கள்ள ஒருத்தர் போதும்! மிஸ்டர் கௌதம்... கொஞ்சம் விவரமான ஆளு கூடப் போனா நல்லது. நீங்க போக முடியுமா? ஐ வில் கிவ் யூ எ லெட்டர். கூட்டம் போடாதீங்கப்பா.. நகரு... அட வெளிச்சம் விடுய்யா.''

டாக்டர் படுக்க வைக்கப்பட்டிருந்த ரஞ்சிதத்தின் 'பல்ஸ்' பார்த்தார். கண்ணிமைகளைப் பிதுக்கிப் பார்த்தார். பிறகு ஸ்டெத் வைத்துப் பரிசோதித்தார்.

''கண்டிஷன் ஸீரியஸ்... என்ன கௌதம் நீங்க போறீங்களா?''

கௌதம் இதுவரை தான் அவருக்குப் பதிலளிக்காததை உணர்ந்தான்.

''ஓ எஸ் சார்.. நான் ரெடி.''

டாக்டர் தம் லெட்டர் பேடில் வேன்

டோர் மேல் கால் வைத்து அதையே மேஜையாக்கி விறுவிறுவென்று நாலைந்து வரிகள் கிறுக்கிக் காகிதத்தைக் கிழித்து அவனிடம் நீட்டினார்.

கௌதம் வேனுக்குள் ஓரமாக ஏறி உட்கார்ந்தான்.

''டிரைவர் பீ க்விக்.''

'இன்டென்ஸிவ் கேர் யூனிட்'டிற்கு வெளியே பெஞ்சில் அன்னவாசல்காரனும் கௌதமும் உட்கார்ந்திருந்தார்கள்.

இரவு மணி பதினொன்றரை.

கௌதமுக்கு அநியாயப் பசி. மத்தியானமே சரியாய்ச் சாப்பிடவில்லை என்று நினைவு வந்தது.

அன்னவாசல்காரன் தலையை அப்படியும் இப்படியும் திருப்பிக் கொண்டிருந்தான். அவனும் சாப்பிட்டானோ இல்லையோ?

''ஊ சாப்பிட்டு வர்றியா?''

''வேணாங்க.''

மரியாதைக்காக மறுக்கிறான்.

கௌதம் தன் சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்தான். பர்ஸ் இருந்தது.

''வா ரெண்டு பேரும் சாப்பிட்டுட்டு வருவோம். பத்து நிமிஷத்திலே திரும்பிடலாம்.''

தெரு முனையில் சப்பாத்தி சப்ஜியும் இட்லி வடகறியும் விற்றார்கள்.

''வயிறாரச் சாப்பிடு.''

அன்னவாசல்காரன் கூச்சத்தால் நெளிந்தான்.

கௌதமுக்கு அவனுக்குத் திருப்தியாக டிபன் வாங்கித் தரத் தோன்றியது.

சாப்பிட்டுக் கொண்டே கேட்டான்.

''ஆமா... எப்பிடி நடந்தது?''

''மத்தியானத்திலிருந்தே துளசிங்கம் ஐயாவுக்கும் இவளுக்கும் லடாய்ங்க. பூச்சி மருந்து இந்தம்மா இருக்கற ரூம்லேதான் இருக்கும். பொசுக்குனு குடிச்சிட்டு ரீது.''

''அவருக்குத் தெரியலே?''

''இதுதான் கதவை உள்ளே தாப்பா போட்டுக்கிச்சு. இப்பிடி அடிக்கடி நடக்கும். அந்த ஆந்திராக்காரி ஒருத்தி புச்சா வந்திறா. அவள இதுக்குப் புடிக்கலே. ஆந்திரா பார்டர்லே நெலம் வாங்கிருக்கேன் அங்க போயிடு... கமாமஸ் பாத்துக்கனு சொல்லி இருக்காரு. அதுலதான் தகராறு.''

கௌதம் மாசிலாவை நினைத்துக் கொண்டான். சிறிது நாட்கள் முன் கரும்பாலையில் இவன் அதட்டி வேலை வாங்கியது. கடைசியில் கிணற்றில் கோழி விழுந்தது.

நினைவுகள் எழுந்ததும் பசி ஆறி விட்டது. அவள் மீது வெறுப்பு வரவில்லை. இன்னதென்று வரையறுக்க முடியாத ஒரு வருத்தம் மனசில் கவிந்தது.

இவளை எவ்வளவு கேவலமாகத் துளசிங்கம் உபயோகிக்கத் தொடங்கி விட்டான்! இதற்கா இவள் ஆசைப்பட்டாள்? என்ன பரிதாபம்!

இவள் உயிர் பிழைத்தால் இவள் எதிர்காலம் என்ன? என்ற கேள்வி அவன் மனசில் எழுந்தது.

(தொடரும்)

ரெபரீ ஆக எத்தனை பாடு!

உலகின் மிகச் சிறந்த புட்பால் ரெபரீ என இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வாட்ரா பிரெஞ்சுக்காரர். அடிக்கடி நோய்வாய்ப்பட்டு அநேக மாதங்களைப் படுக்கையிலேயே கழித்தவர். அப்போது பத்திரிகைகள் மூலம் விளையாட்டில் குறிப்பாகக் கால் பந்தில் ஆர்வத்தை வளர்த்துக் கொண்டார். எட்டு வயது முதல் கால் பந்தாட்டப் போட்டிகளைக் காணச் சென்றார். பதினெட்டு வயதில் மிக அதிகமான மதிப்பெண்களுடன் ரெபரீ பரீக்ஷையில் தேறினார்.



டாக்டர் சர்டிபிகேட் இருந்தால்தான் ரெபரீ ஆக முடியும் என்ற நிலையில் டாக்டரை அணுகினார். அந்த டாக்டருக்குக் கால் பந்தாட்டம் பற்றி ஒன்றும் தெரியாது. கிரிக்கெட்டில் அம்பயர் போல ரெபரீ என்பவர் மைதானத்தின் நடுவில் நின்று கொண்டு தன்னைச் சுற்றி வளைய வருபவர்களைக் கவனிக்க வேண்டும். அவ்வளவுதானே என நினைத்து, வாட்ராவுக்கு மருத்துவ அனுமதி வழங்கிவிட்டார்!


இதன் பின்னர் அநேக வருடங்கள் பல தேகப் பயிற்சிகளையும் பல சிகிச்சைகளையும் மேற்கொண்டு உடல் உறுதியை வளர்த்துக் கொண்டார் வாட்ரா. என்றாலும் இன்று உலகத்தின் தலைசிறந்த ரெபரீ என அவர் மதிக்கப்படக் காரணமாக இருந்தது அந்த அப்பாவி டாக்டரின் சான்றிதழ்தான்!

— 'வாஹி'

தங்கப் பதக்கம் பெறத் தயாராகிறார்கள்!

உடலை ரப்பர் போல் வளைத்துத் தரையில் முன்னும் பின்னுமாக மின்னல் வேகத்தில் கரணங்கள் போட்டுக் காட்டிப் பார்ப்போரைப் பிரமிக்கச் செய்யும் வெளிநாட்டுப் பெண்களை, ஒலிம்பிக் போட்டிகளிலும், ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலும் நாம் பார்த்திருக்கிறோம். பெரிய நாடுகளான ரஷ்யாவும் சைனாவும் மாத்திரமல்ல; சின்ன நாடுகளான ருமேனியா, தென் கொரியா, பிலிப்பைன்ஸ் போன்றவையும் இந்த ஜிம்னாஸ்டிக்ஸ் போட்டிகளில் பதக்கங்களை அள்ளிக் குவிக்கின்றன. 'நம் நாட்டிலிருந்தும் யாராவது ஒருவர், குறைந்தபட்சம் வெண்கலப் பதக்கமாவது பெற மாட்டாரா?' என்று ஒவ்வொரு முறையும் நாம் எதிர்பார்த்து, ஏமாந்து போகிறோம்.

இந்த நிலை மாறுமா? ''கண்டிப்பாக மாறத்தான் போகிறது. இன்னும் சில வருடங்களில் சர்வதேச ஜிம்னாஸ்டிக்ஸ் போட்டிகளில் கலந்து கொண்டு நம் நாட்டுச் சிறுவர் சிறுமியர் தங்கப் பதக்கங்களை அள்ளிக் குவிக்கத்தான் போகின்றனர்!'' என்கிறார் தலைச்சேரியிலுள்ள ஜிம்னாஸ்டிக்ஸ் மையத்தின் மேற்பார்வையாளர் எம்.பி. சோமராஜன்.



கேரளாவின் வடக்குப் பகுதியில், அரபிக் கடலின் அரவணைப்பில் இருக்கும் சிறு நகரம் தலைச்சேரி. அங்குதான் இருக்கிறது 'சாய்' சென்டர். 'சாய்' என்பது **Sports Authority of India** என்பதன் சுருக்கம். இது ஓர் அரசு அமைப்பு. 1982ல் டெல்லியில் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடந்து முடிந்த பிறகு, ஜிம்னாஸ்டிக்ஸ், படகுப் போட்டி, அம்பு எய்தல் போன்ற விளையாட்டுக்களில் இந்தியா மிகவும் பின்தங்கி இருப்பதற்கான காரணங்களை ஆராய்ந்தார்கள்.

அதன் விளைவாக, நாட்டின் எந்த எந்தப் பகுதிகளில் காலங்காலமாக, இதுபோன்ற விளையாட்டுக்களை மக்கள் தங்கள் வாழ்க்கையோடு சேர்த்துக் கற்று வந்திருக்கிறார்கள் என்பதை ஆராய்ந்தனர். அந்தந்தப் பகுதிகளில் இது மாதிரி விளையாட்டுக்களில், ஈடுபட்டுள்ளோரைக் கண்டுபிடித்து, முறைப்படி பயிற்சி கொடுப்பதுதான் நமது வெற்றிக்கான சரியான வழி என்று தீர்மானிக்கப்பட்டது. இதற்கு 'ஸ்பெஷல் ஏரியா கேம்ஸ் திட்டம்' என்று பெயர். இதன்படி சர்க்கஸ் தொழிலுக்கும் ஜிம்னாஸ்டிக்ஸ் விளையாட்டுக்கும் தொடர்பு உண்டு என்பதால், சர்க்கஸ் தொழிலில் ஈடுபட்டோர் அதிகமாக உள்ள தலைச்சேரியில் ஜிம்னாஸ்டிக் சென்டர் ஆரம்பிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

இந்திரா காந்தி காலத்தில் இதற்கான பிள்ளையார் சுழி போடப்பட்டு, ராஜீவ் காலத்தில் திட்டங்கள் வேகமாகச் செயல்பட ஆரம்பித்தன. முன்னாள் அமைச்சர்களான பூட்டாசிங்கும், மார்கரட் ஆல்வாவும் இந்தத் திட்டத்தில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டார்கள். அதன் வெளிப்பாடாகத்தான் இன்று தலைச்சேரியில், இருபது லட்சம் செலவில், கம்பீரமாக எழுந்து நிற்கிறது ஸ்போர்ட்ஸ் அதாரிடியின் 'ஜிம்னாஸ்டிக்ஸ் சென்டர்.'

கட்டடத்தின் பின்புறம் அரபிக் கடலின் ஆரவாரம். ஜிம்னாஸ்டிக்ஸ் விளையாட்டில் பயிற்சி பெறுவதற்கான நவீன மெத்தை, பார் போன்றவையெல்லாம் இருபது லட்சம் செலவில் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. யாருக்குப் பயிற்சி கொடுக்கப் போகிறார்கள்? எப்படி திட்டம் செயல்படப் போகிறது? மேற்பார்வையாளர் எம்.பி. சோமராஜன் சொல்கிறார்....

''தலைச்சேரியிலும் அதனைச் சுற்றி



* ஜிம்னாஸ்டிக் சென்டர்.



* பயிற்சி பெறும் சிறுமியர்...

யுள்ள கிராமங்களிலும் சர்க்கஸ் தொழிலில் ஈடுபட்டுள்ளோரைத் தேடிக் கண்டுபிடித்து, அவர்கள் வீட்டுக் குழந்தைகளைச் சென்டரில் சேர்த்துப் பயிற்சி தர இருக்கிறோம். இப்போது முதல் கட்டமாக அறுபத்து நான்கு சிறுவர், சிறுமியரைத் தேர்வு செய்துள்ளோம். சிறுமிகள் ஆறு முதல் பத்து வயதுக்குள்ளும், சிறுவர்கள் ஏழு வயதிலிருந்து பன்னிரண்டு வயதுக்குள்ளும் இருப்பவர்கள். இவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து தர அரசு தீர்மானித்திருக்கிறது. பயிற்சியில் ஈடுபடும் போது அணியக் கூடிய உடைகள் முதற் கொண்டு அவர்களுக்கான மருத்துவ வசதி, படிப்பு வசதி என்று எல்லாவற்றையும் நாங்களே கவனித்துக் கொள்வோம். இவர்களுக்குப் பயிற்சி தருவதற்காக நம் நாட்டுப் பயிற்சியாளர்கள் தவிர ரஷ்யாவிலிருந்தும் பயிற்சியாளர்கள் வர இருக்கிறார்கள். இன்னும் ஐந்து வருடங்களுக்குள், இவர்கள் தேசிய, சர்வதேச அரங்குகளில் தங்கப் பதக்கங்களைத் தட்டிக் கொண்டு வரத் தயாராகி விடுவார்கள்'' என்றார் நம்பிக்கையுடன்.

அவரது நம்பிக்கையை உறுதிப்படுத்துவது போல் பேசுகிறார் திருமதி சாரதா. இவர் சர்க்கஸ் கம்பெனியொன்றில் கம்பி மேல் சைக்கிள் ஓட்டும் வேலை செய்பவர். ''நாங்கள் சர்க்கஸில் எத்தனைதான் ஆபத்து நிறைந்த சாகசங்கள் செய்தாலும் அவற்றுக்கெல்லாம் முழுமையான அங்கீகாரம் கிடைத்ததேயில்லை. நல்ல வேளையாக என் மகள் ரெஸ்னா அத் தொழிலுக்குப் போக அவசியமில்லாமல், ஜிம்னாஸ்டிக் சென்டரில் சேர்ந்திருக்கிறாள். நிச்சயம் என் மகளுக்குச் சிறப்பானதொரு எதிர்காலம் இருக்கிறது...!'' என்று பெருமிதத்தோடு சொல்கிறார் திருமதி. சாரதா.

— ப்ரியன்

வண்ணப்படங்கள் : உத்ரா

பரிசு

''ஒரு கிஃப்ட். நூத்தி முப்பது ரூபாய்க்கு ஒரு ஆர்கண்டி எடுக்க வக்கு இல்லாம இருக்கேன் மனோ.''

''முதல் கல்யாண நாளுக்குப் புடைவை, சட்டை எடுத்துத்தான் செலிபரேட் பண்ணணும்னு கிடையாது.''

''இல்லை மனோகரி. எனக்குச் சமாதானமாகவில்லை.''

''இன்னும் நம்ம கல்யாண நாளுக்கு நாலு நாள்தான் இருக்கு. அதுவரைக்கும் இப்படித்தான் இருக்கப் போறீங்களா?''

''எப்படி?''

''முகத்தை உம் என்று தூக்கி வைத்தபடி!''

அவன் சிரித்தான்.

''நாலு நாள்ல என்ன வேணுமான்னாலும் நடக்கலாம்!'' என்றாள்.

''ஸ்வாமி கூரையைப் பிச்சிண்டு லட்ச, லட்சமாக் கொட்டுங்கறியா?''

''ச்சே! டுமச். எனக்கு அது ஜாஸ்தி.''

''பின்னே என்ன வேணும்?''

''எனக்கு ஷிபான் ஸாரியும், உங்களுக்கு ஒரு விவால்டி ஷர்ட்டும் கொடுத்தாப் போதும்.''

''எனக்கு நம்பிக்கையில்லைம்மா!''

''எனக்கு இருக்குப்பா. நம்பிக்கை அவசியம் பாலு! போன வருஷம் எனக்கு நீ கிடைப்பே, உனக்கு நான் கிடைப்பேன்னு நிலை இருந்ததா? வீ பிலீவ்ட் அண்ட் வீ அச்சீவ்ட். இப்போ உனக்கு வேலை இல்லை. வேலை இல்லைன்னு கிடையாது. லாக்—அவுட். சம்பளம் வரலை. அவ்வளவு தானே? சம்பளம் இல்லைங்கறதுக்காக நீயோ நானோ வேற, வேறன்னு ஆயிடலியே? இன்னமும் நான் உன் பெட்டர் ஹாஃப். நீ என் மேல் அதாரிட்டி. அது மாறலியே? பீ சியர்ஃபுல் பாலு. சிரிச்சிண்டிருக்கறது ரொம்ப முக்கியமான விஷயம்.''

அவனால் சிரிக்க முடியவில்லை. இரண்டு மாதமாக மில் மூடிக்கிடக்கிறது. எட்டடி உயரத்தில் பந்தல் போட்டு ஆள் மாற்றி, ஆள் மாற்றி உண்ணாவிரதமும், தர்ணாவும் நடக்கிறது. இன்னும் மோசமானால் விஷயம் லேபர் கோர்ட்டுக்குப் போய் விடும். இதை விட மோசமாகும் என்கிறார்கள். யூனியன் லீடர் சம்பள விகிதத்தை மாற்றாத வரையில் ஸ்ட்ரைக்கை வாபஸ் பண்ண மாட்டேன் என்கிறான்.

வேலையின்மை என்பது அதன் தாக்கத்தை ஒரு நடுத்தர வர்க்கத்திடம் காட்டாமல் இருப்பதில்லை. ஊரில் இருப்பது ரெண்டு மில். டெக்ஸ்டைல் டெக்னாலஜி படித்து விட்டு இன்ஸ்பெக்டராக ஆன பிறகு, மில்தான் கோவில். முதலாளிதான் தெய்வம். உதறினால் அடுத்த மில்லில் சேர முடியாது. வேறு ஊர்தான் போக முடியும். சம்பள பாக்கி, எம்ப்ளாயர்ஸ் ஸெர்டிஃபிகேட் எல்லாமே மில்லில்தான் முடங்கிக் கிடக்கிறது.

''என்னைப் பிடிச்சிருக்கா மனோ?''

''என்ன கேள்வி இது? ஒரு வருஷம் கழிச்சு!''

''நேரா பதில் சொல். பிடிச்சிருக்கா?''

''பிடிச்சிருக்கு.''

''எவ்வளவு?''

''பாலு! நாம காதலிச்சிருக்கோம். பிடிக்காம காதல் வருமா? உன் தோற்றம், ஆறடி உசரம், நாற்பது செ.மீ. மார்பளவு, உன் மீசை, உன் சிரிப்பு, உன் கண்ணியம்... எல்லாம் பிடிச்சுத்தான் உன்னை லவ் பண்ணினேன்.''

''அப்போ எனக்கு இரண்டாயிரத்து முந்நூறு ரூபாய் சம்பளம் மனோ.''

அவள் அவனை ஒதுக்கித் தள்ளினாள். அவன் அவளை முரட்டுத்தனமாகத் தன் பக்கம் இழுத்து அணைத்துக் கொண்டான்.

''ஏன் விலகற?''

''என்ன பேச்சு இது பாலு! சம்பளம் ஒரு மனுஷ குணத்தை நிர்ணயம் பண்றதில்லை.''

''ஆனா அடிப்படைத் தேவை பணம் மனோ.''

''உனக்குத் தாழ்வு மனப்பான்மை.''

''ஆமாம்.''

''எதுக்காக? எதுக்காக அந்தத் தாழ்வு மனப்பான்மை?''

''முதல் கல்யாண நாளுக்கு உனக்கு ஒரு வாயில் புடைவை கூட வாங்கித் தர முடியலையேன்னு....''

அவள் சட்டென்று கையிலிருந்த வளையலைக் கழற்றி அவன் கையில் கொடுத்தாள்.

''மார்வாடிக் கடையில் கொடுத்துட்டுக் கெடைக்கற பணத்துக்கு ஒரு புடைவை வாங்கிட்டு வாங்க.''

''மனோ...''

''எனக்கு வேற வழி தெரியலை.''

சொல்லப் போனால் வேறு வழியும் கிடையாது. முதல் மாசம் அவளிடம் இருந்த ஒரே நகையான இரண்டு பவுன் சங்கிலியை அடகு வைத்து வந்த பணத்தில் சாப்பிட்டுத் தீர்த்தாகி விட்டது. சம்பளமின்மை என்று வரும் பொழுதுதான் சாப்பிட மட்டும் எவ்வளவு செலவாகிறது என்று தெரிகிறது. இரண்டு மாசமாக அவள் பள்ளிக்கூடப்

சத்தியப்ரியன்

பையன்களுக்கு எடுக்கும் ட்யூஷன் பணத்தில் தான் குடும்பம் ஓடுகிறது. நொய் அரிசியும் ரேஷன் கோதுமையுமாக ஒரு சமையல் சாப்பாடு. ஏதோ ஓர் ஈர்ப்புஇருவர் நடுவிலும் பொதுவாய் ஓட, பரிவு, நேசம், காதல் என்றானது. காதல் அதன் அத்தனை முகங்களையும் காட்டி விட்டது. இரண்டு பேர் வீட்டு எதிர்ப்பையும் மீறி ரிஜிஸ்தர் ஆபீஸ் வரை போனது காதல்.

வளையலை மீண்டும் அவள் கையில் மாட்டி விட்டான்.

''காலம் ஒருநாள் மாறும் – நம் கவலைகள் யாவும் தீரும்.'' மெலிதாகப் பாடினாள்.

அவன் எழுந்து பேண்ட் மாட்டிக் கொண்டான்.

''எங்கே போறீங்க?''

''மில் வரைக்கும்.''

''எதுக்கு?''

''பொஸிஷன் தெரிஞ்சுக்க.''

மில்லை நெருங்கச் சூழ்நிலை ஏற்புடையதாக இல்லை. வெள்ளை நிறத்தில் ஒரு வேன் நின்று கொண்டிருந்தது. போலீஸ். ஏன்?

''பாலு...'' எதிரில் பல்குணன் அவனைத் தடுத்தான்.

''என்ன குணா?''

''போகாதே பாலு.''

''ஏன்?''

''தர்ணா பண்றவங்களை அடிக்கிறதுக்கு நிர்வாகம் குண்டர் படையை ஏவப் போறதாப் பேச்சு அடிபடுது. கேஸை நம் பக்கம் திருப்பிப் போட்டு போலீசையும் சாட்சியா நிறுத்தி வெச்சிருக்கு.''

''நிஜமாவா?''

''உயிர்ச்சேதம் கூட ஏற்படலாம்.''

பல்குணன் சொல்லி முடிக்கவில்லை. குழப்பமும், கூச்சலும் அதிகமாக, யூனியன் அமைத்திருந்த பந்தலின் கீழ் ஒரு சிதைவு தெரிந்தது. எல்லோரும் ஓடினார்கள். எல்லோரும் துரத்தினார்கள். பாதிதான் அடையாளம் தெரிந்தது. இது குமார், இது ராஜவேலு... இப்படிப் பெயர் சொல்ல முடிந்தது. பாதிப்பேர் அடையாளம் தெரியவில்லை. கறுப்பாக, ரௌடித் தோற்றத்துடன்! பல்குணன் சொன்ன குண்டர்களா? ஏன் இப்படி ஒரு நிர்வாகம்?

குண்டர்களில் ஒருவன் கூட்ட நெரிசலில் பிச்சுவா போன்ற ஓர் ஆயுதத்தை யூனியன் லீடர் உமாபதி முதுகில் குத்தப் போனதை அவன் பார்த்து விட்டான். ஓடி அந்த முரடனின் தோள் தொட்டு விலக்க, முரடன் குறி தப்பிய ஆத்திரத்துடன் திரும்பி இவன் வயிற்றில்....

சரக்.

மிக ஆழமாகக் கத்தி உள்ளே இறங்கியது. ரத்தம் பூவாகச் சிதற, முதலில் ஓர் ஆச்சரியப் பார்வையும், பின்பே வலியும், பயமும் தாக்க அவன் மயக்கமானான்.

கதவு தட்டப்படத் திறந்தாள்.

''பாலசுப்ரமணியம் மிஸஸ்தானே நீங்க?'' கூட்டமாகக் கேட்டவர்களைப் பார்த்ததும் பயமானது.

''ஆமாம், என்ன?''

''யூனியன் கலவரத்தில் அவருக்கு அடிபட்டு ஹாஸ்பிடலில் அட்மிட் பண்ணியிருக்கோம்.''

வீட்டைப் பூட்டி விட்டு ஓடினாள்.

அடி இல்லை. செருகல். எட்டு செண்டி மீட்டர் பிச்சுவா முழுவதும் உள்ளே போய்க் குடலில் பாதி அறுத்த செருகல்.

அவன் நினைவின்றிக் கிடந்தான். பாட்டில் பாட்டிலாக ரத்தம் போனது. சீஃப் வந்த பிறகு மூன்று மணி நேரம் வரை மேஜர் ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று சின்ன டாக்டர்கள் சொன்னார்கள்.

அவள் கையிலிருந்த வளையலைக் கழற்றினாள். மத்தியானம் சொல்லி இரண்டு மணி நேரம் ஆகவில்லை!

''இதை வித்து எவ்வளவு பணம் கிடைக்குதோ கொண்டு வாங்க.''

சீஃப் டாக்டர் வந்ததும் எல்லாம் பறக்க ஆரம்பித்தார்கள். சலைன் ஸ்டாண்டும், பாட்டில்களும் ஓடி வந்தன. ரத்தம் வந்தது.

அவளிடம் ஒரு ஃபாரத்தில் கையெழுத்துப் போடச் சொன்னார்கள். அந்த ஃபாரத்



அருள்வாக்கு



மூளைக்குத் தெரிகிறது வேறே: அதற்கும் ஆதாரமான உயிருக்குத் தெரிகிறது வேறே. கோட்டான் கண்ணுக்கு வஸ்துக்கள் ராத்திரியில்தான் தெரிகிறது. பகலில் அதற்கு எதுவும் தெரிவதில்லை. மனுஷக் கண்ணுக்குப் பகலில்தான் தெரிகிறது. ராத்திரியில் தெரிவதில்லை. மூளைக்கு அநுபவம் தெரிவதில்லை. அதற்குத் தர்க்கத்தையொட்டி விசாரிக்கிற அறிவு வாதம்தான் தெரியும். அநுபவம் தெரிகிற ஹ்ருதயத்துக்கு அறிவு வாதம் தெரிவதில்லை. ஜீவனின் ஸார ஸத்யமான உயிரைத்தான் ஹ்ருதயம் என்பது.

ஆனாலும் ஹ்ருதயம் லேசில் திறந்து கொள்வதில்லை. எதனாலோ மநுஷ்யர்களுக்கு மூளைப் பெருமையையே பெரிசாக வைத்திருக்கிறது. அதனால், எதுவுமே முதலில் புத்தியில், மூளையில் உறைத்தாக வேண்டியிருக்கிறது. ஹ்ருதயமே அநுபவிக்க வேண்டிய ஆத்யாத்மிக விஷயங்களைக் கூட மூளை ஸரியாயிருக்குமா, இருக்காதா என்று எடை போட்டுப் பார்க்க ஆரம்பிக்கிறது. ஸரியாயிருப்பதாக அது முடிவு பண்ணினால் அதற்கப்புறமே. இப்படி நாம் அறிவினால் முடிவு பண்ணினது போதாது. இதனால் அந்த விஷயத்தின் லக்ஷ்யமான ப்ரயோஜனம் நமக்குக் கிடைத்து விடவில்லை. உதாரணமாக, ஆத்மா ஸச்சிதாநந்த ஸ்வரூபமாகத்தான் இருக்க வேண்டுமென்று இத்தனை வேதாந்த புத்தகங்களைப் படித்து, குரு உபதேசங்கள் கேட்டுப் புத்தியினால் புரிந்து கொண்ட போதிலும் நமக்கு ஸத்தும் தெரியலை, சித்தும் தெரியலை, ஆனந்தமும் தெரியலை. அசடு மாதிரி துக்கப்பட்டுக் கொண்டுதான் கிடக்கிறோம். அதனால் புத்திக்குள் போனதோடு நிறுத்திக் கொள்ளாமல் 'அதை ஹ்ருதயத்துக்குள் இறக்கிக்கொள்ள வேண்டும்' என்று நினைக்கிறோம்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

தில் ஒரு முக்கியப் பிரிவு. 'ஆபரேஷன் இறுதியில் ஏற்படும் எந்தவிதமான முடிவையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்.'

உள்ளே மனம் சேவ, கையெழுத்துப் போட்டான்.

மூன்று மணி நேரம் அவன் உள்ளே போனதும் இவள் முற்றிலும் தன்னை இழந்தாள். எந்தச் சமாதானமும் ஏற்புடையதாக இல்லை.

ஆலைத் தொழிலாளர்கள் விவரம் சொன்னார்கள். யூனியன் லீடர் வாங்கிக் கொள்ள இருந்த செருகலை இவன் வாங்கிக் கொண்டதைச் சொன்னார்கள்.

சீஃப் வெளியில் வந்ததும், முகம் வெளிறிப் போய் அவர் முகத்தை பார்த்தாள்.

''ஆபரேஷன் நல்லபடியா முடிஞ்சதும்மா. ஒரு அடி நீளத்துக்குச் சேதமான குடலை வெட்டி எறிஞ்சிட்டோம். ஆனாலும் பேஷண்ட் இன்னும் கோமா ஸ்டேஜில் இருக்கார். ரெண்டு மூணு நாள் ஆகும் நினைவு வர.''

பயந்து கொண்டே கேட்டாள், ''பிழைச்சிட்டாரில்லியா டாக்டர்?''

டாக்டர் சிரித்தபடி ''தாராளமா!'' என்றார்.

மூன்று நாட்களும் அவன் கண் திறக்கவில்லை. நிர்வாகம் வந்து பார்த்தது. மில் முதலாளி வந்து ஆறுதல் சொன்னார். யூனியன் வந்து வருத்தம் தெரிவித்தது. 'நிர்வாகத்தின் அராஜகம் ஒழிக' என்றது. எதற்கும் அவன் அசையவில்லை. குளுகோஸ், ரத்தமும் உள்ளே ஏற, மயங்கிக் கிடந்தான். ட்யூப் போட்டுச் சிறுநீர் பிரித்தார்கள்.

மூன்றாவது நாள் அசைவு தெரிந்தது. கண்களை மெல்லத் திறந்து, ஹீனமாக முனகினான். குளுகோஸ் நிறுத்தப்பட்டுத் திரவ ஆகாரம் சாப்பிட அநுமதிக்கப்பட்டான். சிறுநீர் ட்யூப் பிரிக்கப்பட்டு, பெட்பான் வைக்கப்பட்டது. கொஞ்சம் சாப்பிட்டுத் தூங்க இன்னொரு நாள் முழுக்க மயக்கத்தில் கிடந்தான்.

நான்காவது நாள் நல்ல தெளிவு வந்து விட்டது.

''இன்னிக்கு என்ன கிழமை?''

''டோண்ட் ஸ்ட்ரெய்ன் யுவர் ஸெல்ஃப்.''

''சொல்லு! இன்னிக்கு என்ன கிழமை?''

''வெள்ளிக்கிழமை.''

''அப்படின்னா....''

''நம்ம கல்யாண நாள்.''

''ஸாரிம்மா!''

''எதுக்கு?'' புருவம் உயர்த்தினாள்.

''உனக்கு என்னால் எதுவும் பரிசாக வாங்கிக் கொடுக்க முடியலை.''

''எனக்கு கல்யாணப் பரிசு கிடைச்சிருச்சு பாலு.''

''என்ன சொல்ற?''

''என் தாலி!'' வெளியில் திருமாங்கல்யத்தைக் காட்டி அழத் தொடங்கினாள்.



அத்தியாயம் 89

வஸந்தம் வந்தது

மதுராந்தக உத்தம சோழத் தேவரின் முடி சூட்டு விழா நடந்து ஒன்றரை மாதத்துக்கு மேலாயிற்று. பின்பனிக் காலம் வழக்கத்தை விட விரைவாக விடை பெற்றுக் கொண்டு சென்றது. தென்றல் என்னும் தெய்வ ரதத்தில் ஏறிக் கொண்டு வஸந்த காலம் வந்தது. பைங்கிளிகள் மாமரங்களின் குங்கும நிறத் தளிர்களுக்கு அருகில் தங்கள் பலவர்ண மூக்குகளை வைத்து ஒத்திட்டுப் பார்த்தன. அரச மரங்களின் தங்க நிறத் தளிர்கள் இளங் காற்றில் அசைந்தாடி இசை பாடின. புன்னை மரங்களிலிருந்து முத்துப் போன்ற மொட்டுக்களை உதிர்த்துக் கொண்டு குயில்கள் கோலாகலமாகக் கூவின. இயற்கைத் தேவி உடல் சிலிர்த்தாள். பூமா தேவி குதூகலத்தினால் பொங்கிப் பூரித்தாள். இலைகள் உதிர்ந்து மொட்டையாகத் தோன்றிய மரங்களில் திடீரென்று மொட்டுக்கள் அரும்பிப் பூத்து வெடித்தன. மாதவிப் பந்தல்களும் மல்லிகை முல்லைப் புதர்களும் பூங்கொத்துக்களின் பாரம் தாங்க முடியாமல் தவித்தன. நதிகளில் பிரவாகம் குறைந்து விட்டது. கரையோரமாகப் பளிங்கு போன்ற தெளிந்த நீர் சலசலவென்று ஓடிக் கொண்டிருந்தது.

சோழ நாட்டு மக்கள் அகமும் முகமும் மலர்ந்து விளங்கினார்கள். வயல்களில் விளைந்திருந்த செந்நெல்லை அறுவடை செய்து களஞ்சியங்களிலே கொண்டு போய்ச் சேர்த்தாகிவிட்டது. அரசியல் சம்பந்தமான நிச்சயமற்ற நிலைமை நீங்கிக் கவலை தீர்ந்து விட்டது. நகரங்களிலும் நாட்டுப் புறங்களிலும் காமன் பண்டிகை கொண்டாடுவதற்கு மக்கள் ஆயத்தம் செய்து கொண்டிருந்தார்கள். ஆலயங்களில் வஸந்த உற்சவம் நடத்துவதற்கும் ஏற்பாடுகள் நடைபெற்றன. வீதிகள் சேருமிடங்களிலெல்லாம் நாடக மேடைகள் அமைக்கப்பட்டு வந்தன.

இந்த இனிய காட்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டு வல்லவரையன் பழையாறை நகரை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். இந்தத் தடவை அவன் மறைந்தும் ஒளிந்தும் மாறுவேடம் பூண்டும் அந்த மாநகருக்குள் பிரவேசிக்கவில்லை. திறந்திருந்த பிரதான நகர் வாசல் வழியாகத் தங்கு தடையின்றிப் புகுந்து இளையபிராட்டி குந்தவை தேவியின் அரண்மனையை அடைந்தான்.

இளைய பிராட்டி குந்தவை, வானதி முதலிய தன் தோழிகள் பலர் புடை சூழ அரண்மனை வாசலுக்கு வந்து அவனுக்கு முகமன் கூறி வரவேற்றாள்.

நெடுந் தூரம் பிரயாணம் செய்து வந்த களைப்புத் தீர்ந்த பிறகு தன்னை அரண்மனை உத்தியான வனத்தில் வந்து சந்தித்துப்

அமரர் கல்கி

பிரயாண விவரங்களைக் கூறும்படி சொல்லி விட்டுச் சென்றாள்.

வந்தியத் தேவன் இளைப்பாறுவதற்கு அதிக நேரம் எடுத்துக் கொள்ள வில்லை. ஸ்நான பானங்களையும் அதி விரைவில் முடித்துக் கொண்டு உத்தியானவனத்துக்குச் சென்றான். அங்கே இளைய பிராட்டி அவன் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். ஒருவரை யொருவர் சந்திப்பதில் யாருக்கு அதிக ஆர்வம் என்று சொல்ல முடியாமலிருந்தது. ஒருவரிடம் ஒருவர் பல செய்திகளைக் கேட்டு அறிவதில் இருவரும் ஆவல் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களுடைய பரபரப்புக்கு அது மட்டுந்தானா காரணம்? தங்கள் வருங்கால வாழ்க்கையைப் பற்றி நிச்சயித்துக் கொள்ள விரும்பியதும் காரணமாயிருக்கலாம் அல்லவா! அசேதனப் பொருள்களிடத்திலும் கிளர்ச்சியை உண்டாக்கிய இளவேனில் உணர்ச்சி நிறைந்த அவர்களுடைய உள்ளத்திலும் ஒரு பரபரப்பை உண்டாக்கியிருக்கலாம் அல்லவா?

''ஐயா! தாங்கள் சென்றிருந்த காரியத்தில் பூரண வெற்றி அடைய வில்லையென்று அறிகிறேன். அது உண்மையா?'' என்று கேட்டாள் இளைய பிராட்டி.

''உண்மைதான், தேவி! இது வரையில் நான் ஏற்றுக் கொண்ட எந்தக் காரியத்திலே தான் பூரண வெற்றி அடைந்திருக்கிறேன்?'' என்று வல்லவரையன் கூறிப் பெருமூச்சு விட்டான்.

''அப்படிச் சொல்ல வேண்டாம்! என் தம்பியை ஈழ நாட்டிலிருந்து கொண்டு வந்து சேர்த்தீர்கள் அல்லவா? அச்சமயம் அருள்மொழி வர்மன் வந்ததினால்தானே இந்த வரைக்கும் சோழ நாடு தப்பிப் பிழைத்தது?'' என்றாள் குந்தவை.

''அருள்மொழி வர்மருக்கு அநாவசியமான அபாயத்தை உண்டாக்கி அவரைக் கடும் குளிர் சுரத்துடன் குற்றுயிராகக் கொண்டு வந்து சேர்த்தேன். அதுவும் பூங்குழலி மகாராணியின் உதவியினால்தான். சேந்தன் அமுதனிடமும் பூங்குழலியிடமும் என் நண்பரை ஒப்புவித்து நாகைப்பட்டினத்துக்கு அழைத்துப் போகும்படி சொன்ன போது, அவர்கள் தஞ்சைபுரிக்கு வந்து இந்தச் சோழ சாம்ராஜ்யத்தில் சிங்காதனம் ஏறி மணி மகுடம் சூட்டிக் கொள்ளப் போகிறார்கள் என்று கனவிலும் நான் கருதவில்லை......''

''உத்தமச் சோழ சக்கரவர்த்தியின் உயிரைக் காப்பாற்றிக் கொடுத்தவர் தாங்கள்தான் என்பதை நான் மறந்து விடவில்லை. அவரும் மறந்து விட வில்லை. பெரிய பழுவேட்டரையருக்குப் பதிலாகத் தங்களைச் சோழ நாட்டின் தனாதிகாரியாக்கி விட வேண்டும் என்று உத்தமச் சோழர் விரும்பினார்...''

''நல்ல வேளை தப்பிப் பிழைத்தேன்!''

''அது என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்? இச் சோழ சாம்ராஜ்யத்தின் தனாதிகாரி பதவி சாமான்யமானதா? முதன் மந்திரி பதவியைக் காட்டிலும் மாதண்ட நாயகர் பதவியைக் காட்டிலும் பெரியதாயிற்றே? தனாதிகாரியின் தயவு இல்லாமல் சக்கரவர்த்தி கூட எந்தக் காரியமும் செய்ய முடியாதே?''

''தேவி! பெரிய பழுவேட்டரையரின் பாதாளப் பொக்கிஷ நிலவறையில் ஒரு முறை நான் ஒளிந்திருக்க நேர்ந்தது. அப்போது அங்கே கும்பல் கும்பலாகக் கொட்டியிருந்த பொற்காசுகளின் ஒளியில் ஒரு சிலந்திப் பூச்சியின் வலையைப் பார்த்தேன். இறந்து போன மனிதனின் மண்டை எலும்பையும் பார்த்தேன். இனிமேல் அந்தப் பொக்கிஷ நிலவறைப் பக்கமே போகக் கூடாது என்று தீர்மானித்துக் கொண்டேன்......''

இளைய பிராட்டி புன்னகை புரிந்து விட்டு, ''தாங்கள் தனாதிகாரியானாலும் பொக்கிஷ நிலவறைக்குப் போக வேண்டிய அவசியம் நேராது. அந்த நிலவறையில் இருந்த பொருள்களையெல்லாம் செலவு செய்து பெரிய தொரு கடற்படை கட்ட அருள்மொழி தீர்மானித்து விட்டான். புதிய சக்கரவர்த்தியின் அனுமதியும் பெற்று விட்டான்!'' என்றாள்.

''புதிய சக்கரவர்த்தியும் அவருடைய பட்ட மகிஷியும் அருள்மொழி வர்மருடன் கோடிக்கரைக்குச் சென்றிருப்பதாகத் தஞ்சையில் அறிந்தேன்.''

''ஆம். அவர்கள் போகும் போது தங்களையும் உடன் அழைத்துப் போக முடிய வில்லையேயென்று மிக்க வருத்தப் பட்டுக் கொண்டு போனார்கள்.''

''நான் அதைப் பற்றி வருத்தப்பட வில்லை. இப்போது கூடக் கோடிக்கரை போய் அவர்களுடன் சேர்ந்து கொள்வேன். அருள்மொழி வர்மர் நான் இல்லாத சமயம் பார்த்துக் கொடும்பாளூர் இளவரசியைக் கலியாணம் செய்து கொண்டது பற்றித் தான் வருந்துகிறேன்.''

''ஏன், ஐயா! தங்கள் நண்பர் என் தோழியை மணந்து கொண்டது தங்களுக்குப் பிடிக்க வில்லையா?''

''தெய்வமே! அம்மாதிரி நான் சொல்ல வில்லை. நான் அந்தத் திருமணத்துக்கு

இல்லாமற் போனது பற்றித்தான் வருத்தப் படுகிறேன். வானதியை மணந்து கொள்ளக் கொடுத்து வைத்தது அருள்மொழிவர்மரின் பூர்வ ஜன்ம பாக்கியம். தங்கள் தோழி வானதியும் பாக்கியசாலிதான். ஆனால் எதற்காக அவ்வளவு அவசரப் பட்டார்கள்?"

''அவர்கள் அவசரப்பட வில்லை. நான் தான் அவசரப் பட்டேன். என் தந்தையும் தாயும் காஞ்சிக்குப் புறப்பட்டுப் போக விரும்பினார்கள். அவர்கள் புறப்படுவதற்குள் திருமணம் நடந்து விட வேண்டுமென்று சொன்னேன். இதனால் கொடும்பாளூர் பெரிய வேளாரின் மனமும் நிம்மதி அடைந்தது. மகுடாபிஷேக தினத்தில் திடீரென்று தங்கள் நண்பர் உத்தமச் சோழரின் தலையில் சோழ நாட்டுக் கிரீடத்தை வைத்தது பெரிய வேளாருக்குப் பெரும் அதிர்ச்சியை உண்டு பண்ணியிருந்தது.''

''இன்னும் பலரும் அப்போது அதிர்ச்சி அடைந்திருப்பார்கள்.''

''எங்கள் எல்லாருக்குமே அது வியப்பாகத்தானிருந்தது. நண்பர்கள் இருவரும் அந்தச் செய்தியை மிக மிக இரகசியமாக வைத்திருந்தீர்கள்......''

''தேவி தங்களிடம் மட்டுமாவது சொல்லியிருப்பார் என்று நினைத்தேன்.''

''சில மாதங்களுக்கு முன்னதாக இருந்தால் சொல்லித்தான் இருப்பான். என்னிடம் கேளாமல் அருள்மொழி எந்தக் காரியமும் செய்தது கிடையாது.''

''இப்போது ஏன் மாறி விட்டார்?''

''சகவாச தோஷந்தான்! தங்களுடன் சேர்ந்த பிறகுதான் என் அருமைத் தம்பி இவ்வாறு மனம் மாறி விட்டான். உள்ளும் புறமும் ஒன்றாக இருந்தவன் கபட நாடகத்திலும் தந்திர மந்திரத்திலும் தேர்ந்து விட்டான்!''

''தேவி! என் பேரில் வீண் பழி சுமத்த வேண்டாம். உத்தமச்சோழருக்குமுடிசூட்டிய கபட நாடகத்துக்குத் தங்கள் தம்பிதான் முழுதும் பொறுப்பாளி. இப்படி எல்லாரையும் ஏமாற்றலாமா என்று நான் விவாதித்துப் பார்த்தேன். இராமபிரான் அயோத்தி ஜனங்களை ஏமாற்றி விட்டு இரவுக்கிரவே காட்டுக்குச் சென்றதை அருள்மொழி உதாரணமாக எடுத்துக்காட்டினார். தங்களிடமாவது சொல்ல வேண்டாமா என்று கேட்டேன். தம் வாழ்க்கையில் ஒரு முறையாவது தங்களிடம் யோசனை கேளாமல் ஒரு காரியத்தைச் செய்து தங்களிடம் பிற்பாடு 'சபாஷ்' வாங்கப் போவதாகச் சொன்னார். தேவி! இளவரசர் செய்தது தங்கள் மனத்திற்கு உகந்த காரியந்தானே?''

''இதைக் காட்டிலும் எனக்கு உகந்த காரியத்தை இனி யாரும் செய்ய முடியாது. என் தம்பிக்கு தாங்கள் இக்காரியத்தில் உதவி செய்வதற்கு மிக்க நன்றி!'' என்றாள் இளைய பிராட்டி.

''தேவி! அருள்மொழி வர்மர் சிங்காதனம் ஏறி மணி மகுடம் சூடி உலகாளுவதைப் பார்க்கத் தாங்கள் ஆவல் கொண்டிருந்ததாக நினைத்தேன்.''

''முன்னம் அப்படி நான் ஆசை கொண்டிருந்தது உண்மைதான். என் தோழி வானதி அத்தகைய சபதம் செய்த பிறகு அந்த எண்ணத்தைமாற்றிக்கொண்டேன். மேலும், தமையன் கொலை செய்யப்பட்டு மாண்ட உடனடியாகத் தம்பி சிங்காதனம் ஏறினால் உலகத்தில் என்ன நினைப்பார்கள்?''

''ஆம், தேவி! இலங்கை இராஜ வம்சத்தில் நடந்திருக்கும் பயங்கரமான செயல்கள் அருள்மொழி வர்மருக்கு இது விஷயத்தில் பெரிதும் கலக்கத்தை உண்டாக்கியிருந்தன. ஆனால் அதைப் பற்றிக் கூட அவர் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. என் பேரில் அந்தக் கொடிய கொலைக் குற்றத்தைச் சிலர் சுமத்த முயன்றபோது, என்னைக் காப்பாற்றுவதற்காகவே சோழ சிங்காதனத்தில் ஏற அவர் உறுதி கொண்டிருந்தார். நல்ல வேளையாகப் பெரிய பழுவேட்டரையர் அந்தக் குற்றத்தைத் தம் பேரில் போட்டுக் கொண்டு என் மீது அந்த வீண் பழி விழாமல் காப்பாற்றினார்.''

''பாவம்! அந்தக் கிழவர் ஒருவர் இல்லாத படியால் சோழ நாடே வெறிச்சோடிப் போனதாகத் தோன்றுகிறது.''

''தமையனைத் தொடர்ந்து தம்பியும் போய்விட்டதை நினைத்துப் பார்த்தால் மிக்க வருத்தமாயிருக்கிறது.''

''ஐயோ! சின்னப் பழுவேட்டரையரும் இறந்தே போய் விட்டாரா? நிச்சயந்தானா?" என்று கேட்டாள் குந்தவை.

''நான் அவரிடம் விடைபெற்றுக் கொண்டுபுறப்பட்டபோது அவருக்கு உயிர் இருந்தது. ஆனால் நூற்றைம்பது அடி உயரம் செங்குத்தான மலையிலிருந்து கீழே விழுந்து விட்டவர் எப்படிப் பிழைக்க முடியும்? இறந்து போயிருக்கத்தான் வேண்டும். சின்னப் பழுவேட்டரையரின் மரணத்துக்கு நானே ஒரு விதத்தில் காரணமாயிருந்தேன் என்று நினைக்கும் போது என் உள்ளம் துடிக்கிறது'' என்றான் வந்தியத் தேவன்.

''ஐயா! அதைப் பற்றியெல்லாம் எனக்கு விவரமாகச் சொல்லுங்கள். மகுடாபிஷேக தினத்தன்று சின்னப் பழுவேட்டரையரைச் சபா மண்டபத்திலிருந்து வெளியேற்றுவதற்குத் தாங்களும் என் தம்பியும் சூழ்ச்சி செய்தீர்கள் அல்லவா? அதில் இருந்து விவரமாகச் சொல்லுங்கள். அதைப் பற்றி என் தம்பியிடம் நான் விவரம் கேட்கவே முடியாமற் போயிற்று. தங்களிடம் கேட்டுத்

தெரிந்து கொள்ளலாமென்றே இருந்தேன். 'பெண்களிடத்தில் இரகசியம் எதையும் சொல்லக் கூடாது' என்று எண்ணித்தான் முன்னாலேயே என்னிடம் சொல்லவில்லை. இப்பொழுதாவது சொல்லலாம் அல்லவா?"

"தேவி! அந்தக் காரணத்திற்காகத் தங்களிடம் சொல்லாமல் இல்லை. தங்களை ஒருமுறையாவது ஆச்சரியப்படச் செய்ய வேண்டுமென்று இளவரசர் விரும்பினார்."

"அப்படியொன்றும் நான் ஆச்சரியப்பட்டு விடவில்லை. நீங்கள் இருவரும் சேர்ந்து இவ்விதம் ஏதோ சூழ்ச்சி செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று ஊகித்தேன். ஏதாவது தவறு நேர்ந்து விடக் கூடாதே என்று சிறிது கவலைப் பட்டுக் கொண்டுமிருந்தேன்."

"உண்மையில், தவறு நேர்ந்துதான் விட்டது. மிக முக்கியமான காரியம் நிறைவேறி விட்டாலும் அதன் மூலம் நேர்ந்த வேறு விபரீதத்தைத் தடுக்க முடியாமல் போயிற்று. ஒரு வேளை தங்களிடம் யோசனை கேட்டிருந்தால் இந்த மாதிரி நேர்ந்திராது!" என்றான் வந்தியத் தேவன்.

பின்னர், சேந்தன் அமுதனாகிய புதிய மதுராந்தகத் தேவருக்குப் பட்டம் கட்ட வேண்டுமென்று பொன்னியின் செல்வர் தீர்மானித்ததிலிருந்து அவர்கள் போட்ட திட்டங்கள், செய்த சூழ்ச்சிகள், நடத்திய காரியங்கள் எல்லாவற்றைப் பற்றியும் விவரமாகக் கூறினான்.

மதுராந்தகத் தேவருக்கு முடி சூட்டப் போவதாக முன்னாலேயே சொன்னால், அதற்குப் பல ஆட்சேபங்களும் இடையூறுகளும் ஏற்படும் என்று அருள்மொழி வர்மர் எண்ணினார். கொடும்பாளூர் வேளாரும் திருக்கோவலூர் மலையமானும் முன் போலவே அந்த யோசனையை எதிர்ப்பார்கள். பெரிய பழுவேட்டரையரோ மரணத் தறுவாயில் பொன்னியின் செல்வருக்கே முடிசூட்ட வேண்டும் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். அவருடைய விருப்பத்தைநிறைவேற்றவே அவரைச் சேர்ந்தவர்கள் விரும்புவார்கள். சின்னப் பழுவேட்டரையர் தமது மருமகன் உண்மையான மதுராந்தகன் அல்லவென்று தெரிந்து கொண்டு விட்டார். படகோட்டியின் மகளான பூங்குழலியைச் சிங்காதனத்தில் அமர்த்துவதில் அவருக்கு உற்சாகம் இருக்க முடியாது. செம்பியன் மாதேவி, சேந்தன் அமுதனாகிய மதுராந்தகத் தேவன், பூங்குழலி எல்லாருமே ஆட்சேபணை செய்வார்கள். அவர்களுடைய ஆட்சேபணைகளைப் புறக்கணிக்கச் சுந்தர சோழரும் விரும்பாதவராயிருக்கலாம். இந்தக் காரணங்களையெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டுதான் பொன்னியின் செல்வர் தாம் செய்யத் தீர்மானித்த காரியத்தைக் கடைசி நிமிஷம் வரையில் இரகசியமாக வைத்திருக்க விரும்பினார். மகுடாபிஷேக





சமயத்தில் தம்மிடம் கொண்ட அன்பினாலோ அல்லது மதுராந்தகரிடம் கொண்ட பொறாமையினாலோ ஆட்சேபணை கிளப்பித் தடை செய்யக்கூடிய பரபரப்புக்காரர்கள் எல்லாரையும் ஒவ்வொருவராக வெவ்வேறு காரணங்களைச் சொல்லி வெளியூர்களுக்கு அனுப்பி வைத்தார். தமக்கு உதவி செய்ய ஒருவர் வேண்டுமே என்பதற்காக வந்தியத்தேவனிடம் மட்டும் அந்தரங்க நோக்கத்தைச் சொல்லியிருந்தார். இருவரும் கலந்து யோசித்தே திட்டங்கள் வகுத்துக் காரியங்களும் கவனமாகச் செய்து வந்தார்கள்.

கந்தமாறன், பார்த்திபேந்திரன், கொடும்பாளூர் வேளார் முதலியோர்களை ஊரை விட்டே அனுப்பியாகி விட்டது. ஆனால் சின்னப் பழுவேட்டரையரை ஊரை விட்டு அனுப்புவது சாத்தியம் இல்லை. அவர் கையினால் பொன்னியின் செல்வரின் சிரஸில் மணிமகுடத்தைச் சூட்டுவது என்ற பேச்சும் ஏற்பட்டு விட்டது. அந்தச் சமயத்தில் சேந்தன் அமுதனாகிய புதிய மதுராந்தகர் தலையில் முடிசூட்டச் சொன்னால் அவர் தடை சொல்லாமலிருப்பாரா? அவர் மறுதலித்தால் அது பெரிய அபசகுனமாகக் கருதப்படும்; அதிலிருந்து வேறு பல குழப்பங்களும் ஏற்படலாம். ஆகையால் முடிசூட்டுகிற சமயத்தில் அவரை மண்டபத்திலிருந்து வெளியேற்றுவதற்கு ஏதேனும் யுக்தி செய்ய வேண்டும் என்று நண்பர்கள் இருவரும் யோசித்தார்கள். முழுதும் திருப்திகரமான யுக்தி எதுவும் தோன்றவில்லை. இச்சமயத்தில் ஆழ்வார்க்கடியான் வந்து ஒரு விசித்திரமான செய்தியைக் கூறினான்.

பாண்டிய நாட்டு ஆபத்து உதவிகளான ரவிதாஸன் கூட்டத்தார் எங்கே போனார்கள். நந்தினி தேவி இன்னமும் அவர்களுடன் இருக்கிறாளா, திருப்புறம்பயம் காட்டில் நள்ளிரவில் முடிசூட்டப்பட்ட சிறுவன் எங்கே மறைத்து வைக்கப்பட்டிருக்கிறான் என்னும் செய்திகளை அறிந்து வருவதற்காக முதன் மந்திரியின் சம்மதத்துடன் ஆழ்வார்க்கடியானை அருள்மொழி வர்மர் அனுப்பியிருந்தார். பாதாளச்சிறையிலிருந்து தப்பிச் சென்ற கருத்திருமன் அவர்களுடன் சேர்ந்து கொண்டிருக்கிறானா, கந்தமாறன் வந்து சொன்னபடி பழைய மதுராந்தகன் இறந்தது உண்மையா, அல்லது அவனும் தப்பிப் பிழைத்துச் சதிக் கூட்டத்தாருடன் சேர்ந்திருக்கிறானா என்று தெரிந்துகொண்டு வருவதற்கும் திருமலை நம்பி சென்றிருந்தான். அவன் இச்செய்திகளை அறிந்து வருவதற்கு வெகு காலம் ஆகும் என்று எண்ணியிருந்தார்கள். ஆனால் ஆழ்வார்க்கடியான் சில தினங்களிலேயே திரும்பி வந்து விட்டான்.

ரவிதாஸன் கூட்டத்தைச் சேர்ந்தவளும் படகோட்டி முருகய்யன் மனைவியுமான ராக்கம்மாளைக் கொல்லி மலைக்கு அருகில் அவன் பார்த்தான். அவள் எங்கே போகிறாள் என்பதைக் கவனித்து அவளைத் தொடர்ந்து சென்றால் ரவிதாஸன் கூட்டம் இருக்குமிடத்தைச் சேரலாம் என்று ஆழ்வார்க்கடியான் எண்ணினான். ஆனால் ராக்கம்மாள் தஞ்சைபுரிக்குச் செல்லும் மார்க்கத்தில் சென்றது அவனுக்கு வியப்பு அளித்தது. ஆயினும், அவளைத் தொடர்வதே ஆபத்துதவிகளைப் பற்றி அறிவதற்கு உபாயம் என்று எண்ணி மாறுவேடம் பூண்டு அவன் அறியாதபடி பின் தொடர்ந்து சென்றான். உறையூருக்கு அருகில் வந்த பிறகு, தஞ்சையில் பொன்னியின் செல்வருக்கு நடக்கப் போகும் முடிசூட்டு விழாவைப் பார்ப்பதற்காக மக்கள் திரள் திரளாகச் சென்று கொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் ராக்கம்மாளும் கலந்து கொண்டாள். ஆயினும் ஆழ்வார்க்கடியான் அவளை விடாமல் பின் தொடர்ந்து தஞ்சை வரைக்கும் வந்தான். ராக்கம்மாள் கூட்டத்தோடு கூட்டமாகத் தஞ்சைக் கோட்டைக்குள்ளும் புகுந்து சின்னப் பழுவேட்டரையரின் அரண்மனையைச் சுற்றி அவள் வட்டமிட்டதைக் கண்டதும் அவனுக்கு மிக்க வியப்பு உண்டாயிற்று. உடனே அருள்மொழி வர்மரிடமும் வந்தியத் தேவனிடமும் போய் இச்செய்தியைத் தெரிவித்தான். ராக்கம்மாளைச் சிறைப்படுத்தி விடலாமா என்று முதலில் அவர்கள் யோசனை செய்தார்கள். அப்படிச் செய்ய வேண்டாம் என்றும், அவள் எதற்காக வந்திருக்கிறாள் என்பதைத் தெரிந்து கொள்வதே முக்கியமானதென்றும் தீர்மானித்தார்கள். சின்னப் பழுவேட்டரையரின் மகளுக்கு அவள் ஏதோ செய்தி கொண்டு வந்திருக்க வேண்டும் என்று ஊகித்தார்கள். சின்னப் பழுவேட்டரையரிடம் இப்போது அதைச் சொல்ல வேண்டாம் என்றும், முடிசூட்டு விழாவின் போது அவரைச் சபா மண்டபத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்கு அதை உபயோகித்துக் கொள்ளலாம் என்றும் முடிவு செய்தார்கள்.

ஆழ்வார்க்கடியான் மறுபடியும் சின்னப் பழுவேட்டரையரின் அரண்மனைக்கு அருகில் சென்ற போது ராக்கம்மாளைக் காணவில்லை. முடிசூட்டு விழாவுக்காக வந்த ஜனக்கூட்டம் மேலும் மேலும் அதிகமாகிக் கொண்டிருந்தது. ஆழ்வார்க்கடியான் அந்தக் கூட்டத்தில் கலந்து நின்று அரண்மனை வாசலைக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். இரண்டு பெண்கள் அரண்மனையிலிருந்து வெளியில் வந்தார்கள். அவர்களில் ஒருத்தி இடுப்பில் குழந்தையையும் வைத்துக் கொண்டிருந்தாள். வந்தவர்களில் ஒருத்தி ராக்கம்மாள் என்று உடனே தெரிந்து விட்டது. இன்னொருத்தி தலையில் முக்காடிட்டு முகத்தைப் பாதி மறைத்துக் கொண்டிருந்தாள். அவள் சின்னப் பழுவேட்டரையரின் மகளாயிருக்கலாம் என்று திருமலை நம்பி ஊகித்தான். அவர்களைத் தடுத்து நிறுத்துவதா, அல்லது எங்கே போகிறார்கள் என்று பார்ப்பதா என்பதை அவனால் நிச்சயிக்க முடியவில்லை. இதற்குள் அவர்கள் ஜனக் கூட்டத்தில் புகுந்து மறைந்து விட்டார்கள். கோட்டை வாசலை நோக்கித்தான் அவர்கள் போயிருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டு ஆழ்வார்க்கடியான் அங்கே போனான். கோட்டை வாசலுக்கு அப்பால் சிறிது தூரத்தில் வைத்திருந்த பல்லக்கில் அவர்கள் ஏறுவதையும் குதிரை வீரர்கள் புடைசூழப் போவதையும் பார்த்து விட்டான். இனி சின்னப் பழுவேட்டரையரிடம் இந்தச் செய்தியைச் சொல்லாமல் தாமதிக்கக் கூடாது என்று சபா மண்டபத்துக்கு வந்தான்.

அந்தச் சமயம் பொன்னியின் செல்வர் தமிழ்ப் புலவரைப் பார்த்துப் பேசும் சமயமாயிருந்தது. சின்னப் பழுவேட்டரையரிடம் ஆழ்வார்க்கடியான் செய்தியைச் சொன்னதும் அவர் உடனே அவனுடன் கிளம்பினார். தமது அரண்மனைக்குச் சென்று மகளைத்

தேடினார். மகள் இல்லை என்று அறிந்து திடுக்கிட்டார். ஆழ்வார்க்கடியான் கூறிய செய்தி உண்மையாகவே இருக்க வேண்டுமென்று தீர்மானித்தார். திரும்பி அவர் சபா மண்டபம் வருவதற்குள்ளே "மதுராந்தக உத்தமச் சோழ சக்கரவர்த்தி வாழ்க!" என்ற கோஷங்கள் கிளம்பின. சபா மண்டபத்தில் நடந்ததை அறிந்த பிறகு இனி அங்கே தமக்கு வேலை இல்லை என்பதை உணர்ந்து கொண்டார். சில அந்தரங்கமான ஆட்களைத் தம்முடன் அழைத்துக் கொண்டு ஓடிப் போன மகளைத் தேடிக் கொண்டு புறப்பட்டார். தம்முடைய புதல்வி சோழ குலத்தின் பரம்பரைப் பகைவர்களான பாண்டிய குலத்து ஆபத்துதவிகளுடன் சேர்வதா என்று எண்ணியபோது அவருடைய நெஞ்சம் கொதித்தது. அதைக் காட்டிலும் அத்தகைய மகளைத் தம் கையினாலேயே கொன்று விடுவது மேல் என்று எண்ணி விரைந்து சென்றார்.

அன்றிரவு உத்தமச் சோழ சக்கரவர்த்தியின் பட்டாபிஷேக ஊர்வல வைபவங்கள் கோலாகலமாக நடந்து முடிந்த பிறகு ஆழ்வார்க்கடியான் நம்பி அருள்மொழி வர்மரிடம் அன்று மத்தியானம் நடந்த விவரங்களைக் கூறினான். அருள்மொழி வர்மர் வந்தியத் தேவனோடு கலந்து யோசித்தார். ரவிதாஸன் கூட்டத்தார் தந்திர மந்திரங்களிலே எவ்வளவோ கைதேர்ந்தவர்கள் என்பது அவர்கள் மூவருக்கும் தெரிந்திருந்தது. முன்கோபக்காரரான சின்னப் பழுவேட்டரையரால் அவர்களுடைய தந்திரத்தை வெல்ல முடியாதென்றும், அவர்களிடம் சிக்கிக் கொண்டு ஆபத்துக்குள்ளாவார் என்றும் எண்ணினார்கள். தமது அருமை மகளையே கொல்லுவது போன்ற விபரீதமான காரியத்தைச் செய்யக் கூடியவர் என்றும் நினைத்தார்கள். ஆகையால், சின்னப் பழுவேட்டரையரைக் காப்பாற்றி அழைத்து வருவதற்கும், பாண்டிய நாட்டு ரவிதாஸன் கூட்டத்தார் எங்கே இருக்கிறார்கள், என்ன திட்டமிட்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து வருவதற்கும் வந்தியத் தேவனும் ஆழ்வார்க்கடியானும் புறப்பட்டுப் போவது நலம் என்ற முடிவுக்கு வந்தார்கள்.

இவ்வாறு சின்னப் பழுவேட்டரையர் தமது மகளையும் அவளைத் தம்மை அறியாமல் அழைத்துச் சென்ற சதிகாரர்களையும் பின் தொடர்ந்து போக, அவர் சென்ற வழியை ஆங்காங்கு விசாரித்துக் கொண்டு வந்தியத் தேவனும் ஆழ்வார்க்கடியானும் சென்றார்கள். சின்னப் பழுவேட்டரையர் குறுக்கும் நெடுக்குமாக அங்குமிங்கும் அலைந்துவிட்டுச் சென்றிருக்க வேண்டும் என்று பின்னால் சென்ற இருவரும் கண்டார்கள். இதிலிருந்து அவருடைய மகளைக் கொண்டு போனவர்கள் வேண்டுமென்று அவரை ஏமாற்றி வேறு வழியில் போகச் செய்ய முயன்றிருக்க வேண்டும் என்று முடிவு கட்டினார்கள். காவேரிக் கரையோரமாக மேற்கு நோக்கி நெடுந்தூரம் பிரயாணம் செய்த பிறகு, அமராவதி நதி காவேரியுடன் கலக்குமிடத்தில் திசை மாறி, அந்தக் கிளை நதிக்கரை வழியாகத் தென் மேற்குத் திசையில் பிரயாணம் செய்தார்கள். சேர நாட்டுக்கும் கொங்கு நாட்டுக்கும் எல்லையாக அமைந்திருந்த ஆனைமலைப் பிரதேசத்தை அடைந்தார்கள். ஆனைமலையின் அடிவாரத்தை அடைந்த பிறகு பிரயாணம் மிகக் கடினமாகி விட்டது. அந்த வனப் பிரதேசத்தில் மரங்கள் மிக அடர்த்தியாகவும் செழிப்பாகவும் வளர்ந்திருந்தன. வனவிலங்குகளின் பயங்கர உறுமல் நாலா திசைகளிலும் கேட்டது. குதிரைகளைச் செலுத்திக் கொண்டு போவது மிகவும் சிரமமாக இருந்தது. குதிரைகளை விட்டு விட்டுக் கால் நடையாகப் போனால் காட்டு மிருகங்களுக்கு அவை இரையாகி விடலாம் என்ற பயமும் இருந்தது.

கடைசியில் நண்பர்கள் இருவரும் மேலே குதிரையைச் செலுத்திப் போக இயலாத மிக அடர்ந்த காட்டுப் பிரதேசத்தை அடைந்தார்கள். சமீபத்தில் எங்கேயோ வேறு ஒரு குதிரை கனைக்கும் சத்தம் கேட்டது. அந்த இடத்தைத் தேடிப்பிடித்து அடைந்தபோது

"என் மனைவிக்கு, எக்ஸ்ரே மூளைங்க...!"

"அட, அவ்வளவு திறமைசாலியா!"

"ஆமாங்க...! நான், எங்கே காசை ஒளிச்சு வைச்சாலும், கண்டுபிடிச்சு எடுத்திடுவான்...!"

— ஆர். அப்துல்சலாம்.



சின்னப் பழுவேட்டரையர் ஏறி வந்த குதிரை அங்கிருப்பதையும், அதைக் காவல் புரிய ஆள் ஒருவன் இருப்பதையும் கண்டார்கள். சின்னப் பழுவேட்டரையரும் அவருடன் வந்த மற்ற மூவரும் அங்கிருந்து கால் நடையாகச் சென்றிருப்பதாக அந்த ஆள் தெரிவித்தான். தங்கள் குதிரைகளையும் அந்த ஆளைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லி விட்டு நண்பர்கள் மேலே போனார்கள். சூரிய வெளிச்சமே உள் நுழையாத கனாந்தகாரம் நிறைந்த காடுகளின் வழியாக அவர்கள் வெகு தூரம் சென்றார்கள். பின்னர், மரமடர்ந்த மலைப் பாதைகளில் ஏறிப் போனார்கள். பத்து அடி தூரத்துக்கு அப்பால் என்ன இருக்கிறது என்று தெரிந்து கொள்ளமுடியாத பாதைகளில் அவர்கள் போக வேண்டியிருந்தது.

கடைசியில், சற்று வெளிச்சம் தெரிந்த ஓர் இடத்தை அடைந்தார்கள். அங்கே மலை மீதிருந்து அருவி ஒன்று செங்குத்தாக விழுந்து கொண்டிருந்தபடியால் இந்த இடைவெளி ஏற்பட்டிருந்தது. அதற்கு அப்பால் தொடர்ந்து பிரயாணம் செய்வது இயலாத காரியமாகத் தோன்றியது. ஏனெனில் மலைச் சுவர் அங்கே அவ்வளவு செங்குத்தாக மேலெழுந்தது. எவ்வளவு தேடிப் பார்த்தும் மேலே ஏறப் பாதை எதுவும் தென்படவில்லை. அருவியில் குளித்துச் சிறிது இளைப்பாறி விட்டுத் திரும்பிப் போக வேண்டியதுதான் என்று நண்பர்கள் தீர்மானித்தார்கள். சின்னப் பழுவேட்டரையரும் அவருடன் வந்த ஆட்களும் வன விலங்குகளுக்கு இரையாகியிருக்க வேண்டுமென்று எண்ணினார்கள்.

அந்தச் சமயத்தில் அவர்கள் எதிர் பாராத அதிசயமான காட்சி ஒன்றைக் கண்டார்கள். மலைமேலே அருவியின் நெடு வீழ்ச்சி எங்கிருந்து ஆரம்பமாயிற்றோ, அங்கே இரண்டு மனித உருவங்கள் தெரிந்தன. போரிட்டுக் கொண்டே அவர்கள் அருவி விழும் இடத்தை நெருங்கி வந்து கொண்டிருந்தார்கள். அவர்களை உற்றுப் பார்த்ததில், இருவரும் தங்களுக்கு ஏற்கெனவே அறிமுகமானவர்கள்தான் என்று தெரிந்தது. ஒருவர் சின்னப் பழுவேட்டரையர்; இன்னொருவர் அவருடைய மகளை மணந்தவரான பழைய மதுராந்தகர். ஆகா! சண்டை என்ற வார்த்தையைக் கேட்டாலே முகத்தைச் சுளுக்கிக் கொண்டிருந்த மதுராந்தகர் இதற்குள் இவ்வளவு லாகவமாக வாளைக் கையாளக் கற்று கொண்டு விட்டது என்ன விந்தை? காலாந்தக கண்டருடன் சரிசமானமாகக் கத்திச் சண்டை இடுகிறாரே? ஐயோ! காலாந்தக கண்டர் பின்வாங்குகிறாரே? உண்மையிலேயே களைப்புற்றுப் பின் வாங்கி வருகிறாரா? அல்லது எப்படியும் தமது மருமகப் பிள்ளையாயிற்றே என்று தயங்கிப் பின் வாங்கி வருகிறாரா? எப்படியிருந்தாலும் அபாயகரமான அருவி விழும் முனையை நெருங்கி வருகிறாரே! ஐயோ! அங்கே செங்குத்தான அருவிப் பள்ளம் என்பது அவருக்குத் தெரியாது போலிருக்கிறதே!

வந்தியத் தேவனும் ஆழ்வார்க்கடியானும் பெருங் கூச்சல் போட்டு அவருக்கு எச்சரிக்கை செய்ய முயன்றார்கள். அவர்களுடைய முயற்சி பயன்படவில்லை! அருவி விழும்போது எழுந்த 'சோ' என்ற சத்தம் நூறு சிங்கங்களின் கர்ஜனையையும் இருநூறு யானைகளின் பிளிறல்களையும் விழுங்கிவிடக் கூடியது. இந்த இரண்டு மனிதர்களுடைய குரல் அந்தச் சத்தத்தை அடக்கிக் கொண்டு மேலே எழக் கூடுமா, என்ன?

ஆகவே, அவர்கள் கண் முன்னாலேயே அந்தக் கோர சம்பவம் நிகழ, அவர்கள் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க வேண்டியதாயிற்று. எதிரியாகிய மருமகனைப் பார்த்துப் போரிட்டுக் கொண்டு சிறிது சிறிதாகப் பின் வாங்கி வந்த சின்னப் பழுவேட்டரையர் அருவி முனைக்கு வந்து கால்கள் நழுவிச் செங்குத்தான அருவிப் பள்ளத்தில் விழுந்து விட்டார்! அவருடனே போரிட்டுக் கொண்டு வந்த பழைய மதுராந்தகன் பாறை முனையில் வந்து எட்டிப் பார்த்து விட்டு மறு நிமிடம் மறைந்து விட்டான்.

சின்னப் பழுவேட்டரையர் கால் நழுவிய இடத்திலிருந்து கீழேயிருந்த பள்ளம் சுமார் முக்கால் தென்னை மரம் உயரம் இருக்கும். இவ்வளவு உயரத்திலிருந்து விழுந்தவர் உயிர் பிழைப்பார் என்று எதிர்பார்க்க முடியாது. ஆயினும் அந்த மகாவீரருடைய உடலையாவது பார்க்கலாம் என்று எண்ணி நண்பர்கள் இருவரும் அருவிப் பள்ளத்தின் அருகில் ஓடினார்கள். சின்னப் பழுவேட்டரையரின் உடலைக் காணவில்லை. அருவி விழுந்து விழுந்து அங்கே பெரும் பள்ளமாகித் தண்ணீர் ததும்பிச் சுற்றிலும் இருந்த பாறைகளில் மோதிக் கொண்டிருந்தது. சின்னப் பழுவேட்டரையருடைய உடல் அந்த ஆழமான அருவிக் குளத்தில் மூழ்கியிருக்க வேண்டும் என்று ஊகித்தார்கள். ஒரு விதத்தில் இது நல்லதுதான். கரையில் பாறைகளின் மீது விழுந்திருந்தால் அந்த மகாவீரரின் உடல் சின்னா பின்னமாகப் போயிருக்கும். ஆழமான குளத்திலே



லிம்கா பார்ட்டிக்கு வாங்க
லிம்கா விருந்தாளி
லிம்கா வால்கள்
லிம்கா விளையாட்டு வீரர்
லிம்கா பயணி
பி.வி.ஓ. கிடையாது
Limca ®
RADEUS/PE/L/9-90-TAM
CONTAINS ADDED FLAVOUR CONTAINS NO FRUIT JUICE/PULP
® THE REGISTERED TRADEMARK OF PARLE (EXPORTS) LTD., BOMBAY



"இந்த நர்ஸரி ஸ்கூல் அப்படி என்னங்க உசத்தி?"

"டொனேஷன்லதான்!"

— சீர்காழி வி. ரேவதி.


விழுந்த படியால் அந்தக் கதியிலிருந்து தப்பி விட்டார். விரைவில் அவருடைய உடலை அருவி நீர்ச் சுழல் வெளியிலே கொண்டு வந்து தள்ளும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் எதிர் பார்த்தது வீண் போக வில்லை. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் சின்னப் பழுவேட்டரையர் வெளியில் வந்தார். நண்பர்கள் இருவரும் விரைந்து குளத்தில் குதித்து அவரைக் கரையில் கொண்டு வந்து சேர்த்தார்கள். முதலில், உயிரற்ற உடல் என்றுதான் எண்ணினார்கள். ஆயினும் ஒரு வேளை உயிர் இருக்கக் கூடாதா என்ற இலேசான நம்பிக்கையும் அவர்கள் உள்ளத்தில் இருந்தது. ஆகையால் தண்ணீரில் மூழ்கியவரை உயிர்ப்பிப்பதற்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்தார்கள். வெகு நேரத்துக்குப் பின்னர் சின்னப் பழுவேட்டரையர் மூச்சு விட்டுக் கண் விழித்துப் பார்த்தார். அவரால் அதிகம் பேச முடிய வில்லை. ஆயினும் சொல்ல வேண்டியதைச் சில வார்த்தைகளில் சொல்லி விட்டார்.

மிகப் பிரயாசையின் பேரில் காலாந்தக கண்டர் அந்த மலை உச்சியை அடைந்தார். அங்கே ஏறக்குறைய நூறு பேருக்கு நடுவில் அவருடைய மகள் இருந்தாள். ரவிதாஸன் காலாந்தக கண்டரைத் தங்களுடன் சேர்ந்து கொள்ளும்படி அழைத்தான். அவருடைய மருமகனே பாண்டிய நாட்டுக்கு உரியவன் என்றும், அவனுக்குப் பட்டம் கட்டப்போவதாகவும், சேர மன்னனும் இலங்கை அரசன் மகிந்தனும் புதிய பாண்டியனுக்கு உதவி செய்ய முன்வந்திருப்பதாகவும் கூறினான். அவர்கள் உத்தேசங்களை அறிவதற்காக முதலில் சின்னப் பழுவேட்டரையர் ரவிதாஸன் கூறியதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தார். பின்னர், அவர்கள் மீது சதிகாரர்கள் என்று குற்றம் சுமத்தித் தம் குமாரியைத் தம்முடன் அனுப்பி விடும் படி கேட்டார். "உம்முடைய மகள், உம்முடன் வந்தால் அழைத்துப் போகலாம்!" என்றான் ரவிதாஸன். சின்னப் பழுவேட்டரையர் மகளுடைய முகத்தைப் பார்த்தார். அவள் தன் கணவனுடைய கதி தனக்கும் ஆகட்டும் என்று கூறி அவருடன் வர மறுத்து விட்டாள். "உன்னை இவர்களுடன் விட்டுப் போவதைக் காட்டிலும் என் கையினாலேயே கொன்று விடுகிறேன்!" என்று கூறிக் காலாந்தக கண்டர் வாளை ஓங்கினார். அது காறும் மறைவாக இருந்த மதுராந்தகன் அச்சமயம் திடீரென்று தோன்றி "என் மனைவியைக் கொல்லுவதற்கு நீ யார்?" என்று கூறி வாட்போர் தொடங்கினான். இதனால் காலாந்தக கண்டருக்குச் சிறிது திகைப்பு உண்டாயிற்று. தம் மருமகனைத் தம் கையினாலேயே கொன்று தம் குமாரியைக் கைம்பெண் ஆக்குவது நியாயமா என்ற ஐயம் அவர் மனத்தில் உதித்து விட்டது. அவர் மனத்தில் ஏற்பட்ட குழப்பத்தினால் தீவிரமாகப் போர் செய்ய முடியவில்லை. யோசித்துக் கொண்டே பின் வாங்கினார். பின்னால் அருவிப் பள்ளம் இருப்பது தெரியாமல் அதில் விழுந்து விட்டார்.

இதையெல்லாம் தட்டுத் தடுமாறிச் சொல்லி முடித்து விட்டு, "நான் இனி உயிர் பிழைக்கப் போவதில்லை. என் முடிவு நெருங்கி விட்டது. என்னை இங்கேயே விட்டுவிட்டு நீங்கள் விரைந்து செல்லுங்கள். சேர நாட்டின் மீதும் ஈழ நாட்டின் மீதும் உடனே சோழ சைன்யம் படை எடுத்துச் செல்லட்டும். பொன்னியின் செல்வரை மதுரைக்கு அழைத்துச் சென்று 'சோழ பாண்டியன்' என்ற அபிஷேகப் பெயரைச் சூட்டிப் பட்டம் கட்டச் செய்யுங்கள். இந்த மூன்று காரியங்களையும் உடனே செய்யா விட்டால், சோழ சாம்ராஜ்யத்துக்குப் பேரபாயம் உண்டாவது நிச்சயம். மறுபடியும் பழையபடி பாண்டிய ராஜ்யம் தனியாகப் பிரிந்து போய் விடும்! உடனே விரைந்து செல்லுங்கள்!" என்று காலாந்தக கண்டர் கூறினார். அவரை இந்த நிலையில் அநாதையாக விட்டு விட்டுப் போக நண்பர்களுக்கு மனம் வர வில்லை. ஆகையால் இருவரில் ஒருவர் அவரைப் பார்த்துக் கொள்வது என்றும், இன்னொருவர் தஞ்சைக்குப் போவது என்றும் தீர்மானித்தார்கள். இருவரில் வேகமாகக் குதிரை விடக் கூடியவன் வந்தியத்தேவன். ஆதலால், அவனே புறப்பட வேண்டியதாயிற்று.

(தொடரும்)



''அப்பா போதையில இருக்கும்போது, மார்க் ரெண்டு ரெண்டாத் தெரியும்; சுலபமாக் கையெழுத்து வாங்கிடலாம்னு பார்த்தா அதுலேயும் ஒரு இடைஞ்சல்!''

''என்னடா...?''

''நாலு சப்ஜெக்ட்ல, ஏன் ரெண்டு ரெண்டு சைபர் வாங்கியிருக்கேன்னு கேட்பாரே!''


— சீர்காழி வி. ரேவதி.

''சியாமளா மகாபாரதம் முடியப் போறதேன்னு ஒரேயடியாக் கவலைப் படறா!''

''அவ்வளவு ஈடுபாடா?''

''ஆமா, அவ மாமியாருடன் சண்டை போட அதிலே புதுப் புது யுக்திகள் கிடைச்சுதாம்.''

— திலகவதி.





''லீவில் இருந்தபோது நேரத்தை வீணாக்காம நிறையப் படிச்சேன்....''

''ரெண்டு..... மூணு புத்தகத் தலைப்புச் சொல்லுங்களேன்.....''

''அடடா, தலைப்பைப் படிக்க மறந்துட்டேனே!''

— ராஜிராதா.

கல்லூரி முதல்வர்: நம்ம காலேஜோட மதிப்பையும் பெருமையையும் நீங்க தான் காப்பாத்தணும்...

மாணவர் தலைவன்: சரி சார். சீக்கிரமா ஸ்டிரைக் பண்ண ஆரம்பிச்சுடறோம். கவலைப்படாதீங்க!

— ஆர். ரத்தினசாமி.





கிளார்க்: என்ன சார், இது? அர்ஜென்ட் ஃபைலோட, பத்து ரூபா வெச்சுக் கொடுக்கிறீங்க...?

மானேஜர்: இருக்கட்டும்பா... எனக்கு இந்த வேலை இன்னிக்கே முடிஞ்சாகணும்...!

— ஆர். அப்துல் சலாம்.

[illegible]

ஒரு விதத்தில் அந்தத் தகவலைச் சாரதா எதிர்பார்த்துக் கொண்டிருந்ததால் சுப்புராஜு சொன்ன போது அதற்குண்டான அதிர்ச்சி ஏற்படவில்லை. ஆனால் ரொம்ப வருத்தமாக இருந்தது.

சுப்புராஜு அவளை நேராகப் பார்க்காமல் ஒருவாறு கண்ணைச் சுருக்கிக் கொண்டு சிறிதே அவமானத்துடன்தான் சொன்னான்.

''அவரு, நிச்சயம் தவறாம தினம் அந்த வீட்டுக்குத்தான் அக்கா போறாரு. ஆபீஸ்லேருந்து பெரும்பாலும் மூணு மணிக்குக் கிளம்பிட்டு அங்கே போயிடறாரு. ராத்திரி எப்ப வீட்டுக்கு வர்றாரு?''

''ஒம்பது ஒம்பதரை.''

''அதுவரைக்கும் அங்கதான் இருக்காரு. ஒப்பனாக் கார்ல போய் வர்றாங்க. தினம் வீடியோ காஸெட்டு வாங்கிட்டு வர்றாங்க. பாக்கறாங்க போலே.''

''அவளைப் பார்த்தியாடா சுப்பு?''

''பார்த்தேன் அக்கா.''

''எப்படி இருக்கா?''

''உன்னைவிடச் சின்னவ.''

''கறுப்பா, சிவப்பா, அழகா, குண்டா, எப்படிடா இருக்கா?''

''எனக்கு என்னவோ அப்படி ஒண்ணும் பெரிய ரூபவதின்னே சொல்ல முடியலை. கொஞ்சம் ரெட்டை நாடியாப் பெரிசாப் பொட்டு வெச்சுக்கினு... பார்த்தாலே அப்படியே ரெண்டு கன்னத்தையும் பிடிச்சுக் கிழிக்கலாம்னு ஆத்திரம் வருதுக்கா! அத்தானுக்கு எப்படிப் புத்தி இப்படிப் போவுது...? உனக்கு என்ன குறை?''

''விடுடா!''

''ரமேஷுக்குத் தெரியுமா?''

''தெரியாது. தெரிஞ்சாலும் அவன் மனசுக்குள்ளேதான் வச்சுப்பான். பன்னெண்டு வயசுக்கு அவனுக்கு எத்தனை அழுத்தம்!''

''அக்கா, நான் மாப்பிள்ளைகிட்டே நேராக் கேட்டுடவா?''

''இல்லை சுப்பு. கேட்க வேண்டியது நான்!''

''அத்தானை நீ தூக்கிடுக்கா! இல்லை விட்டு விலகிடு!''

''விலகி வந்தால் நீ என்னை வைச்சுக் கிட்டுச் சோறு போடுவியா? சுப்பு, உன் பெண்சாதி சம்மதிப்பாளா? சுப்பு, எனக்குப் போக்கிடம் இருக்குதா, சுப்பு?'' சுப்புவிடம் இதற்கு நேரடியான பதில் இல்லை.

''அப்பா, அம்மா இருந்திருந்தால் இந்த மாதிரி நடந்திருக்குமா? அப்பா இருக்கிற வரைக்கும் எத்தனை பயந்துக்கிட்டு மரியாதையா இருந்தாரு மாப்பிள்ளை? தான் பண்றது தப்பு, அநியாயம்னு முதல்ல அவரு உணர்றா மாதிரி பளிச்சுன்னு சொல்லிடு.''

''சொல்லி?''

சுப்புராஜு மௌனமாக இருக்க, சாரதா அவனுக்குக் காப்பி கொண்டு வரச் சென்றாள். அவளுடன் வந்த சுப்புராஜு ''நாலு ஆளை வச்சு அந்தப் பொம்பளையை உண்டு இல்லைன்னு அடிச்சுப் போட்டுடுவோமா?''

''தப்பு நம்மாளுகிட்ட இருக்கிறப்ப, அவளை எதுக்கு அடிக்கணும்?''

''கல்யாணம் ஆன ஒரு ஆள் கூடச் சகவாசம் வெச்சுக்கறது தப்புன்னு தெரிய வேண்டாமா அந்த முண்டைக்கு?''

''இவர் புத்தி எங்கே போச்சு ராஜு! ஒரு ஆம்பிளைன்னா என்ன வேணாச் செய்யலாமோ?''

''கேட்டுடு அக்கா, தயங்காதே.''

''கைல வளையல்லாம் போட்டிருக்காளாடா நகை?''

''சரியாப் பார்க்கலை.''

''என்ன மாதிரி சேலை கட்டிட்டிருந்தா?''

''சரியாப் பார்க்கலை அக்கா. பாண்டி பஜார்ல பாத்திரக் கடை இருக்குது பாரு, அங்க ஒருமுறை கார்ல பார்த்தேன். ரெண்டு பேரும் பழரசம் பருகிட்டு இவரு அவ தோள் மேல கை! சே... சொல்றதுக்கே அசிங்கமா இருக்குது.''

காப்பி கலக்கையில், ''அக்கா, நீ என்ன செய்யணும்னு சொல்றியோ, அப்படிச் செய்யறேன். இந்தாளுகிட்ட ஏதும் இரக்கம் காமிக்காதே. எனக்கு ராபர்ட்ஸன் பேட்டையில ரெண்டு ரவுடிங்களைத் தெரியும். நாலு தட்டுத் தட்டிப் பல்லைப் பேத்துரச் சொல்றேன்.''

சாரதாவுக்கு அவன் பேசுவது மனத்தில் பதியவில்லை. மணப்பந்தலின் எரிந்த நெருப்பும், தேனிலவுக்குச் சென்றிருந்த போது, ஜகதீஷ் சிகரெட் குடிப்பார் என்று தெரிந்த

சுஜாதா

அதிர்ச்சியும்... அப்போதே அவர் கண்கள் அலைந்ததும்... வேலைக்காரி, எதிர்விட்டு ராமசுவாமியின் மனைவி, அக்கா பெண் காஞ்சனா தன் தங்கை காமாட்சி இவர்கள் பேரில் அவர் செலுத்திய கவனங்களும்... வழிந்த அசடுகளும்.

ரத்தத்தில் சோரம் ஊறிப் போயிருந்த மனுஷன். அடிப்பதாலோ பல்லைத் தட்டுவதாலோ, மோகம் மறையாது. ஏனோ அவருக்கு அந்த ஆசை தோன்றியது. 'என்னைப்



மத்யமர் — வாசகர் விமர்சனம்
உடனே எழுதுங்கள்!

'மற்றொருத்தி' மத்யமர் வரிசையில் சுஜாதா எழுதி வரும் எட்டாவது கதை இது. இந்தக் கதையைப் படித்து முடித்ததும், இக்கதை பற்றிய ஏதோவொன்றைச் சொல்ல வேண்டும் போல் இருக்கிறதல்லவா! அந்த ஏதோ ஒன்று எதைப் பற்றி? கதையின் கருவைப் பற்றியா அல்லது கதையின் நடையோட்டம் பற்றியா, இல்லை பாத்திரப் படைப்புக்களைப் பற்றியா? 'மற்றொருத்தி' கதை பற்றி நீங்கள் சொல்ல நினைப்பது எதுவானாலும் அதை உடனே ஓர் அஞ்சலட்டையில் எழுதி எங்களுக்கு அனுப்புங்கள்.

பிரசுரமாகும் ஒவ்வொரு விமர்சனத்துக்கும் ரூ. 25 பரிசு. சிறந்த விமர்சனத்துக்கு ரூ. 50 பரிசு.

உங்கள் விமர்சனங்களை 19.7.90க்குள் கல்கி அலுவலகத்திற்கு வந்து சேரும்படி அனுப்பி வையுங்கள்.

— ஆசிரியர்

பதவி நீக்கியவள் எப்படி இருப்பாள்?"

"நான் அவளைப் பார்க்கணும் ராஜு. ஒரு முறையாவது பார்க்கணும். வீட்டு விலாசம் சொல்லு."

"வேண்டாங்க்கா. அங்கேல்லாம் போகாதே. மரியாதை கெட்டுப் போயிடும். அந்த மாதிரி பொம்பளை என்ன வேணாப் பேசுவா! எத்தனை நாளா இந்த மாதிரி நடக்குதுக்கா?"

"தெரியாதுப்பா. ஓர் ஆம்பிளை வெளியே போனா, வீட்டில இருக்கிறவ பொத்தில இருக்கிற மாதிரி, அவன் திரும்பி வர்ற வரைக்கும் மனைவிக்கு விசுவாசமா இருக்காருன்னு நம்பிக்கைதான். இந்தாளு வீட்டுக்குள்ளேயே விசுவாசமில்லாம இருந்தவரு. வேலைக்காரி, சேலையை உருவுறதைக் கண்ணால பார்த்திருக்கேன்."

"அப்பவே பளிச்சுன்னு பல்லில் போடறாப்பலச் சொல்லியிருக்கணும்!"

"சொன்னேண்டா!"

"என்ன சொன்னார்?"

"இனிமே பண்ண மாட்டேன், மன்னிச்சுடுன்னாரு. உடம்பு பூராப் பொய்யி! ஒரு மாதம் அவர் கூடப் பேசாம இருந்தேன். என்ன செய்ய? வீட்டில இருக்கிற சகிக்க முடியாத தனிமை. பேசித் தொலைக்க வேண்டியிருக்குது... மற்ற பேருங்களுக்காகவாவது சப்பைக்கட்டுக் கட்ட வேண்டியிருக்குது. ரமேஷ் கேக்கறானில்லை, எம்மா அப்பா கூடப் பேச மாட்டேங்கறேன்னு?"

"இந்தாளை எப்படி வழிக்குக் கொண்டு வர்றது?"

"அதான் யோசிக்கிறேன்" என்றாள்.

கண்களில் நீர் தன்னிச்சையாக வடிய, "அழாதே அக்கா!" என்றான் சுப்புராஜு.

சாரதா நிறைய இதைப் பற்றி யோசித்திருக்கிறாள். கண்ணுக்கு முன்னால் நடக்காத வரை ஏன் கவலைப்பட வேண்டும்? வீட்டுக்கு வெளியே, ஏதோவொரு மாலையில், ஏதோ ஒரு வீட்டில் என் கணவன் யாரோ ஒரு சிறுக்கியுடன் பேசுகிறான் என்பதால் நான் எவ்விதம் பாதிக்கப்படுகிறேன்? எனக்கு என்ன வலியா, காயமா? இல்லை, மனத்தில் காயம். மனம் எப்படிக் காயப்படும்? தம்பி வந்து சொன்னதால்தானே வம்பு? சொல்லாமலே இருந்தால் அல்லது கேட்காமலே இருந்தால். துரோகம், மனவலி என்பதெல்லாம் மனசைப் பொறுத்தது. 'மனசைக் கல்லாக்கிக் கொள்' என்று அம்மா எத்தனை தடவை அறிவுரை சொல்லியிருக்கிறாள்.

யோசித்தால் அது அல்ல அவள் வருத்தம்... அவளுடைய பெண்மைக்கு, ஆதாரமான பெண் தன்மைக்கு இழைக்கப்பட்ட அநீதி இது. அவள் அழகில்லை. மற்றொருத்தி அவளைவிட விரும்பத்தக்கவள் என்கிற சித்தாந்தம்தான் ஜீரணிக்க முடியாதது.

கணவன் கல்யாணம் செய்து கொள்ளும்போது அவள் எழுதப்படாத பல விதிகளுக்கு இசைகிறான். அவைகளில் முக்கியமானது உன்னை விரும்புவேன், உன்னையே நாடுவேன் என்பது. இந்த விதி மீறப்படும் போதுதான் மனைவி மிகவும் பாதிக்கப்படுகிறாள். காரணம் பொருளாதாரம்.

இந்திய மனைவிக்குக் கணவனை விட்டால் வேறு புகல் இல்லை. கணவன்தான் அவளுக்குச் சோறு, நிழல், உடை எல்லாம். இந்த அஸ்திவாரம் கலையும் போது அவள் மிகவும் அடிபடுகிறாள்.

தனியாக வாழ முடியுமா என்னால்? என் கைவளைகளை விற்று ஜீவனாம்சம் கோரி... வேலைக்குச் சென்று ரமேஷைப் படிக்க வைத்து அவன் சம்பாதிக்கும்வரை... அதற்கெல்லாம் மனோ திடம் அவளிடம் இல்லை. தனியாக ஒரு பஸ் விசாரித்துப் போனதில்லை. தனியாக ஒரு சினிமா இல்லை, மற்ற ஆண்களுடன் கணவன் இல்லாத போது பேசியதில்லை. கணவன் இல்லாத போது அலங்காரம் கூட இல்லை.

இந்த மாதிரியான வீட்டு மனைவிகளின் மந்தையில் ஒருத்தி நான்!

If you can't cure it endure it!

ஜெகதீஷ் வழக்கம் போல ராத்திரி ஒன்பதரைக்கு வந்தான். சட்டையைக் கழற்றி

ஹாங்கரில் மாட்டும் போது சுவாசத்தில் ஆல்கஹால் வாசனை இருந்தது. நேராகப் படுக்கை அறைக்குச் செல்ல, —

''சாப்பிடலை?''

''சாப்பிட்டாச்சு.''

''வெளியே சாப்பிடறதா இருந்தா முன்னமே சொல்லக் கூடாதா? நான் பைத்தியம் மாதிரி முழுச் சோத்தையும் வடிச்சு வைச்சு...''

நிமிர்ந்து பார்த்து, ''இப்ப என்னங்கறே? நான் சாப்பிடணும்; அவ்வளவுதானே? போடு இலையை.''

அவனையே ஆழ்ந்து பார்த்து, ''நீங்க பண்றது நல்லா இருக்கா?''

''என்ன?''

''அந்தப் பொம்பளை வீட்டுக்குத் தினம் போய்ட்டு வர்றீங்களே?''

''எந்தப் பொம்பளை?''

''அதான்... அவதான்.''

''பேர் சொல்லு.''

''நீங்க பண்றது நியாயமா சொல்லுங்க.''

''இல்லாததும் பொல்லாததும் எல்லாரும் சொல்வாங்க. எந்தப் பொம்பளை? என்ன பேரு? சாரதா நீ மத்தவங்க சொல்றதை நம்பாதே...''

''கண்ணால பார்த்ததை...?''

''எங்கே பார்த்தே? எப்பப் பார்த்தே?''

''நான் பார்க்கலை. தம்பி பார்த்தான்.''

''என்ன பார்த்தான்?''

''கேக்கவே நல்லால்லை.''

''சாரதா, உன் தம்பியைப் பாண்டி பஜார்ல வெச்சு, நானும்தான் பார்த்தேன். பின்னாடி ஒரு பொம்பளை கூட!''

''அது அவன் மனைவி!''

''தினம் ஒரு மனைவியா? மூக ஜாடை மாறுதா?''

''இல்லாததும் பொல்லாததும் சொல்லாதீங்க.''

''அதேதான் நானும் சொல்றேன். உன் தம்பி சொன்னது அத்தனையும் நிஜம்னு நம்பாதே. நடந்தது இதுதான். அந்தப் பொண்ணு என் ஆபீஸ் கலீக் ஒருத்தருடைய சிஸ்டர் இன்லா. இந்த ஊருக்குப் புதுசா வந்திருக்கா...''

வழக்கம் போல விவரமாகப் பொய் சொல்ல ஆரம்பித்தான். தேதி, பேர், இடம், பஸ் நம்பர், போன்ற பல்வேறு விவரங்களுடன் ஜோடனை. அவனுக்கு மிகவும் பழகிப் போய்விட்ட பொய்ப் பந்தல்!

''இப்ப க்ளியர் ஆச்சா?''

அவள் மௌனமாக இருக்க, ''அந்தப் பொண்ணு ஊருக்குப் போயாச்சு. இனிமே அந்தச் சந்தேகத்துக்கும் இடமில்லை.''

''உங்களை விட்டு எப்பவோ ஓடியிருப்பேன். ரமேஷுக்காகப் பொறுத்திருக்கேன்.''

''இப்ப என்ன நடந்துச்சுன்னே தெரியலையே?''

''எல்லாம் தெரியும். உங்களுக்கு எல்லாம் பாசாங்கு!''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை, தூங்கு!''

அருகே ஜகதீஷ் குறட்டை விட்டுத் தூங்க, ராத்திரி தூக்கமின்றி இருட்டில் கண் விழித்துப் படுத்திருந்த போது சட்டென்று அவளுக்கு அந்த யோசனை ஏற்பட்டது.

'எனக்குத்தான் அப்பா இல்லை; அம்மா இல்லை. ஜகதீஷுக்கு இருக்கிறார்களே. அம்மா, அப்பா. அவர்களிடம் போய்ச் சொல்வோம். முறையிடுவோம். உங்கள் பிள்ளை செய்றது சரிதானா? கண்டித்துச் சொல்லக் கூடாதா? அதற்குமுன் தம்பி ராஜு சொன்னது சரிதானா என்று ஒரு முறை பார்த்துவிட வேண்டும். எப்படி?

மறுதினம் பிற்பகல் ராஜுவின் அலுவலகத்துக்குச் சென்று, அவனையும் கூட்டிக் கொண்டு சென்றாள். டாக்ஸியிலேயே அவர்கள் வீற்றிருக்க, சரியாக மூன்றரைக்கு ஜகதீஷ் காரில் வந்து இறங்க, மாடியில் பழக்கப்பட்டவன் போல் நடந்து சென்று மணிப் பொத்தானை அழுத்த, கதவு திறக்க, இரண்டு கரங்கள் அவனைத் தோளில் மாலை போட்டு உள்ளே இழுத்துச் செல்வது தெரிந்தது. மொட்டை மாடியில் அவன் சட்டைகள் உலர்ந்து கொண்டிருந்தன.

''பாம் வெச்சு வெடிச்சுரலாம் போல வருது அக்கா. இப்பவே போய் இடிச்சுத் திறந்து அத்தானை வெளியே இட்டாந்து...''

பிரச்னைகள் செய்யும் பேருதவி


பிரச்னைகள் கண்டு
பீதி ஏன் மானிடரே?

பிரச்னைகள் எல்லாம்
நாற்காலி போலத்தான்!

நாற்காலி தன்னைத்
தலைமீது தாங்கித்
தள்ளாடு வாருண்டோ!

தரையிலே போட்டு
மேலேறி நில்லுங்கள்!

உயரமாகத் தெரிவதற்கு
உதவியாகும் பிரச்னைகள்!



— பாரதி சந்திரன்

''இல்லை ராஜு. இதை வேறு விதமாத் தீர்த்து வைக்கனும்!''

சாயங்காலம் அசோக்நகரில் இருந்த சொக்கலிங்கம் வீட்டுக்குச் சென்றாள். தனி விடு கட்டிக் கொண்டு காம்பவுண்டு சுவரும் தோட்டமுமாக இருந்தது விடு. நாய் அவளைப் பார்த்து ஒரு முறை குரைத்து விட்டு வாலாட்டியது. மரகதவல்லிதான் கதவைத் திறந்து அவளைப் பார்த்ததும் புன்னகை செய்து, ''வா, சாரதா, என்ன, அவன் வரலையா? எம் மகன்?''

''அவரு ஆபீஸிலிருந்து இன்னும் வரலைங்க.''

''ரமேஷ்?''

''அவன் இன்னும் பள்ளிக்கூடத்திலே இருந்து வரலைங்க.''

''ரெண்டு பேரையும் விட்டுட்டுத் தனியா வந்திருக்கே, ஏதும் முக்கியமான விஷயமா?''

''ஆமாம்மா!''

''உக்காரு. காப்பி சாப்பிடறியா?''

''சாப்பிடறேங்க. மாமா எப்படி இருக்காரு?''

''அப்படியேதான். மாறுதல் இல்லே... என்ன விஷயம் சொல்லு...''

''உங்க மகனைப் பத்தித்தான்.''

அவள் முகத்தில் சற்று கவலை தெரிந்தது. ''என்ன, ஏதாவது உடம்பு கிடம்பு சரியில்லையா?''

''அதில்லைங்க! உங்க மகன் மற்றொருத்தி சகவாசம் வெச்சிருக்காருங்க. அம்மா, நான் ரொம்ப யோசிச்சு என்னால பிரச்னையைச் சமாளிக்க முடியாததாலதாங்க பெரியவங்க உங்ககிட்டே வந்திருக்கேன். எனக்கு உங்களை விட்டா யாரும் இல்லைங்க.''

''மற்றொருத்தின்னா ஆபீஸ்லயா?''

''இல்லைங்க. ரெகுலரா சின்ன வீடும் பாங்களே... அந்த மாதிரி. தினம் ஆபீஸ் விட்டா அங்கேதான் போறாரு. ராத்திரி பத்து மணிக்குத்தான் வீட்டுக்கு வர்றாரு. ஞாயிற்றுக்கிழமைங்களில் காலைலயே போயிடறாரு...''

''யார் அந்தச் சிறுக்கி?''

''பேர் விவரம் எல்லாம் விசாரிக்கிறதுக்கு முன்னாடி உங்ககிட்ட புத்தி கேட்க வந்திருக்கேன், அம்மா.''

மாமியாரின் கைகளைப் பிடித்துக் கொண்டு. ''அம்மா, எனக்கு ஒரு வழி சொல்லுங்கம்மா! ரொம்பக் குழப்பத்தில இருக்கேன். பைத்தியம் பிடிச்சுடும் போல இருக்குது. வயித்தில ஸ்திரமா ஒரு கனம் ஒரு பயம் வந்துருச்சு. அம்மா உங்க வீட்டுக்கு மருமகளா வர்றப்ப பதினைஞ்சு வருஷங்களுக்கு முன்னால, 'என் மகன் ரொம்ப நல்லவன், தப்புத் தண்டா கிடையாது; பொய் கிடையாது; ஒரு கெட்ட பழக்கம் கிடையாது'ன்னீங்க... எல்லாமே தப்பும்மா! உடம்பு பூராப் பொய்ம்மா. உங்களுக்கு இது ஒரு மாதிரி அதிர்ச்சியா இருக்கலாம். ஆனா உண்மை இதுதான். வீட்டிலேயே பாட்டில், சிகரெட்டு எல்லாம் வெச்சிருக்காரு. எல்லாம் ஒளிச்சுத்தான் வெச்சிருக்காரு! எல்லாமே ஒளிவு!''

''நீ கேக்கக் கூடாதோ?''

''கேட்டா விஸ்தாரமாப் பொய் சொல்வாரு. 'என் ஃப்ரெண்டு ஒருத்தன் வெச்சுக்கன்னு கொடுத்தான். அது இதுன்னு... இதெல்லாம் விடுங்க. சின்ன விஷயங்க! பொம்பளை சபலம்!! கல்யாணமான மறு தினத்திலேருந்து கவனிக்கிறேன்! இதுவரைக்கும் எட்டு அல்லது ஒன்பது முறையாவது பல்வேறு சம்பவங்களை என்னால விவரிக்க முடியும். வேலைக்காரி, பக்கத்து வீட்டுல புதுசாக் கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்தவங்க, என் தங்கச்சி இப்படி... ஒழிஞ்சு போகட்டும்னு எத்தனை முறைதான் விட்டு வெச்சாலும் கடைசில இப்ப மனைவி என்கிற என் ஸ்தானத்துக்கே ஆபத்து வந்துடுச்சும்மா! மன்னிச்சுக்குங்க. உங்க மகனைப் பத்திப் பொறுக்க முடியாமத்தான் இந்தப் புகார்! என்கிட்ட நல்லவர்னு சொன்னீங்கம்மா... ஒண்ணு, உங்க மகனையே உங்களுக்குத் தெரியலை. இல்லே, நீங்களும் சேர்ந்து பொய் சொல்லியிருக்கீங்க! நெஞ்சில கைவைச்சுச் சொல்றேன்! நிராகரிப்பில இருக்கிற கொடுமை வேற எதிலும் இல்லைம்மா. ஒரு பெண் என்கிற ஆதாரமான அந்தஸ்து கலைஞ்சு போறப்ப எனக்கு எங்க நடுத்தெருவில விட்டுடுவாரோன்னு பயமா இருக்குது.''

''என்னை என்னம்மா செய்யச் சொல்றே?''

''உங்க மகனைக் கூப்பிட்டுப் புத்தி சொல்லுங்க முதல்ல. இல்லை, என்னையும் உங்க பேரனையும் இந்த வீட்டில ஏத்துக்குங்க. எனக்கு அந்தப் பொய் மனுசரோட குடித்தனம் செய்ய விருப்பமில்லை!''

மரகதவல்லி, யோசித்தாள். அவள் நெற்றிப் புருவங்கள் வில்லாக வளைந்து உதடுகள் துடிக்க ஆரம்பித்தன.

''இதைப் பத்தி ஏதாவது உங்கிட்ட ஆரம்பிச்சானா?''

''இல்லைங்க: அவரு எதுவும் சொல்லவே மாட்டாரு!''

''கிட்ட வா!''

அவள் அருகில் செல்ல அவளை அணைத்துக் கொண்டு ''என்னை மன்னிச்சுடு சாரதா!'' என்றாள். அவள் கண்களைத் துடைத்துக் கொண்டு, ''இப்படியெல்லாம் இருக்க மாட்டான்னு எதிர்பார்த்துத்தான் கல்யாணம் செய்து கொடுத்தேன். என் மேலே குற்றமில்லை. நல்லது நினைச்சுத் தான் செய்தேன். உங்கிட்டப் பொய் சொல்

லலை! உன்னைப் போல நானும் நம்பினேன்!''

''என்னவோ, ஏதோ எனக்கு ஒரு வழி சொல்லுங்க!''

''சொல்றேன். உனக்கு ஒரே ஒரு வழி தான் இருக்குது. உள்ளே வா.''

அடுத்த அறையில் — மாமனார் படுத்திருந்த அறைக்கு அழைத்துச் சென்றாள். பக்கத்தில் ஸ்டூலில் நிறைய மருந்து மாத்திரைகளும் பெட்பானும் ட்ரான்சிஸ்டரும் கொசுவலையுமாக மாமனார் படுத்திருந்தார். கண்கள் கலங்கிப் போய், ஒரே திசையில் பார்த்திருந்தன. முகத்தில் முள் தாடி. அருகில் சென்று மார்பைத் தட்டினாள்.

''எழுந்திருங்க. சாரதா வந்திருக்கால்ல.''

சாரதாவை அவர் மெதுவாகப் பார்த்துக் கைகூப்ப முயல, பார்கின்ஸன் தனமாக கைகள் உதற ஆரம்பித்து அடங்குவதற்கு ஒரு நிமிஷம் ஆயிற்று.

''இந்த மாதிரித்தான் எல்லாம் ஆடிப் போயிருச்சு! அடங்கிப் போயிருச்சு!''

''மாமா எப்படி இருக்கீங்க?''

''ஜகதீச வள்ளியா...?'' என்றார் பிரயத்தனமாக.

''வரலை.''


அந்தப் பதிலுடன் திருப்தி அடைந்தவர் போலக் கண்மூடிக் கொண்டார்.

''இவரைப் பார்த்தே இல்லை? அடிபட்டு விழுந்தவர் போல! நீ என் மவனைப் பத்தி விவரிக்கும் போது எனக்குத் திக்குன்னுச்சு! நீ விவரிச்சது அத்தனையும் இவருக்கும் பொருந்திச்சு! அதே வம்பு, அதே மச்சினி சகவாசம், அதே நப்பாசை, அதே பொய்யி! எட்டு வருஷம் ஒரு குசினிக்காரியோட தனி வீடு வெச்சுண்டு குடித்தனம் நடத்தினாரு! அம்மா சாரதா, இந்த வம்சத்திலேயே இந்தப் பழக்கம் இருக்குதும்மா. இப்ப எப்படிக் கிடக்கிறார் பாரு. அந்தப் பொய் சுமக்கிறவங்க நாங்க! சாரதா, 'எனக்கு ஒரு வழி சொல்லு'ன்னு கேட்டே. நமக்கெல்லாம் ஒரே ஒரு வழிதாம்மா!''

சற்று நேரம் மௌனத்துக்குப் பிறகு, ''காத்திருக்கிறது! என் மகனும் இவரைப் போல ஆடி அடங்கி ஒடிஞ்சு போய் இளமை கரைஞ்சு நரை வந்து, டயபடிஸ், டென்ஷன், ப்ரஷர் எல்லாம் வந்து அவனை வீழ்த்தி உன் காலடியில் வந்து விழுவான் பாரு. அப்பத்தான் உன் புருசன் உனக்கு முழுசாக் கிடைப்பான். அதுவரைக்கும் காத்திருக்கணும். வேற வழி இல்ல. நம்மால எதிர்நீச்சல் போட முடியாது.'' — சாரதாவை வாத்ஸல்யத்துடன் அணைத்துக் கொண்டாள்.

''என்னங்க, பாத்ரூம் போகணுமா?''

''ஆமாம்,'' என்று சொக்கலிங்கம் அவளைக் கைகூப்பி வணங்கினார்.



மாதம் ஒரு தொகுதி

பட்டுக்கோட்டைத் தொகுதியைப் பார்க்க வருகிறோம்!

கல்கியின் 'மாதம் ஒரு தொகுதி' என்ற திட்டத்தின் கீழ் நடந்த ஆறாவது குலுக்கலில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தொகுதி பட்டுக்கோட்டைத் தொகுதி!

இத்தொகுதியில் தமக்கு அடுத்தபடியாக வாக்குகள் பெற்ற இ. காங்கிரஸ் வேட்பாளரை விட 14,681 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றிருப்பவர் தி. மு. க. வைச் சேர்ந்த கே. அண்ணாதுரை.

இப்படித் தம்மை வெற்றி பெறச் செய்த பட்டுக்கோட்டைத் தொகுதி மக்களுக்கு, எம். எல். ஏ. என்ற முறையில் கே. அண்ணாதுரை என்ன செய்திருக்கிறார்? வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறாரா இல்லையா? பட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்த அனைவரும் தங்கள் எம். எல். ஏ. வான கே. அண்ணாதுரையிடம் கேட்க விரும்பும் கேள்விகளை எங்களுக்கு எழுதியனுப்பலாம். அவர் செய்யும் பணிகளைப் பற்றியும் விவரமாக எழுதலாம். கூடவே உங்கள் தொகுதி வளர்ச்சிக்காக என்ன செய்யலாம் என்கிற உங்கள் ஆலோசனைகளையும் எழுதலாம்.

நீங்கள் எழுதும் ஒவ்வொரு விஷயத்தையும் எம். எல். ஏ. கவனத்திற்குக் கொண்டு வந்து, அவருடன் எல்லா விஷயங்களையும் விவாதிப்போம். நேரடியாக வந்து சுற்றிப் பார்த்து உண்மைகளை ஆராய்வோம்.

கடைசியாக எங்கள் அனுபவங்களையெல்லாம் செப்டம்பர் மாதக் கல்கியில் கட்டுரையாக வெளியிடுவோம்.

பட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள வாசகர்களின் கடிதங்கள் கல்கி அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசித் தேதி: 3.8.90.

உறையின் மேல் 'மாதம் ஒரு தொகுதி' என்று குறிப்பிட்டு உடனடியாக எழுதியனுப்புங்கள்.

— ஆசிரியர்

அதிர்ஷ்ட தேவதை

14

எட்டு அடிச் சதுர அறைக்குள் சிறைப்பட்ட ரங்கனுக்கு ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு யுகமாக அலுத்தது. ரமணி நல்ல எண்ணத்துடன்தான் அவனைத் தன் வீட்டு மாடியில் தங்க வைத்திருக்கிறான். இதை அவன் உணர்ந்திருந்த போதிலும், ரமணி மீது அவனுக்குக் கோபம் வந்தது. அவன் ஏன் சுதந்திரமாக வெளியே நடமாடக் கூடாது? யார் அவனை என்ன செய்து விட முடியும்?

அறையில் ரமணி ஓர் அலாரம் கடிகாரத்தை வைத்திருந்தான். முக்கால் மணி நேரம் வேகமாக ஓடும் கடிகாரம். இப்போது அது நான்கு மணி என்று அறிவிக்க ரங்கன் சரியான நேரத்தைக் கணக்கிட்டுப் பார்த்தான். மூன்றே கால். பிற்பகல் ஒரு மணிக்கு ஆழ்வார்ப்பேட்டை ஓட்டலில் சாப்பிட்டு விட்டு வந்த அவனுக்குப் பசிக்கவில்லையென்றாலும், ஒரு 'ஸிங்கிள்' டீயாவது குடித்து வர வேண்டும் என்று தோன்றியது. சிறைக் கைதியைக் கூட அவ்வப்போது வெளியே உலாவ விடுவார்கள். ஏதானும் வேலை கொடுப்பார்கள். சுவாசிக்க நல்ல காற்று கிடைக்கும். லாட்டரியில் இருபத்தைந்து லட்சம் ரூபாய் பரிசு பெற்ற ஒரு பெரிய பணக்காரன் இப்போது சூழ்நிலை காரணமாக ஓர் அறையில் அடைக்கப்பட்டிருக்கிறான். ரங்கனுக்கு இதை நினைத்துப் பார்த்த போது அழுகையே வந்தது.

திடீரென்று கதவைத் தட்டும் ஓசை கேட்டது. ரமணி நேரத்துக்கு முன்னாலேயே வந்து விட்டானா? இருக்காது. ரமணி என்றால், 'ரங்கா' என்று குரல் கொடுத்திருப்பான். பின் யார் கதவை இடிக்கிறார்கள்?

அச்சத்துடன் அவன் கதவை லேசாகத் திறந்தான்.

''நான்தான் ரங்கா!''

''வாங்கம்மா.''

ரமணியின் தாயார் கோமதி புன்முறுவலுடன், ''ஏம்ப்பா பயந்துட்டியா?'' என்று கேட்டாள்.

''ஆமாம்மா. ரமணி சார் சொல்லியிருக்கார், நான் ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும்னு...''

''ரமணி எல்லா விவரத்தையும் எங்கிட்ட சொல்லியிருக்கான். கவலைப்படாதே... உன்னைப் பார்க்க ஒருத்தன் வாசல்லே நிக்கறான்.''

''யார் அம்மா?''

''பேர் கேட்டேன். வெங்கின்னான். இங்கே வரச் சொல்லட்டுமா... இல்லே நீ இறங்கிப் போய்ப் பார்க்கறியா?''

''நானே போறேம்மா.''

''வெங்கி நல்லவன்தானே?''

''ரொம்ப நல்ல மனுசன் அம்மா.''

ரங்கன் அவசர அவசரமாய் வெளியேறினான்.

காம்பவுண்டு கேட் அருகே போன பிறகுதான் அதிர்ச்சி அவனைத் தாக்கியது. அவனுக்காக மயில்சாமி காத்துக் கொண்டிருந்தான். ரமணியை மரக் கழியால் அடிக்க வந்தவன், எப்படி அவன் இருக்கும் இடத்தைத் தேடிக் கண்டுபிடித்திருக்கிறான்?

''வா, மாப்ளே... எம்மாம் நேரம் நான் காத்துட்டிருக்கிறது?'' என்றான் மயில்சாமி.

ரங்கன் அவனிடமிருந்து தப்பி ஓட நினைத்து விரைவாய்த் திரும்ப, மயில்சாமி ஒரே எட்டில் பாய்ந்து ரங்கனுடைய கையைப் பிடித்தான்.

''ஏன் பயந்து சாகறே.. நான் என்ன உன்னைக் கொலை செய்யவா வந்திருக்கேன்?''

ரங்கனுக்கு ஒருவிதமான அசட்டு தைரியம் திடீரெனப் பிறந்தது.

''ரமணியை நீ தாக்கினதுக்கு போலீஸ்லே புகார் கொடுத்திருக்காங்களே? நீ எப்படி இங்கே வந்தே?''

''எவனுக்கு தில்லு இருக்கு, எம் பேர்ல கம்ப்ளெயிண்ட் கொடுக்க... விசயம் தெரியுமா மாப்ளே, எனக்கு வேலை பூட்டுது.''

ரங்கன் மௌனமாக அவனையே பார்த்தான்.

''ஏன் அப்படிப் பாக்கறே... எனிக்கு இன்னாத்துக்கு இனிமே வேலை? என் மருமகப் புள்ளைதான் லட்சாதிபதியாயிட்டானே!''

''உனக்கு என்ன வேணும், மயிலு? நான் இங்கேதான் இருக்கேன்னு உனக்கு யார் சொன்னாங்க?''

''இதொரு கேள்வியா, மாப்ளே? ரமணி கையில நீ இருக்கே... அவன் உன்னை எங்கே உட்கார்த்தி வைப்பான்? பெரிய ஓட்டல்லேயா... மயில்சாமின்னா நீ வர மாட்டேன்னு. வெங்கின்னேன்... அந்த

பி.வி.ஆர்.

அம்மாவும் ஏமாந்திடுச்சு...''

''உன்னோடு நின்னு பேச எனக்கு இஷ்டம் இல்லே.''

''எனக்கு இருக்குதே!'' மயில்சாமி சிரித்தான்.

''என்ன வேணும்?''

''நான் எதுக்கு வருவேன், மாப்ளே? மொதல்ல நீ வேணும். அப்பாலே உன் பணம் வேணும்.''

''நான் தனத்துகிட்டே சொல்லிட்டே வீட்டை விட்டு வந்துட்டேன் மயிலு... நீ என்னைத் தொந்தரவு செய்யாதே.''

''தனம் என் மவ. அவ உன் பொண்ஜாதி.''

''எனக்கு அவளோட வாழ இஷ்டமில்லே... அவ செலவுக்கு மாசா மாசம் பணம் அனுப்பிடறதாச் சொல்லிட்டேன். நீ போயிரு.''

''நீ சொன்னாப் போயிடுவேனா, மாப்ளே... அவளோட வாழ உனக்கு விருப்பம் இல்லாட்டி என்ன, அவளுக்கு உன்னோடு வாழ ஆசை இருக்கே.. வா வூட்டுக்கு.''

''முடியாது.''

''உனக்கு ஒரு விசயம் தெரியுமா, ரங்கா?''

முதன் முதலாக 'மாப்பிள்ளை' சொந்தத்தைக் கை விட்ட மயில்சாமியின் குரல் இறுகியது.

'என்ன?' என்று ரங்கன் கேட்கவில்லை.

''நீ செத்தா உன் பணமெல்லாம் என் பொண்ணுக்குத்தான் வரும். நீ சாக ஆசைப்படறியா?''

சிலிர்த்தெழுந்த பயத்துடன் ரங்கன் மயில்சாமியைப் பார்த்தான். பிறகு மெல்லிய குரலில், ''என்னைக் கொலை செய்யப் போறியா?'' என்றான்.

''என் கையாலே செய்ய மாட்டேன்.. பயப்படாதே. ஆனா அப்படி உனக்கு ஒரு முடிவு வந்துட்டா, பணத்தை அனுபவிக்காமயே நீ பூடுவே. நீ இந்த ஆளை நம்பி இந்த வூட்லே ஒளிஞ்சுகட்டு என்ன சுகத்தைக் காணுவே... வா, என் கூட வா... தனத்தோட வாழ்ந்தா வாழ்ந்துகிட, வாழாமப் போனாலும் சரி. அது உன் இஷ்டம். பணத்தால உலகத்தில என்னென்ன சொகமெல்லாம் கெடைக்குமோ


அதெல்லாம் நான் வாங்கித் தாரேன். ஒரு காலத்தில நான் மிலிட்டரியிலே இருந்தப்ப விஸ்கியும் ரம்மும்தான் குடிப்பேன். இப்பப் பணம் இல்லே. பட்டைக்கு வந்துட்டேன்... அந்தக் காலத்திலே என் கூடச் சுத்தின குட்டிங்க எவ்வளவு பேர் தெரியுமா? அவங்களுக்கெல்லாம் இப்ப வயசாகியிருக்கும்... ஆனா இப்பவும் புதுப் புதுக் குட்டிங்களெல்லாம் இருக்காங்க.''

மயில்சாமி பேசிக் கொண்டே போனவன், ரங்கன் மீது இருந்த பிடியைத் தளர்த்தினான். இடது கையால் பாக்கெட்டிலிருந்து பீடியை எடுத்து, ரங்கனை முழுதும் விடுவித்து வலது கையால் வத்திப் பெட்டியை எடுக்கப் போனான்.

அவன் பீடியைப் பற்ற வைக்கவும் ரங்கன், அசுர வேகத்துடன் வீட்டை நோக்கிப் பாய்ந்து ஓடவும் சரியாக இருந்தது.

அவன் வேகமாக வருவதைக் கண்ட கோமதி, பதற்றத்துடன் தன் கணவரை அழைத்தாள்.

அவர் வராந்தாவுக்கு வர, ரங்கன் மூச்சு இரைக்க ஓடி வந்து நின்றான்.





"ஏன் சார், இப்படி அநியாயத்துக்கு லஞ்சம் கேட்கிறீங்களே... யாராவது மாட்டிவிட்டு வேலை போயிட்டா என்ன செய்வீங்க?"

"அதுக்காகத்தானே முன்னேற்பாடா நான் அதிகமா லஞ்சம் வாங்கறதே!"

— சீர்காழி வி. ரேவதி.

"என்ன ரங்கா, என்ன நடந்தது?" என்று கேட்டாள் கோமதி.

"அந்த ஆளு வெங்கின்னு பொய் சொல்லியிருக்கான் அம்மா. அவன் பேரு மயில்சாமி. அவன் கொலை செய்யவும் பயப்பட மாட்டான்."

"நீ மொதல்ல மாடிக்குப் போய் உன் ரூமிலே இரு," என்றாள் கோமதி. பிறகு கணவரைப் பார்த்து, "அவன் உள்ளே வந்தா என்ன செய்யறது?" என்று கேட்டாள்.

"வரட்டும், பார்க்கலாம்" என்றார், ரமணியின் தகப்பனார் சுந்தரம்.

அவர்கள் இருவரும் எதிர்பார்த்தது போல மயில்சாமி வீட்டை நோக்கி வரவில்லை. மாறாகத் திரும்பிச் சென்று கொண்டிருந்தான்.

"இந்த ரங்கனுக்கு ஆபத்து வருமோ வராதோ, இவனாலே நம்ப ரமணிக்கு நிச்சயமா ஏதானும் ஆபத்து வரும்!" என்றாள் கோமதி.

"உன் புள்ளைக்கு இந்த வீட்டைப் பத்தி லட்சியம் கிடையாது. ஊரார் பிரச்னையைத் தலை மேல் போட்டுக் கொண்டு கூத்தாடுவான்."

"இப்ப என்ன செய்யறது?"

"மொதல்ல ரங்கனை வேற எங்கானும் ஓர் இடத்திலே போய்த் தங்கச் சொல்லு... இந்த வீடு என்ன அகதிகள் முகாமா?" என்றார் சுந்தரம்.

"ரமணி வரட்டும். இதுக்கு ஒரு முடிவு கட்டுவோம்," என்றாள் கோமதி.

ரங்கனுடைய அண்ணன், பெயர் சிவலிங்கம் என்று சொல்லிக் கொண்டு வந்தவன் வெளியேறியதும், மாலு ரமணி அருகே வந்து உட்கார்ந்தாள்.

"யார் அந்த ஆள், ரமணி?"

"இன்னொரு கழுகு!"

"புரியும்படியாச் சொல்லுங்களேன், ரமணி."

"அனாதைப் பொணம் கிடந்தா அஞ்சு மைல் உயரத்திலேந்து கழுகுகள் பாய்ந்து வந்து கொத்தித் தின்னும். ஓர் அனாதைக்குப் பணம் வந்துட்டா, சொந்த பந்தத்தை மறந்து போனவங்களெல்லாம், மறுபடியும் சொந்தம் கொண்டாடி அவனைப் பிய்ச்சுத் திங்க வருவாங்க... இவன் அவர்களிலே ஒருத்தன். ரங்கனுக்கு அண்ணாவாம். பேர் எஸ். லிங்கமாம். அதாவது சிவலிங்கம்... கும்பகோணத்திலே உப்பு, புளி, மிளகாய் விக்கறவன்."

"என்ன வேணுமாம்?"

"இவ்வளவு சொல்லியும் கேள்வி கேட்கிறியே மாலு? நாளைக்கு நீ என் மனைவியா வர்றப்ப, உன்னை நான் எப்படிச் சமாளிப்பேன்?"

"உங்களை லவ் பண்றப்பத்தான் என் புத்தி மழுங்கறது, ரமணி! கலியாணமாகி, நீங்க என் கைக்குள்ளே அடங்கிட்டா, என் புத்தி கூர்மையாகி விடும்."

தாழ்ந்த குரலில் பேசிய மாலு சிரித்தாள்.

"ரங்கனுக்குப் பரிசு வந்ததில் கஷ்டத்தை அனுபவிக்கிறவன் நான்தான், மாலு."

"உங்க இடத்தில வேறு ஒரு ஆள் இருந்திருந்தா, நடக்கிற கதையே வேறே!"

"ஏன்? என்ன கதை நடந்திருக்கும்?"

"ரங்கன் சல்லிக்காசு பார்த்திருக்க மாட்டான். எந்தக் கோர்ட்டுக்குப் போயிருந்தாலும் அவன் ஜெயிக்க மாட்டான். ஏன்னா லாட்டரிச் சீட்டை வித்தவன் அவன் பேரை எழுதி வைக்கவில்லை. சீட்டும் ரங்கன் கையில் இல்லை."

"அதாவது ரங்கன் தலையில் மிளகாய் அரைச்சிருப்பான்னு சொல்றே!"

"நீங்க சந்தனம் அரைச்சிருக்கீங்க, ரமணி. நேர்மையின் உச்சாணிக் கொம்புக்கே போயிட்டீங்க!"

"நேர்மைக்கு நீளமும் இல்லே, உயரமும் இல்லே மாலு. ரங்கனை ஒரு ரூபாய்க்கு ஏமாத்தறதும் ஒண்ணுதான், பல லட்சங்களுக்கு ஏமாத்தறதும் ஒண்ணுதான். நான் நினைச்சிருந்தா அவனை ஏமாத்தியிருக்கலாம். ஆனா அந்த எண்ணமே வரலே... அன்னிக்குத் தற்செயலா ஒரு 'மாலைப்' பத்திரிகையைப் பார்த்தேன். அப்பாவைப் பார்க்க ஒருத்தர் வந்திருந்தார். பெரிய கொட்டை எழுத்தில், '25 லட்சம் ரூபாய் யாருக்கு?' என்று எழுதி, கீழே நம்பரும் போட்டிருந்தது. அப்ப எனக்கு ரங்கன் ஞாபகமே வரலே. ஆனா வந்தவர், பேப்பரை மறந்து போய் வைச்சுட்டுப் போயிட்டார். மறுபடியும் படிக்கறப்ப முதல் பரிசிலிருந்து கடைசி பரிசு வரை நம்பரெல்லாம் போட்டிருக்கிறதைப் பார்த்தேன். அப்பத்தான் ஏதானும் ஒரு பரிசாவது ரங்கனுக்கு விழுந்திருக்குமான்னு பார்த்தேன்."

''முதல் பரிசுன்னு தெரிஞ்சதும் உங்களுக்கு என்ன தோணித்து?''

''ஏது, பத்திரிகை நிருபர் கேட்கிற மாதிரிக் கேட்கிறே! சரி, சொல்றேன். ஒரு தடவைக்குப் பத்துத் தடவையா டிக்கட்டையும் நம்பரையும் மாறி மாறிப் பார்த்தேன். நடுவிலே சிவாவின் நினைவு வந்தது. டிக்கட்டைப் பத்திரப்படுத்தறதுதான் முதல் வேலைன்னு தோணித்து. உள்ளூர் பாங்க்கை விட வெளியூர் பாங்க்தான் நல்லதுன்னு பட்டது. அம்மாகிட்டக் கூட எந்த ஊர்னு சொல்லாம சேலத்துக்கு ரெயில் ஏறினேன்... ரங்கனுடைய பணத்தை மத்தவங்க நார் நாராக் கிழிக்கக் கூடாதுங்கற எண்ணம்தான் இருந்தது.''

''இப்படிப்பட்ட நேர்மைக்கு என்ன பரிசு கிடைச்சுது உங்களுக்கு? வெங்கி மட்டும் சமயத்திலே பாய்ஞ்சு வந்து காப்பாத்தியிருக்கா விட்டால் உங்க மண்டையை மயில்சாமி ரெண்டாப் பிளந்திருப்பான்.''

''இப்படிப்பட்ட அனர்த்தத்தை நான் நிச்சயமா எதிர்பார்க்கலே, மாலு. ஆனா அதிலேர்ந்து ஒண்ணு புரிஞ்சுக்கிட்டேன்.. ரங்கனுக்கு வரக் கூடிய ஆபத்து எனக்கும் உண்டுன்னு...''

''பணத்திலே பாதி இல்லேன்னாலும், ஆபத்திலே பாதி இருக்கு ரமணி. நான் ஒண்ணு சொன்னா கேட்பீங்களா?''

''என்ன மாலு?''

''படிப்போ புத்தியோ இல்லாத ஒரு ரெண்டுங்கெட்டானுக்கு நீங்க மகத்தான உதவி செய்ஞ்சுட்டீங்க. எல்லாப் பணத்தையும் அவன் பேர்லேயே போட ஏற்பாடும் செய்துட்டீங்க.. இனிமேலும் ரங்கனை உங்க வசம் வைச்சுப்பானேன்...? அவனை அவிழ்த்து விட்டுடுங்களேன்.''

''அதுக்கு இன்னும் நேரம் வரலே, மாலு. வந்ததும் நானே ஒதுங்கிடுவேன்.''

''நீங்க மட்டும் ரங்கனை மோசம் செய்திருந்தா... சரி சரி... ஒண்ணுமில்லே!''

''சொல்ல வந்ததைச் சொல்லு, மாலு. ஏன் தொண்டைக்குள்ளேயே நிறுத்திட்டே!''

''நீங்க இமயத்தின் உச்சியிலிருந்து விழுந்திருப்பீங்க... என் காதலே சுக்குநூறா வெடிச்சுச் சிதறியிருக்கும்.''

''நான் என்னைச் சத்திய சந்தன்னு சொல்லிக் கொள்ளலே மாலு. பணத்தைத் துச்சமா மதிக்கிறவனும் இல்லே... சொல்லப் போனா நான் ஒரு மனக் கோட்டை கட்டி வைச்சிருக்கேன். லட்சம் லட்சமா சம்பாதிக்கத் திட்டம் போட்டிருக்கேன்... நான் நினைச்சிருந்தா இந்த ரங்கனை ஏமாத்தியிருக்கலாம் மாலு. இந்த லட்சங்கள் மூலமா மேலும் பல லட்சங்களைச் சம்பாதிக்க வழி ஏற்படுத்தியிருக்கலாம். ஆனா எனக்கு அப்படிச் செய்யத் தோணலே... ஏன்னும் சொல்லத் தெரியலே.''

''யூ ஆர் ரியலி க்ரேட், ரமணி.''

''யாருமே க்ரேட்டும் இல்லே. யாருமே ஸ்மாலும் இல்லே மாலு. எனக்கு என்ன கிடைக்கணுமோ அது நிச்சயம் கிடைக்கும்.. இதிலே எனக்கு நம்பிக்கை இருக்கு.''

''ஆனா பணம் காசு எல்லாத்துக்கும் மேல, எனக்கு ஒரே ஒரு ஆசைதான் இருக்கு ரமணி. அது என்னன்னு நான் சொல்லித் தான் தெரியணும்னு இல்லே.''

''எனக்கு மட்டும் அந்த ஆசை இல்லியா, மாலு? நாம் ஏன் இன்னும் கொஞ்ச காலம் பொறுமையாக் காதல் உலகத்திலேயே வாழப்படாது!''

''வேற வழிதான் இல்லியே! அப்படியே வாழ்ந்துட்டும் போவோம்!''

அன்று மாலை வீட்டை அடைந்ததும், ரமணி நடந்ததையெல்லாம் அம்மா மூலம் அறிந்து கொண்டான். மயில்சாமி ஒரு சாதாரண மூள் அல்ல, விஷ மூள் என்று தனக்குள் முணுமுணுத்தபடி ரங்கன் இருக்கும் அறைக்கு விரைந்தான்.

ரங்கன் கதவைத் திறந்தான். முகம் பயத்தில் வெளிறிப் போயிருந்தது.

''எதுக்கும் பயப்படாதே, ரங்கா! நான் இருக்கேன்!''

''ரமணி சார்... அந்த மயில்சாமி வந்தான்...''

''எல்லாம் அம்மா சொன்னா. இப்ப மணி அஞ்சரை. நான் உனக்காகக் கொஞ்சம் சீக்கிரமே ஆபீசை விட்டு வந்தேன்... ஆறு மணிக்கு நீ ஒருத்தரைச் சந்திக்கப் போறே!''

''யார் ரமணி சார்!''

''நீயே பார்த்துத் தெரிஞ்சுக்க! நீ அசந்து போயிடுவே! பணம் வந்தாலே மதிப்பும் மரியாதையும் தானா வந்துடறது! இன்னிக்கு உன்னை வாழ்த்த ஒருத்தன் தலை தெறிக்க வர்றான். ஆறு மணிக்கு நீ வருவேன்னு சொல்லியிருக்கேன். ஒரு கிழிசல் பாண்ட்டும் கிழிசல் சட்டையும் போட்டுக்கிட்டு ரெடியா இரு!''

சொல்லி விட்டு ரமணி வெளியேற, ரங்கன் மேலும் குழம்பிப் போனான்.

(தொடரும்)

''பெண்களின் கூந்தலில் உள்ள மணம் எந்தப் பூவுடையது எனக் கண்டுபிடித்தாயிற்று. அரசே!''

''மகிழ்ச்சி... என்ன பூ அது!''

''ஷாம்பூ!''

— தக்கலை லீலா இராம்.



எதிர் வீட்டில் சில இளைஞர்கள்



அனுதர்ஷினி

"வாங்களேன், வந்து பாருங்களேன்! எதிர் வீட்டு மாடியிலே நடக்கிற அநியாயத்தை..." என்று தனது கணவரின் கையைப் பிடித்து இழுக்காத குறையாக அவரைப் புழக்கடைக்கு அழைத்து வந்து நிறுத்தினாள் ரங்கநாயகி.

"எதிர்வீட்டு மொட்டை மாடியிலே என்னடி அநியாயம்? எவனாவது கொள்ளை அடிக்கிறானா?" என்றார் அவள் கணவர் பரஞ்சோதி, கொட்டாவியுடன்.

"கொள்ளைதான் போகப் போகிறது, கொஞ்ச நாளிலே. அதுவும் நம்ம வீட்டிலே!"

எதிர் மாடியைப் பார்த்தார் பரஞ்சோதி. நிறையத் தலைகள் தென்பட்டன. டிஸ்கோ கட்டிங் வெட்டிய கலைந்த தலை இளைஞர்கள்.

"என்னடி ரங்கம், இத்தனை கூட்டம்?"

"கூட்டம் மட்டும்தான் உங்க கண்ணுக்குத் தெரிஞ்சதாக்கும்? நல்லாப் பார்த்துத் தொலையுங்களேன்."

"அடடே! பசங்க உடற்பயிற்சி பண்றாங்க!"

"மேலே சட்டையோ இடுப்பிலே வேஷ்டியோ இல்லாம வெறும் ஜட்டிகளோடு தடிமாடுக கணக்கா திரியறானுங்களே!"

"அவன் வீட்டு மாடியிலே அவன் எப்படியும் இருந்திட்டுப் போறான். நமக்கென்ன?"

"கல்யாண வயசிலே குதிர் குதிரா மூணு பொண்ணுகளை வைச்சிருக்கோம்கறது உங்களுக்கு நினைவு இருக்கா இல்லையா?"

"சித்ரா, ஜெயந்தி, காயத்ரினு மூணு பெத்திருக்கோம்..." என்று கூறிய பரஞ்சோதிக்கு, அப்போதுதான் மூளைக்குள் உதறல் எடுத்தது.

"ரங்கம்! நம்ம பொண்ணுகளை இந்தப் பயல்கள் ஏதாவது பண்ணிடுவானுக... அப்படித்தானே!"

"அப்பாடி! உங்க குருவி மூளைக்கு இப்போதாவது விஷயம் எட்டிச்சே, சந்தோஷம்!" அவர் மனைவி நொடித்தாள்.

"இதுக்கு என்னடி பண்றது?"

"என்ன பண்றதா! சட்டியும் பானையும் பண்ணுங்க. எதிர் மாடியிலே அவனுக சதா காலமும் அரை நிர்வாணமாத் திரியறானுக. தண்டால், பஸ்கினு மாரை நிமிர்த்திண்டு வளைய வர்றானுக. பின் வாசல் பக்கம் வரவே முடியலைம்மானு மூணும் அழுவுதுக. அநுமந்தராயர் கோயில் விதானம் மாதிரி மேலே திறந்து கிடக்கிற பாத்ரூமுக்குள்ளே போய் எப்படி அந்தக் குழந்தைகள் குளிக்கும்? துணி துவைக்கக் கிணற்றடிப் பக்கம் வரவோ, மல்லிகைப் பந்தலடியிலே கொஞ்ச நேரம் அக்கடானு உட்காரவோ... ஒண்ணுக்கும் வழியில்லே!"

"அதற்கு என்ன செய்யணும்ங்றே? அவனுகளோடு போய்ச் சண்டை போடச் சொல்றியா? ஒவ்வொருத்தனும் கரணை கரணையாக் கையும் காலும் பீமசேனன் போல இருக்கானேடி?"

"இந்தத் தொகுதி எம். எல். ஏ. உங்க நண்பர்தானே. அவர்கிட்டே சொல்லி இந்தப் பயல்களை விரட்டியடிக்கச் சொல்லுங்க."

"அவனுக வீட்டை விட்டுப் போவானுகளா?"

"இத்தனை நாள் வரைக்கும் பிள்ளையார் கோயில் திடல்லே உடற்பயிற்சி பண்ணிட்டுக் கிடந்தவனுகதானே! இப்போ ஆளுக்குக் கொஞ்சம் பணம் போட்டு இந்த வீட்டை வாடகைக்குப் பிடிச்சிருக்காங்க. விரட்டுகிற ஆள் விரட்டினால் தலை தெறிக்க ஓடிட மாட்டானுகளா?"

"சரிடி. நாளைக்கே நான் எம். எல். ஏ. கார்வேந்தனைப் போய்ப் பார்க்கிறேன்."

"உங்களுக்குச் சமர்த்துப் போதாது. நானும் கூட வர்றேன்."

"ஓகே! ரெண்டு பேரும் போகலாம்.



மறுநாள் காலையில் பரஞ்சோதியும் ரங்கநாயகியும் அந்தத் தொகுதி எம். எல். ஏ. கார்வேந்தனைச் சந்திக்க, அவரது இல்லத்திற்குச் சென்றார்கள். வீட்டு வாசலில் வழக்கம் போல கார்கள், ஆட்டோக்கள், கட்சித் தொண்டர்கள்... என்று சகலரும் அலைமோதிக் கொண்டிருந்தார்

கள்.

கேட் அருகே இருந்த வாட்ச்மேன் பரஞ்சோதியைப் பார்த்ததும் "வணக்கம் ஐயா!" என்றான்.

"எம். எல். ஏ. இருக்காரா, முனுசாமி?"

"இருக்காரு. உள்ளே போங்க" என்று கொஞ்சமாய்க் கதவு திறந்து, பரஞ்சோதியையும் ரங்கநாயகியையும் மட்டும் அனுமதித்தான்.

தமது பி. ஏ.வுடன் ஏதோ விவாதித்துக் கொண்டிருந்த எம். எல். ஏ. கார்வேந்தன், தலைநிமிர்ந்து பார்த்தார்.

"வாங்க பரஞ்சோதி. வாங்கம்மா! துரை, ரெண்டு காப்பி கொண்டு வரச் சொல்லு!" என்றார்.

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாங்க! உங்ககிட்டே ஓர் உதவி... அவசரமா வேணும்" என்றார் பரஞ்சோதி.

"உங்க பெரிய பொண்ணு சித்ராவுக்கு வேலை வேணும்னு சொன்னீங்களே! தொழிலதிபர் திருமூர்த்திகிட்டே சொல்லியிருக்கிறேன்."

"அவர் போன மாதமே சித்ராவைக் கூப்பிட்டு வேலை போட்டுக் கொடுத்திட்டார்."

"அப்புறம் வேறே என்ன உதவி வேணும் பரஞ்சோதி? பணம் ஏதாவது தேவையா?"

"ஒரு நியுஸென்ஸ் கேஸ் கார்வேந்தன். என்னோட எதிர் வீட்டு மாடியிலே உடற்பயிற்சி கிளப் ஒண்ணை வச்சுக்கிட்டு வாலிபப் பசங்க ஒரே ரகளை!" என்று அனைத்து விவரத்தையும் கூறினார்.

அவர் மனைவி ரங்கம் கண்ணீர் விடாத குறையாக ஒப்பாரி வைத்தாள்.

"ஐயா நீங்கதான் எப்படியாவது அந்தத் தடியனுங்களை விரட்டியடிக்க உதவி செய்யணும்!" என்றாள்.

"என் செல்வாக்கைப் பயன்படுத்தி அவர்களை விரட்டிட முடியும். ஆனால் உங்கள் பெண்களை எப்போதும் வீட்டுக்குள்ளேயே பூட்டிப் பாதுகாக்க உங்களால் முடியுமா?"

"என்னங்க சொல்றீங்க?"


"கடை கண்ணிக்கோ, கோயிலுக்கோ சினிமாவுக்கோ போகும் போது வீதியில் இருந்தபடி அவர்கள் கலாட்டாப் பண்ணினா என்ன செய்வீங்க?"

"போலீஸ் எதுக்கு இருக்கு கார்வேந்தன்? ரிப்போர்ட் கொடுத்து அவனுகளை உள்ளே தள்ளிட மாட்டேனா?" என்றார் பரஞ்சோதி.

"போலீஸ் ஸ்டேஷன் படியேறிச் சந்தி சிரிக்க வேணுமா? அப்புறம் நம்ம பெண்களை எவன் கட்டுவான்? புரியாம உளறாதீங்க!" என்று அதட்டினாள் ரங்கநாயகி.

"அதுதாம்மா சொல்றேன். உங்க பெண்களுக்குப் பாதுகாப்பு வேணும்னா உங்க பெண்களை ஜாக்கிரதை பண்ணி வச்சுக்கங்க! அதை விட்டுட்டு, அவனுகளை விரட்ட நினைக்கிறது சரியான அணுகுமுறையில்லை. எதிர்ப்பு ஏற்படும் போதுதான் இளைஞர்கள் மனம் முரண்டு பிடிக்கும். இதுவரை உங்க வீட்டுப் புழக்கடையைச் சரியாப் பார்க்காதவன் கூட, ஆர்வமாப் பார்க்க ஆரம்பிப்பான். உங்க வீட்டிலே மூணு வயசுப் பெண்கள் இருப்பது அந்த இளைஞர்களுக்கே கூட இதுவரை தெரியாமல் இருக்கலாம். வீணா விஷயத்தைப் பெரிசுபடுத்தித் தலைவலியைத் தேடிக்க வேண்டாம் பரஞ்சோதி! எப்போதும் போல இயல்பா அந்தப் புழக்கடையிலே பெண்களைப் புழங்க விடுங்க. இளைஞர்களின் கண்களுக்கு அது பழக்கப்பட்டுப் போயிடும். அப்புறம் எட்டிப் பார்க்க மாட்டார்கள்" என்றார் கார்வேந்தன்.

ஒரு போஸ்ட் கார்டு போதும்!...



ஒரு போஸ்ட் கார்டு உங்களது வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தப் போகிறது என்று நாங்கள் சொன்னல் உங்களுக்கு வியப்பாகத் தோன்றலாம். ஆனல் உண்மை அது தான்!.

★ ஆங்கிலத்தில் பேசினல் ஏதாவது தவருகப் பேசி விடுவோமோ என்ற தயக்கமின்றி சரளமாகப் பேச...

★ இலக்கணப் பிழை ஏற்பட்டுவிடுமோ என்ற பயமின்றி ஆங்கிலத்தில் கடிதங்கள், கட்டுரைகள் எழுதும் ஆற்றல் பெற...

தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்ற தனிப்புகழ் பெற்ற விவேகானந்தா கல்வி நிலையத்தினர் மிகச் சிறந்த முறையில் பயிற்சியளித்து வருகிறார்கள்.

வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தமிழில் தபால் மூலம் நீங்களும் இப்பயிற்சியை மேற்கொள்ளலாம்.

"நேர்முகப் பயிற்சியும் உண்டு"

மேலும் தகவல் அறிய ஒரு போஸ்ட் கார்டில் உங்களது விருப்பத்தை எழுதி எங்களுக்கு அனுப்பினல் போதும்!

பயிற்சி பற்றிய தகவல் புத்தகத்தையும், விண்ணப்ப மனுவையும் உடனே உங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.


உங்களது முன்னேற்றத்தின் முதல் முயற்சி இன்றே துவங்கட்டும்!

நீங்கள் கடிதம் எழுத வேண்டிய முகவரி:

விவேகானந்தா கல்வி நிலையம்

தபால் பெட்டி எண்: 4986. 9. மேட்லி ரோடு, தி. நகர், சென்னை-17.

மனைவி வந்த நேரம்



டைரக்டர் பாவம், கதை பண்ணுவதில் தாமும் சிண்டைப் பிய்த்துக் கொண்டு, பார்ப்பவர்களையும் அதே நிலைக்கு ஆளாக்கியிருக்கிறார்.

தோண்டித்துருவி தீம் சொல்வதானால்: அடுத்தவனிடம் கடன் கேட்டால் ஆயுள் முழுக்க அவதிப்பட வேண்டும் என்று சொல்லலாமா? இல்லை, அநியாய வட்டி வாங்கிக் கடன்காரனைக் கசக்கிப் பிழிகிறவன் கடைசியில் தன் தவறுக்கு வருந்தித் திருந்துவான் எனலாமா? இரண்டையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

பாவம், டைரக்டருக்குக் கோளாறும் குளறுபடியும் எந்தக் கட்டத்தில் உற்பத்தியாகிறது? கதைப்படி பிரதம ஜோடிகளாய்த் திகழ வேண்டியவர்கள் — அதிக பிலிம் நீளத்தை ஆக்கிரமித்துக் கொள்ள வேண்டியவர்கள் ரவி — ராதாதான்! அதனால் இன்றைய பிரபலத்துக்காகச் சேர்த்துக் கொண்டிருக்கும் ரகு(மான்) — சித்தாரா ஜோடிக்கு இடம் குன்றிப் போய்விடுமோ என்ற திகில் விழுந்ததோ திரைக்கதை அமைப்பு, டைரக்ஷன், நீள ஒதுக்கீடு இவற்றில் சிக்கல் விழுந்து அசல் கதை எங்கோ போய்ச் சிக்கிக் கொண்டு விட்டது. இரண்டு ஜோடிகளும் ஏதோ 'ஆடச் சொன்னா ஆடறேன், ஓடச் சொன்னா ஓடறேன்' என்கிற ரீதியில் ஒப்பேற்றியிருக்கிறார்கள்.

கொடுமைக்கார சித்தி அனுராவிடம் தன் மகள் ராதா இடிபடுவதைக் காணச் சகிக்காத தாய் கே. ஆர். விஜயா, ஒரு கட்டத்தில் புக்ககத்தாரை எதிர்த்துப் போராடு என்கிற மாதிரி உசுப்பேற்றி விடுகிறாரா? அப்போது ராதா, 'செய்யறேன். ஆனால் நான் செய்யப் போற காரியத்தைப் பார்த்து இந்த ஊரே என்னைத் தூற்றும். உறவே என்னை ஒதுக்கி வைக்கும்,' என்றெல்லாம் நாசி விடைக்க ஆவேசப் பேச்சுப் பேசிவிட்டு வந்தவர், மவுண்ட் அண்ணா மேம்பால அடிவாரத்திலிருந்து அங்கும் இங்குமாய்க் கூந்தலும் சேலையும் சரியக் குடிகார ஆட்டம் போட்டு, அது கண்ட ரவி வீச்சரிவாளைத் தூக்கிக் கொண்டு அவரை வெட்டிப் போடுவதாய்த் துரத்த, இவர் ஓட, அவர் மேலும் ஆவேசமாய்த் துரத்திவரக் கடைசியில் ராதா காவல் நிலையத்தில் தஞ்சம் புகுந்து ரவியை ரிமாண்டில் அடைத்து வைக்கச் செய்த பிறகு —

கம்பிக் கதவைப் பிடித்துக் கொண்டு, 'நான் குடிச்சதா நடிச்சேங்க. ஏன் தெரியுமா? உங்களுக்கு எதிரிகளால ஆபத்து இருக்கு. உங்களுக்குப் பாதுகாப்பான இடம் இதுதான். உங்களை இங்கே கொண்டு வந்து சேர்க்க எனக்கு வேறே வழி தெரியலைங்க. நீங்க வெளியே வர்றப்ப உங்க எதிரிகளையெல்லாம் நான் எப்படி மாத்திட்டேன்னு நீங்க பார்க்கப் போறீங்க,' என்று உருக்கம் காட்டுகிறாரே, ஏதோ பாப்பாவுக்குப் பராக்குக் காட்டுகிற மாதிரி இல்லையோ?

திமிர் திமிர்த் திருப்பம் காட்டிச் சாமர்த்தியம் பண்ணுவதாய் நினைத்துக் கொண்டு பொருத்தத்தையோ யதார்த்தத்தையோ உதாசீனப்படுத்தி எரிச்சலூட்டியிருக்கிறார்கள். ஆடத் தெரியாத சித்தாராவை ஆட வைத்து அவஸ்தைப்படுத்தியிருக்கிறார்கள்.

பாரதச் சூதாட்டம் போல் இந்த ரவி, பெண்டாட்டியை அடகு வைத்துச் சூதாடித் தோற்றுவிடுகிறாராம். இது காலத்துக்கு ஒவ்வாதே என்று கதாசிரியருக்குப் பட்டுவிட்டது. அதனால் நடுநடுவே ஒவ்வொருத்தர் தலைநீட்டி, 'அப்படிப் பெண்டாட்டியை அடகு வைத்ததாய் எழுதிக் கொடுத்தது சட்டப்படி செல்லாது,' என்று முழக்கிவிட்டு அடங்கிப் போவார். ஆனால் அதற்குக் கட்டுப்பட்டுத்தான் கதை மேலே நகர்கிறது!

விஷ ஊசி மருந்தை வில்லன் ஏற்பாடு செய்ய, அதைக் கவனியாமல் எடுத்துப் போட்டு ஏழெட்டுப் பேரை எமப்பட்டணம் சேர்த்துவிட்ட நர்ஸ் ராதாவை, சும்மா வேலையை விட்டு நீக்கிவிட்ட அளவில் தண்டித்து விட்டதாய் முடிவெடுப்பது எந்த நாட்டுச் சட்டத்துக்குக் கட்டிவந்த சமாசாரம்? ஒன்று, உலகம் தெரிய வேண்டும்; இல்லையா, தெரிந்தவர்களிடம் கேட்டுக் கொள்ள வேண்டும்.

என்னவோ, சரியாயில்லை, போங்கள்!

— பி. எஸ். எஸ்.

ஆரோக்கிய ரகசியம்:
வி. என். குமாரசாமி

ஆசனம் பழகுவது ஆணழகன் போட்டிக்கா?

ஹலாசனம் செய்யும் போது முதுகெலும்பு படிப்படியாக வளைக்கப்படுவதால் அதன் எல்லாப் பாகங்களுக்கும் பயிற்சி ஏற்படுகிறது. முதுகெலும்பின் ஊடே செல்லும் நரம்புத் தண்டு இழுக்கப்படுவதால் முறுக்கேறுகிறது. யௌவனம் நிலைநாட்டப்படுகிறது. சோம்பல் என்பதே தலைகாட்டாது! எப்போதும் சுறுசுறுப்புத்தான்.

'விசையுறு பந்தினைப்போல் — உளம் வேண்டியபடி செலும் உடல் கேட்டேன்' என்று பாரதியார் கேட்கிறார் அல்லவா? ஆசனம் செய்பவர்களுக்கு அத்தகைய உடல் உண்மையில் கிடைத்து விடும்! அதிலும் ஹலாசனம் முக்கியமானது. இதைச் செய்யும் போது, தைராய்ட், பாராதைராய்ட் போன்ற நாளமில்லாச் சுரப்பிகள் நன்கு கசக்கப்படுகின்றன. இதனால் அவை மஸாஜ் செய்யப்பட்டது போல் பயிற்சி பெறுவதால் நிரந்தர ஆரோக்கியமும் யௌவனமும் உண்டாகும். ஆசனம் செய்து வரும் சகோதரிகள் பொதுவாகவே ஆரோக்கியத்துடன் விளங்குவார்கள். குறிப்பாக ஹலாசனம் காரணமாக அவர்களுக்குச் சுகப் பிரசவம் உண்டாகும். குழந்தைக்குத் தாய்ப்பால் இல்லை, போதவில்லை போன்ற பிரச்னைகள் எழவே செய்யாது.

ஆனால் சென்ற இதழில் குறிப்பிட்டது போல் கருவுற்ற பெண்கள் ஹலாசனம் இரண்டு மாதங்கள் வரைதான் செய்யலாம். புதிதாக எந்த ஆசனமும் பழகக் கூடாது.

"ஆசனங்கள் பழகி வந்து இடையில் விட்டு விட்டால் பல நோய்கள் வந்து விடும் என்று சொல்கிறார்களே?" என்று ஓர் அன்பர் பயத்துடன் எழுதியிருக்கிறார்.

இவையெல்லாம் அர்த்தமற்ற பயங்கள்; வீண் குற்றச்சாட்டுக்கள். ஆசனங்கள் செய்வதாலோ செய்வதை நிறுத்தியதாலோ நோய் வராது. அவரவரின் ஆகாரக் கோளாறினால் அல்லது நடத்தை பிசகினால்தான் நோய் வரும். அதற்கு யார் என்ன செய்ய முடியும்? 'நான் எப்படியும் நடப்பேன், ஆனால் நோய் வரக் கூடாது! ஆசனமே எல்லாவற்றையும் தடுத்து விட வேண்டும்!' என்று எதிர்பார்ப்பது கூடாது. ஆரோக்கியத்தை அளிப்பது ஆசனம். உடலுக்கு ஆசனம் எப்படி உதவுகிறது என்பதை அவ்வப்போது விஞ்ஞான பூர்வமாக 'விளக்கி வருகிறேன். தவிர கெட்ட வழிகளில் செல்லாமல் மனத்தை உறுதியாக வைத்திருக்கவும் ஆசனங்களும் தியானமும் உதவும். இதனாலெல்லாம் ஆரோக்கியம் உறுதி செய்யப்படுகிறது.

'ஆசனம் செய்வதால் பலசாலியாக முடியுமா?' என்று சவால் விடுவது போல் ஒருவர் கேட்டிருக்கிறார். பலசாலியாக முடியும் — அதாவது அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அளவுக்கு. நோய் நொடிகள் அண்டாமலிருக்க உடலில் பலமிருந்தால்தானே முடியும்? ஆனால் ஆசனம் பழகுகிறவர்கள் ஸாண்டோக்கள் ஆக முடியாது. பயில்வான்கள் ஆக முடியாது. தசைகளுக்கு முறுக்கேற்றி, மஸில்களைப் பம்மச் செய்து, ஆணழகன் போட்டியில் பங்கு பெற உங்களைத் தயார் செய்வது அல்ல ஆசனம். அது வேறு, இது வேறு. இரண்டையும் குழப்பிக் கொள்ளக் கூடாது.

சில காலம் முன்பாக ராமமூர்த்தி ஸாண்டோ என்று ஒருவர் இருந்தார். அவர்





"வாடி, விளையாடப் போகலாம்."

"நான் வரலேப்பா. நான் விளையாட வந்துட்டா, என் அப்பா என் ஹோம் ஒர்க்கைப் பண்றாரான்னு கவனிக்க முடியாதுடி."

— இன்வெஸ்ட்மெண்ட் மந்த்லி.

தகவல்: முத்து.

உடல் அழகை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். இரு பக்கமும் இரண்டு மோட்டார் கார்களை 'ஸ்டார்ட்' செய்து ஓட்டினாலும் அவற்றை இரு கைகளாலும் தம்மை நெருங்க விடாமல் தடுத்து நிறுத்தி விடுவார்! அப்படிப்பட்ட பலசாலி, திடீரென்று ஒரு நாள் டயபெடிஸ் நோய்க்கு ஆளானார். அவ்வளவுதான். மளமள வென்று எல்லாச் சக்தியும் கரைந்து போயிற்று. சாலையில் நடக்கும் போது ஓர் ஆணி பொத்துக் கொள்ள, புண் ஆறவே யில்லை. புரையோடிப் போய்க் கடைசியில் 52 வது வயதில் காலமாகி விட்டார்.

எதற்குச் சொல்கிறேன் என்றால், உடல் வலிமை வேறு; உடல் ஆரோக்கியம் வேறு என்பதை வலியுறுத்தத்தான். வஸ்தாதுவாக விளங்கக் கரளாக்கட்டை சுழற்றலாம். அது தசைகளைப் புடைக்கச் செய்யும். ஆனால் உடலின் உள்ளே பல்வேறு பாகங்களுக்கும் சுரப்பிகளுக்கும் அதனால் பயிற்சி கிட்டும் என்று கூற முடியாது. எனவே நோய் தாக்கும் போது உடல் பலம் போய் விடுகிறது. ஆசனம் ஒன்றினால்தான் உடலின் அனைத்துப் பாகங்களுக்கும், நரம்பு மண்டலத்துக்கும், சுரப்பிகளுக்கும் எல்லாவற்றுக்கும் பயிற்சி கிடைக்கிறது.

இதனால் ஆணழகர்களாக விளங்க உடற் பயிற்சி செய்வோரை நாம் குறை கூறுவதாக அர்த்தமில்லை. அது வேறு, இது வேறு என்று சுட்டிக் காட்டுவதுதான் நோக்கம். ஆசனம் செய்பவர்கள், கூடவே எடை தூக்குவது, கர்ளாக் கட்டை சுழற்றுவது, பார் விளையாடுவது போன்ற காரியங்களைச் செய்யக் கூடாது. ஒன்றைக் காலையில் செய்தால் மற்றொன்றை மாலையில் செய்யலாம்.

சிலருக்கு மருந்து விளம்பரங்கள் மனத்தை மயக்குகின்றன. "இழந்த வாலிபத்தைத் திரும்பப் பெறுங்கள்; ரதி மன்மத லேகியம் அருந்துங்கள்" என்றெல்லாம் விளம்பரங்கள். 'இவையெல்லாம் மோசடிகள்' என்று நாம் கூறினால், நம் மீது வழக்குப் போட்டு விடுவார்கள். அதனால் அப்படி கூற வேண்டாம். அவற்றை நம்புகிறவர்கள் நம்பட்டும். பணத்தைச் செலவிடத் தயாராயிருப்பவர்கள் செலவுசெய்யட்டும். ஆனால் நரம்புத் தளர்ச்சியின்றி ஆரோக்கியமாக வாழ, நல்ல பழக்க வழக்கங்களும் கட்டுப்பாடான வாழ்க்கையும் உதவுவது போல் வேறு எதுவும் உதவ மாட்டா. இதற்குத் தேவையான மனோ திடத்தை அளிக்க வல்லது ஆசனம் என்பதுடன் உடல் ரீதியாகவும் நரம்பு மண்டலத்துக்குப் பயிற்சி தந்து ஆரோக்கிய நிலையில் வைத்திருக்கிறது. 'எத்தனை காலம் செய்ய வேண்டும்?' என்றால், "நாள் தவறாமல் ஒவ்வொரு நாளும் செய்து கொண்டே இருங்கள்" என்பதுதான் பதில்.

உடம்புக்கு வந்தால் டாக்டர், பத்து மாத்திரைகளை எழுதிக் கொடுத்து, "நாளைக்கு மூன்று மாத்திரை, மூன்று நாள் சாப்பிட்டு விட்டு, நாலாவது நாள் வந்து பார்" என்பார். ஆரோக்கியம் பேணுவது என்பது இப்படிப்பட்டது அல்ல. அதற்கு வாழ்நாள் முழுவதும் ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் ஒதுக்குவது என்பது பெரிய விஷயமே அல்ல. அதனால் ஏற்படும் அனுகூலங்களையும் மிச்சமாகும் பணத்தையும் கணிக்குமிடத்து இந்த ஒரு மணி நேரம் ஒதுக்குதல் என்ற "விலை" மிக மிக மலிவானது என்பது விளங்கும்.

நாளமில்லாச் சுரப்பிகளைப் பற்றியும் அவை சுரக்கும் திரவத்தால் என்ன பலன்கள் என்பது பற்றியும் கூறினேன். வாயில் உமிழ் நீரில் தொடங்கி, வயிற்றில் சுரக்கும் அமிலம், மற்றும் என்ஸைம்கள்; சிறுகுடலில் சுரக்கும் என்ஸைம்கள் இவையெல்லாம் உணவை ஜீரணிப்பதற்கு உதவுகின்றன என்பதையும் பார்த்தோம். ஆகாரத்தைச் சரிவர ஜீரணிக்க உதவும் இன்னொரு திரவம் பித்த நீர். இரைப்பையிலிருந்து உணவு சிறுகுடலுக்குப் போய்ச் சேரும் போது அங்கு பித்தநீர் வந்து கலக்கிறது. இது மிகவும் முக்கியமான ஒன்று. இதன் உற்பத்தி குறைந்தாலும் கஷ்டம்; அதிகரித்து விட்டாலும் ஆபத்து!

பித்தநீரின் தன்மை பற்றியும், அதன் உபயோகம் குறித்தும், அது உற்பத்தியாகும் விதம், சேமிக்கப்படும் விதம் முதலியன குறித்தும் அடுத்த இதழில் விவரிக்கிறேன். அத்துடன் கூடவே இந்தப் பித்தநீரைச் சரியான அளவில் சுரக்கச் செய்து, உடல் நலத்துக்குப் பெரிதும் உதவக்கூடிய மயூராசனம் பற்றியும் சொல்கிறேன்.

(தொடரும்)

டிங் டாங் டில்லி:

அமைச்சர் கோவர்த்தனைத் தெரியுமா?



* திருப்தி ஏற்படாதோ?

●● தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் கூட்டினார்களே தவிர, அங்கு பத்திரிகை நிருபர்களுக்கு இடம் ஒதுக்குவது பற்றி யாரும் யோசிக்கவே இல்லை. ஒவ்வொரு மாநில முதலமைச்சருக்கும் இரண்டே இரண்டு 'பாஸ்' மட்டுமே கொடுத்தார்கள். திட்ட கமிஷன், துணைத் தலைவர் (நீடிக்கிறாரா? இல்லையா?) ராமகிருஷ்ண ஹெக்டேக்குக் கூட இரண்டே 'பாஸ்'தான்! அதனால் அவரது திட்டக் குழுவிலுள்ள அதிகாரிகள், அந்த இரண்டு பாஸ்களை வைத்துக் கொண்டு, ஆளுக்குக் கொஞ்ச நேரம் என்று மாற்றி மாற்றிப் பங்கு கொண்டார்கள்! ஏன் இந்தக் கெடுபிடி?

●● மத்திய அமைச்சரவையில் பாக்ய கோவர்த்தன் என்றொரு துணை அமைச்சர் இருக்கிறார் என்பது தெரியுமோ? திட்ட இலாகாவைச் சேர்ந்தவர். திட்டக் குழு, இந்த அமைச்சரை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை என்பது எல்லோரும் அறிந்த விஷயம். இந் நிலையில் 'திட்டம் சம்பந்தமான கேள்விகளுக்குப் பாராளுமன்றத்தில் நான் எப்படி பதில் சொல்வேன்?' என்று கேட்கிறார். சுமார் இருபத்தைந்து வருடங்கள் அரசாங்க அதிகாரியாக இருந்தவர் இவர். 'எனக்கு என்ன வேலை என்பதைத் தயவு செய்து சொல்லி விடுங்களேன்?' என்று ஹெக்டேயை நச்சரித்து வந்தார். இது வரை இவருக்குப் பதில் சொல்ல ஹெக்டேக்கு நேரம் கிடைக்கவில்லை.

●● நமது விஷயம் பற்றிய கோப்பு எந்த நிலையில், யாரிடம் இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள நாம்தான் ஆர்வம் காட்டி அலைகிறோம் என்பதில்லை. அதிகாரிகள் மட்டத்தில் நம்மை விட மோசம்! அதாவது, தாங்கள் வெளிநாட்டுப் பயணம் செய்வது சம்பந்தமான கோப்புக்களை, மேலே உள்ள அதிகாரிக்கு அனுப்பி விட்டு, 'என்ன ஆச்சு, என்ன ஆச்சு?' என்று கீழ் மட்ட ஊழியர் முதல் ஆரம்பித்து, குடை குடையென்று குடைந்து எடுத்து விடுவார்கள் சில அதிகாரிகள்! டெல்லியில் இது சாதாரணம்!

●● ரெயில்வே அமைச்சருக்கும், தொழில் அதிபர்களுக்கும் இடையே ஒரு சந்திப்பு. பெரிதாக ஒன்றும் நடந்து விடவில்லை இந்தக் கூட்டத்தில். வேடிக்கை என்ன என்றால், ரெயில்வே துணை அமைச்சர் இந்தக் கூட்டத்தில் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் ஆரம்பம் முதல் கடைசி வரை விழி விழியென்று விழித்துக் கொண்டிருந்தார். ஏற்பாடு செய்திருந்த 'லஞ்ச்'சையும் தொழிலதிபர்களுடன் ஒரு வார்த்தை கூடப் பேசாமல், சாப்பிட்டு விட்டு நடையைக் கட்டினார்!

●● பெண் — பத்திரிகையாளர் தவ்லீன் சிங்கை, தமிழ் நாட்டுக்கு வருமாறு அழைத்தார் ஜெயந்தி நடராஜன், இ. காங்கிரஸ் எம். பி. 'ஈழத் தமிழ்ப் போராளிகள் எப்படி எல்லாம் தமிழ் நாட்டில் தங்கள் இஷ்டம் போல் நடந்து கொள்கிறார்கள் என்று பார்த்து விட்டு எழுதுங்கள்' என்று கேட்டுக் கொண்டார். முதல்வர் கருணாநிதியையும் சந்தித்துப் பேட்டி காண அழைப்பு விடுத்தார் ஜெயந்தி நடராஜன். விடுதலைப் புலிகளைப் பற்றி இங்குள்ள பத்திரிகையாளர்கள் எத்தனைதான் எழுதினாலும் ஜெயந்தி நடராஜனுக்குத் திருப்தியே ஏற்படாதோ?

தொகுப்பு: **சித்தார்த்.**



* இரண்டே பாஸ்!



ராஜினாமா செய்தார்

ஹெக்டேயின் திடீர் ராஜினாமா எதைக் காட்டுகிறது?



குறை கூறினார்

*** மா. அதிராமவிஜயன், தஞ்சாவூர்.**

? இலங்கையின் உள்விவகாரங்களில் பாரதம் தலையிடாது என ஐ. கே. குஜ்ரால் கூறியிருக்கிறாரே?

! இந்தியா இந்த விஷயத்தில் சூடு கண்ட பூனை. ஆனால் தலையிடுதல் என்பதில் இருவகை உண்டு. படை அனுப்புதல் போன்று நேரடியாகத் தலையிடல் ஒன்று. பேச்சு வார்த்தை நடத்துதல், செல்வாக்கைப் பயன்படுத்துதல் என்பது மற்றொன்று. பின்னதைப் பின்பற்றி குறைந்தபட்சம் குண்டு வீச்சையாவது பாரதம் தடுத்து நிறுத்தி அப்பாவி ஈழத்தமிழர்கள் ஈசல் போல் மடிவதைத் தவிர்க்கலாம். இதன் மூலம் அகதிகள் வருகையையும் கணிசமாகத் தடுக்கலாம்.

*** ஜி. கதிரேசன், சிறுமுகை.**

? முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்குச் சத்துணவில் லட்டு கொடுக்கப்படும் என்று முதல்வர் கூறுகிறாரே?

! புரதச் சத்து சேர வேண்டும் என்பது தான் முக்கியம். கடலை உருண்டை கொடுத்தாலும் போதும். இப்படி மலிவான விஷயத்தை நாம் குறிப்பிட்டால் அதற்கு ஏழைகள் மீது நமக்கு இரக்கமில்லை என்று அவதூறு சுமத்துவார்கள். ஆனால் காந்திஜி சிபாரிசு செய்ததே வேர்க்கடலைதான். ஏழைகளின் சத்துணவு அதுவே. மக்களின் வரிப் பணத்தை மிச்சப்படுத்தவும் அதுவே வழி.

*** என். சம்பத், திருச்சி.**

? ஒலிம்பிக் பந்தயங்களில் கலந்து கொள்ளவே இந்திய வீரர்களுக்கு அருகதை இல்லாத போது இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைமைப் பதவிக்குச் சண்டையிட்டுக் கொள்வது பற்றி...?

! இந்தப் போட்டியிலாவது நிச்சயம் இந்தியர் ஒருவர்தான் வெற்றி பெறுகிறார் என்று பெருமைப்படலாமே!

*** தமிழ் எழிலன், திருச்சி.**

? பாகிஸ்தான் ஒரு படி இறங்கிப் பேச்சு வார்த்தைகளுக்குப் பச்சைக்கொடி காட்டியதற்குப் பின்னணி உண்டா?

! பல இஸ்லாமிய நாடுகள் உள்பட, பல்வேறு நாடுகளும் காஷ்மீர் பிரச்னையில் பாகிஸ்தான் போக்குக்கு ஆதரவு தெரிவிக்காதது ஒரு காரணம். இப்படிப் பல நாடுகளின் பார்வையைச் சரியான திசையில் நிலைக்கச் செய்ததற்கு நமது வெளிவிவகாரத்துறை அமைச்சரும் அதிகாரிகளும் பாராட்டப்பட வேண்டும்.

*** எஸ். யோகலிங்கம், சென்னை.**

? முப்பத்தேழு பேர் கொண்ட உயர்மட்டக் குழுவை ஜெயலலிதா அமைத்ததைப் பாராட்டிவிட்டு கேலிச் சித்திரத்தில் ஆளுக்கொரு திசையில் இழுப்பது போல் கிண்டலடித்திருக்கிறீர்களே...?

! இதில் நீங்கள் நினைப்பது போல் முரண்பாடு ஏதுமில்லை. உடல்நலம் குன்றியுள்ள ஜெயலலிதாவின் நடவடிக்கை சரியானது. அதனைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு, அவர் கருத்துப்படி உட்கட்சி ஜனநாயகம் மூலம் கட்சியைப் பலப்படுத்த இந்த உயர்மட்டக் குழு முயற்சி மேற்கொள்ள வேண்டும். ஆனால் அவர்கள் ஒற்றுமையாகச் செயல்படப் போவதாகத் தோன்றவில்லை. ஜெயலலிதாவுக்கு ஏமாற்றமே அளிக்கப் போவதாக எண்ண இடம் அளிக்கிறார்கள். இதைத்தான் கேள்வி — பதில், கார்ட்டூன் இரண்டுமே உணர்த்துகின்றன.

*** எம். ஷாஜகான், கம்பம்.**

? நான் நினைத்தால் தேசிய முன்னணி அரசைக் கவிழ்த்துவிட முடியும் என்று

ராஜீவ் மிரட்டுகிறாரே?

! அது ஒன்றும் சுலப சாத்தியமல்ல என்பது ஒருபுறமிருக்க, கவிழ்ப்பதில் பெருமை இல்லை; உரிய நேரத்தில் மக்களைச் சந்தித்துத் தேர்தலில் வெல்வதில்தான் பெருமை.

* ஸி. சந்திரசேகர், வேலூர்.

? ஹெக்டேயின் திடீர் ராஜினாமா எதைக் காட்டுகிறது?

! தார்மிக அரசியலைப் பின்பற்ற நினைப்பவர்களுக்குச் சோதனைக்கு மேல் சோதனை வந்த வண்ணம் இருக்கும் என்பதைத்தான். டெலிஃபோனில் ஒட்டுக் கேட்க அவர் உத்தரவு போட்டார் என்பதற்கோ நிலபேர ஊழலில் அவர் சம்பந்தப்பட்டிருந்தார் என்பதற்கோ அணுவளவு சாட்சியமும் இல்லை. ஆனாலும் டெலிஃபோன்கள் ஒட்டுக் கேட்கப்பட்டன என்பதும் நிலபேரம் நடக்கவில்லையென்றாலும் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதும் நிச்சயம். இவற்றில் ஹெக்டேக்குத் தொடர்பு உண்டா, இல்லையா என்ற தீர்ப்பை அரசு, சீக்கிரமாக விசாரணை அறிக்கைகளின் மீது முடிவெடுப்பதன் மூலம் அறிவிக்க வேண்டும். இல்லையெனில் ஒரு திறமைசாலியான தேசபக்தரின் தொண்டை நாடு இழக்கும்.

* ப. மூர்த்தி, பெங்களூர்.

? அரசின் தொழில் கொள்கையைச் சந்திரசேகர் குறை கூறியிருப்பது பற்றி...?

! நாம் மல்டி நேஷனல் எனப்படும் பன்னாட்டுத் தொழிலதிபர்கள் பிடியில் சிக்கிவிடக் கூடாது என்று சந்திரசேகர் கூறுவது உண்மை. அதே நேரத்தில் போட்டா போட்டியைத் தவிர்த்து ஏக போக்கியத்தின் மூலம் பணம் குவிக்கும் நம் நாட்டுப் பணமுதலைகளின் சூழ்ச்சியிலும் சிக்கிவிடக் கூடாது. இதுதான் அஜீத் சிங்கின் நோக்கம்.

* கொ. இரமேஷ், காரிமங்கலம்.

? பெண் அரசியல்வாதிகளில் உங்களைக் கவர்ந்தவர் யார் என்ற கேள்விக்கு மார்கரெட் தாட்சர், இந்திரா காந்தி, பேனசிர் புட்டோ என்று உலகளவில் நோக்காமல் ஜெயலலிதா என்று குறுகிய நோக்கில் பதிலளித்திருக்கிறீரே?

! இன்றைக்கு ஜெயலலிதா என்றுதான் காரண காரியத்தோடு கூறினேனே தவிர, என்றைக்கும் ஜெயலலிதா என்று சொல்லவில்லையே! தமிழ்நாட்டை மறந்த தேசியமோ, தேசியத்தை உதறிய உலக நோக்கோ நமக்கு இருக்க முடியாது, கூடாது.

* கே. ஏ. காளிமுத்து, இராணிப்பேட்டை.

? முரசொலியில் சின்னக் குத்தூசியின் ஆணித்தரமான வாதங்களால் கல்கி

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

தமிழ் எழிலன்,
ஆர். இ. ஸி. தோட்டம்,
தேனேரிப்பட்டி, அகூர் (அஞ்சல்),
திருச்சி — 620 052.

ஆடிப் போயிருக்கிறது என்று குங்குமம் பராசக்தி குறிப்பிட்டிருக்கிறாரே?

! இதற்காக அவர் தேர்ந்தெடுத்திருக்கும் (அல்லது உருவாக்கியிருக்கும்) கேள்வி மிக மட்டமானது. அதுவே அவர்கள் ''ரசனை''யை உணர்த்தும். வசை பாட ஆரம்பித்து விட்டதே வாதத்தில் அவர்கள் தோற்று விட்டதை நிரூபிக்கும். கல்கிக்குப் பதில் கூற முடியாமல் ராஜாஜியைப் பழித்துரைத்தார் கலைஞர். அதே இழிவான வேலையைத் தொடரும் குத்தூசியார், குங்குமத்திலிருந்து முரசொலிக்குத் தாவி ம. பொ. சியைத் துணைக்கு அழைக்கிறார். ம. பொ. சி. கூறுவதையெல்லாம் அப்படியே நாம் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று சட்டமா? திராவிட இயக்கத்தை எதிர்த்தும் தி. மு. க. வைக் குறை கூறியும் ம. பொ. சி. எவ்வளவோ எழுதியிருக்கிறார். இன்றைக்கும் எழுதி வருகிறார். அதையெல்லாம் குத்தூசியார் அப்படியே ஏற்றுக் கொண்டு விடுவாரா? ராஜாஜியைப் பாராட்டியும் அவர் ராமர் என்றால் நான் லட்சுமணனாக விளங்க விரும்புகிறேன் என்றும் ம. பொ. சி. பலமுறை எழுதியிருக்கிறாரே அதெல்லாம் குத்தூசியார் கண்களில் படவில்லையா? குத்தூசியார் எடுத்துக்காட்டும் ம. பொ. சி. யின் குறிப்பிட்ட வாதங்களுக்கு நாம் பதில் கூற முடியாது என்பதில்லை. நம்மிடம் நாளிதழ் இல்லை. முரசொலியில் என் பதிலுக்குக் குத்தூசியார் நாலு பக்கம் ஒதுக்க முன் வரட்டும். எழுதித் தருகிறேன். சூரியனைக் குத்தூசியால் கீறி விட முடியாது என்பதைக் கலைஞர் உணரட்டும்.

* பாராட்டுப் பெற்றார் * மிரட்டினார்




* லட்டு கொடுத்தார்

சென்னைக்

● "நான் கிழக்கைப் பார்க்கச் சூரிய நமஸ்காரம் பண்ணுறேன்; நீங்க மேற்கைப் பார்த்து பஸ்கி எடுங்க."



● "நேத்திக்குப் பார்த்திருக்கணும், கூட்டமாவது கூட்டம்! இன்னிக்கு மேகம் கலையறாப் போல கலைஞ்சிடுச்சே!"



கடற்கரை — ஒரு நாள் காலை



● ''காற்றுள்ள போதே.. தூற்றிக்க; தண்ணி வர்றப்பவே குளிச்சுக்க...''



● ''எது எப்படியோ, நம்ம ஆட்சி கவிழாம நீங்க தான் காப்பாத்தணும்...''

புகைப்படங்கள்: ராஜா பொன்சிங்

வட்டமேஜை

"பைண்டிங் புத்தகம் வீணாகாதா?"

* 'கோடம்பாக்கம் படுகொலைகள்' தலையங்கம் படித்தேன். நாட்டு நலனில் அக்கறை கொண்டுள்ள ஒவ்வொரு குடிமகனின் மனத்தில் எழும் கேள்விகளையும், ஐயப்பாடுகளையும் பிரதிபலிக்கிறது உங்கள் தலையங்கம்.

திருச்சி — 21, கிஷோர்.

* எதிர்க்கட்சிகளின் எச்சரிக்கைகளை முதல்வர் தமது பேச்சு சாதுர்யத்தால் கிண்டல் செய்யாமல், அவற்றுக்கு மதிப்பு கொடுத்து, சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் "கோடம்பாக்கம் படுகொலை"களை நிச்சயம் தவிர்த்து இருக்கலாம்.

தக்கோலம், ஆ. புகாரி.

* "கோடம்பாக்கம் படுகொலைகள்" தலையங்கத்தையும் 'தமிழகத்தில் விடுதலைப் புலிகள்' கட்டுரையையும் ஆங்கிலம், ஹிந்தியில் மொழிபெயர்த்து பிரதமர் வி. பி. சிங் மற்ற அமைச்சர்கள் மற்றும் சகல எம்.பி.க்களுக்கும் விநியோகிக்க வேண்டும்.

திருச்சி — 8, பி. வி. குப்புசாமி.

* 'தமிழகத்தில் விடுதலைப் புலிகள்' என்ற கட்டுரையில் பேட்டி அளித்திருந்த திருத்துறைப் பூண்டி இன்ஸ்பெக்டர், "மான்களுக்குத் தண்ணீர் கொண்டு செல்லும் வாகனங்களைக் கண்டு அவையெல்லாம் விடுதலைப் புலிகளின் வாகனங்கள் என்று புரளிகளைக் கிளப்பி விடுகிறார்கள்" என்று கூறியுள்ளது மிகச் சிறந்த ஜோக்.

தஞ்சாவூர் — 7, வளர்மதி ஆசைத்தம்பி.

* 'இளமைத் திரைப்படத்தின் இமாலய வெற்றி!' என்ற தலைப்பைப் பார்த்ததும் என்னடா இது! படித்துப் படித்துப் புளித்துப் போன 'மை நே பியார் கியா- படத்தைப் பற்றி நம் கல்கி இப்போது தான் எழுதுகிறதா என்று நினைத்துத்தான் படிக்க ஆரம்பித்தேன். ஆனால்... நீங்கள் அப் படத்தை அலசியிருந்த விதம் உண்மையிலேயே வித்தியாசமானதாக இருந்தது.

வேலூர், கே. பி. சாரதி.

* "குங்குமம் அணிவதும் ஒரு கலை" கவர் ஸ்டோரி மூலம் இதுவரை அறிந்திட முடியாத பல அரிய செய்திகளை அறிந்து கொள்ள முடிந்தது.

மதுரை — 16, பி. ராஜசேகரன்.

* 'குங்குமம் அணிவதும் ஒரு கலை' — எனும் அட்டைப் படக் கட்டுரையைப் படித்தவுடன், 'நெற்றியில் இடும் குங்குமத்தில் இவ்வளவு விஷயங்கள் அடங்கியுள்ளனவா...' என்று ஆச்சரியமாக இருந்தது!

தர்மபுரி — 2, வித்யா.

* மார்ஜின் பகுதிகளில் வீட்டுக் குறிப்புகளை வெளியிட்டீர்களே, அதைப் 'பொன்னியின் செல்வன்' தொடரிலுமா வெளியிட வேண்டும்? பிற்காலத்தில் இந்தத் தொடர் கதையின் பைண்டிங் புத்தகத்தைப் படிக்கும் வாசகர்கள், மார்ஜினுக்குள் என்னவோ இருக்கிறது என்ற ஆவலில் நன்றாக அழுத்திப் பிரித்துப் பார்த்துப் புத்தகத்தையே வீணாக்கி விட மாட்டார்களா?

மங்கைநல்லூர், ஆர். செல்வராணி.



* சுப்ரபாரதிமணியனின், 'தொடரும் இலட்சியங்கள்' சிறுகதை ஏழைகளின் இலட்சியங்கள் நனவாகாமல் கானல் நீராகிப் போவதை நன்கு எடுத்துக்காட்டியுள்ளது. பாராட்டுக்கள்.

தஞ்சாவூர், மா. அதிராமவிஜயன்.

* பதவி பறிக்கப்பட்ட ஆத்திரத்தில் அளவுக்கு மீறி ஏதும் பேசாமல், அடக்கத்துடன் 'கலைஞரின் ஆணைக்குக் கட்டுப்படுகிறேன்' என்ற முன்னாள் அமைச்சர் ராமகிருஷ்ணனின் பேட்டி, மற்ற தலைவர்களுக்கு நல்ல முன்னுதாரணம்!

சென்னை — 83, எஸ். யோகலிங்கம்.

* இருகூரானின் 'திசை மாறும் இலக்கியங்கள்' இன்றைய இலக்கிய வாழ்வின் அவல நிலையைத் தத்ரூபமாகச் சொல்கிறது.

திருச்சி, சரஸ்வதி பஞ்சு.

* "இருட்டிலிருந்து இருட்டுக்கு..." என்ற உண்மைச் சம்பவத்தில் வரும் உஷாவும் லதாவும் என்ன பாவம் செய்தார்கள்? அவர்களுக்கு ஏனிந்த நிலை? நினைக்கும்போதே நெஞ்சை யாரோ பிழிவது போன்று உணர்கின்றேன். சீரழிந்து போன சமுதாயத்தின் மீது சீற்றம்தான் வருகிறது.

ஸ்ரீ ஆதிவராகநல்லூர், சா. கிருஷ்ணசாமி.

* சிவப்பு விளக்குப் பகுதிப் பெண்களை மீட்டதையே அரசு ஒரு சாதனையாகக் கருதிக் கொண்டு இருக்கிறது. உண்மையான சாதனை அவர்களுக்கு அளிக்கப்படும் மறுவாழ்வில்தான் இருக்கிறது என்பதை அரசு எப்போது புரிந்து கொள்ளும்.

தஞ்சாவூர், ஆர். ராம் சந்தர்.

* திருமதி. கோமதி கண்ணப்பன் கூறுவது போல், சிவப்பு விளக்குப் பெண்களின் மீட்புப் பணியை ஓசைப்படாமல் செய்திருக்கலாம். பம்பாய் சிவப்பு விளக்குப் பகுதியில் முகம் தெரியாமல் அவமானப்பட்டு, மனம் புழுங்கிக் கொண்டிருந்த தமிழ்ப் பெண்களை, இங்கே விளம்பரப்படுத்தி மனம் கூசச் செய்து விட்டார்கள்.

கம்பம், செ. லைப்ரரி கண்ணன்.





அப்படியே சினிமா மாதிரியே....

சுஹாசினியின் 'பெண்' தொடரில் ஒரு கதை — 'வார்த்தை தவறிவிட்டாய்.' தலைப்பில் மட்டுமல்ல, இறுதிக் காட்சியில் பின்னணியிலும் இடம் பெற்றிருந்தது பாரதியாரின் பாடல்.

சுஹாசினி — நாயகி. அமர்க்களப்படுத்துகிறார். பாதம் தெரிய உயர்த்திக் கட்டிய புடைவையுடன் போக்குவரத்து நெரிசலைப் பற்றிக் கவலைப்படாமல் சாலையின் குறுக்கே நடப்பதும், காய்கறிக் கடைக்காரரிடம் கால மாற்றம் தெரியாமல் ஒரு வீசை கத்திரிக்காய் கேட்பதும், ஆட்டோக்காரர் திட்டிய—சென்னைக்கே உரித்தான—வசைச் சொற்களை நினைவு கூர்ந்து, ''கெட்ட வார்த்தை சொல்லித் திட்டறாங்க'' என்று குமுறிக் குமுறி அழுவதுமாகச் சரியான, நூறு சதவிகிதப் பட்டிக்காடு.

எதிர் பாராமல் நிகழ்ந்து விடும் திடீர் திருமணத்துக்கு வேண்டா வெறுப்பாகக் கழுத்தை நீட்டி, அதே வெறுப்புடன் சென்னைக்கு வந்து கணவனுடன் ஒட்டாமல் வாழ்க்கையைத் தொடங்குகிறவர் இல்லற இன்பத்தில் கொஞ்சம் கொஞ்சமாகத் தம்மை இழக்கத் தொடங்கி, பின்னர் அந்த வெறுப்பே கணவன் மீது கொள்ளும் ஆழ்ந்த அன்பாக மாறிவிடப் பிரசவத்துக்காகப் பிரிந்து செல்வது கூடப் பெரும் துயரமாகி விடுகிறது.

வசனங்களிலாகட்டும், நிகழ்ச்சிகளிலாகட்டும், அந்த மனமாற்றம்தான் எத்தனை சிருங்கார மயமானதாக இருந்தது! அதைப் பார்த்த போது, ''அய்யய்ய, அப்படியே சினிமா மாதிரியேன்னா இருக்கு!'' என்று பக்கத்து வீட்டு மாமி கன்னத்தில் விரல் பதித்து வியந்து போய்விட்டார்!

ஒரே ஒரு குறை. இத்தகைய காட்சிகளை அனுமதித்த தொலைக்காட்சி நிலையத்தார், முன்னதாகவே, ''வயது வந்தவர்களுக்கு மட்டும்'' என்று அறிவித்திருக்கலாம். தவறிவிட்டார்கள்.

பொதுவாகப் பார்க்கும் போது, அந்த மாமி சொன்னது சரியென்றுதான் தோன்றுகிறது. விளம்பரதாரர் தொடர்களில் சினிமாவின் பாதிப்பு அதிகமாகித்தான் உள்ளது. இங்கேயென்றில்லை. டில்லி நிகழ்ச்சிகளும் கூட அப்படித்தான். ஒருவேளை, சம்பந்தப்படுகிறவர்கள் அனைவருமே அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் என்பதனால் இருக்கலாம். உள்ளே போடப்படும் செட்டுகளாகட்டும், வெளிப் புறக்காட்சிகளாகட்டும், உணர்ச்சிக் கொந்தளிப்பான நிகழ்ச்சிகளாகட்டும், ஆடல் — பாடல் — சண்டை — பேச்சாகட்டும், எல்லாமே செயற்கையாக, ஒரு மிகைப் படுத்தப்பட்ட தன்மையிலேயே உள்ளன.

அண்மையில் ஒரு செவ்வாய்க்கிழமை மாலையில் இடம் பெற்ற 'வளர்ச்சிப் பணிகள்' நிகழ்ச்சியில் கூட்டுறவு அங்காடிகள் எவ்வாறு செயல் படுகின்றன என்பதை விவரித்தார்கள். அதற்கு முன் ஒரு சின்ன அறிமுக உரை. நிகழ்த்தியவர் ஓர் அம்மையார். பாவம், உச்சரிப்பில் 'ள' வுக்கும் 'ல' வுக்கும் இடையே உள்ள வேறுபாடே அவருக்குத் தெரியவில்லை.

குறிப்பிட்ட சில துறைகளைச் சேர்ந்தவர்களை அழைத்துப் பேட்டி காணும்போது, அவர்களிடம் ஒருவேளை இத்தகைய உச்சரிப்புக் குளறுபடிகள் காணப்பட்டால் வேறு வழியில்லை. ஆனால் இம்மாதிரி அறிமுக உரை நிகழ்த்துபவர்கள் ஆடிஷனுக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப் படுகிறவர்கள் அல்லவா!

கிரிக்கெட் வீரர் ஸ்ரீகாந்த் இடம் பெற்ற ஒரு துண்டுப்படம். குடியின் விளைவினால் குடும்ப வாழ்க்கை எப்படி சிதறிப் போகிறது என்பதை ரொம்பவும் **effective** ஆகச் சொல்லி மனத்தில் பதியவைத்த படம். போதைக்கெதிரான சர்வதேச நாளாகக் கொண்டாடப்பட்ட ஜூன் 26 அன்று காட்டப்பட்ட படம். இம்மாதிரிப்படங்கள் அந்த ஒரு நாளோடு பெட்டிக்குள் போய் விடக் கூடாது. அவ்வப்போது இடம் பெற வேண்டும்.

இருபது நாள் மகிழ்ச்சி இந்த வாரம் அடிபட்டுப் போய்விட்டது. ஆமாம், மீண்டும் இடம் பெறத் தொடங்கியுள்ளது, ''போக்குவரத்து விதிகளை கடைபிடியுங்கள்.''

— இச்சாமி



அதிசய மனிதன்

சில அதீதமான புராண நாயகர்களை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். மரணம் நிகழ்வது பகலிலும் கூடாது — இரவிலும் கூடாது, மனிதராலும் கூடாது — தேவராலும் கூடாது, வீட்டினுள்ளும் கூடாது — வீட்டுக்கு வெளியேயும் கூடாது என்று சாவுக்கெதிராகச் சவால் விட்டு வரம் வாங்கி நீடித்த ஆயுளுடன் வாழ முயன்ற நாயகர்கள்!

அத்தகைய 'வரம் வாங்கி'களின் பாணியில் அமைந்தவன் இருபத்தொன்றாம் நூற்றாண்டின் விஞ்ஞானப் படைப்பான 'அதிசய மனிதன்.'

உயிர்க்கொல்லியான அவனைத் துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்க முடியாது. நெருப்பிலிட்டு எரிக்க முடியாது. நீரில் அமுக்கி மூச்சுத் திணறச் செய்து அழித்து விட முடியாது. மண்ணில் புதைத்து மரணமடையச் செய்ய இயலாது.

அப்புறம் முடிவுதான் என்ன?

லேசர் ஒளிக்கற்றையை வெளிப்படுத்தும் மூன்றே மூன்று துப்பாக்கி ரவைகள் அவனை அழித்து விடுகின்றன. (?)

திகிலூட்டுவது என்பது அமெரிக்கருக்கு மட்டுமே குத்தகையா, என்ன? நம்மால் முடியும் தம்பியென்று சவால் விட்டுச் செய்திருக்கிறார்கள். இந்த வெற்றியில் கதை — வசனம் எழுதிய இருவருக்குக் கால் பங்கு என்றால், இயக்குனர் — இசையமைப்பாளர் — ஒளிப்பதிவாளர் ஆகிய மூவருக்கு முக்கால் பங்கு.

கதைக்களமாகத் தேர்ந்தெடுத்துள்ள அந்த விஸ்தார மாளிகை, கால் பதிக்கும் போதெல்லாம் சரக்சரக்கென்று ஒலியெழுப்பும் அதன் நெடிய நடைக்கூடங்கள், அவ்வப்போது திறந்து மூடுகையில் கிறீச்சிடும் கதவுகள் — ஜன்னல்கள் அனைத்துமே எதிர்பாராத நேரங்களில் ஓசையெழுப்பிப் பரபரப்பைக் கூட்டுகின்றன.

பாத்திரங்களில் பாதிப் பேருக்கு மேல் பயந்து கொலையுண்டு சாவதோடு வேலை முடிந்து விடுகிறது. குயிலி நடிப்பதைவிடப் புகைப்பது அதிகம். முழுக்க முழுக்க வந்து முடிவில் பிழைத்துப் போகிறவர் கௌதமி மட்டும்தான்.

ஒரு சாண் காகிதத்தில் அவர் பேசும் வசனங்களை அடக்கி விடலாம். பீதிப் போதெல்லாம் பீதி காட்டும் விழிகளுடன் திடுக்கிட்டெழுவதும், விரைந்து ஓடுவதும், பதுங்கி மறைவதும்... அதுவும் அந்த மிக நீண்ட உச்ச கட்டக் காட்சியில் படாதபாடு பட்டுவிடுகிறார். சிநேகிதிகளுக்குக் கிடைத்ததைப் போலக் காதல் செய்வதற்கு வாய்ப்பில்லாத கதாநாயகி.

நகைச்சுவைக்குசின்னிஜெயந்த்—கோவை சரளா ஜோடி.

திரைப் படம் எடுக்க வேண்டும் என்கிற தீவிர விழைவு கொண்டவர் சின்னி. அதற்கான கற்பனைகளில் திளைத்து, தன்னையே கதாபாத்திரமாக உருவகப் படுத்திக் கொண்டு ஆபத்துக்களில் சிக்கிவிட்டதைப் போல நடித்து சரளாவை அலற வைக்கிறார்.


இடையிடையே கொஞ்சமாகப் 'பச்சை' வசனம் பேசுகிறார். முடிவில் 'அதிசய மனித'னால் குதறப்பட்டு ரத்தம் சொட்டச் சொட்ட அவர் உயிர்விடப் போக, அதையும் நடிப்பு என்று கருதி சரளா அலட்சியப் படுத்துவதும், பின்னர் உண்மையறிந்து அவர் மீது விழுந்து கதறி, நல்லதங்காள் பாணியில் பாடியழுவதும் பளிச்.

பயம் காட்டுவது ஒன்றுதான் நோக்கம் என்றால் அதில் வெற்றி பெற்று விட்டிருக்கிறார்கள்.

திகட்டும் அளவுக்குத் திகில்.

— சி. ஆர். கே.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கெ. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.


1910 – 1990
80
LAKSHMI MILLS
லக்ஷ்மி அளிக்கும்
உங்கள் அழகான
தோற்றத்திற்கு ஏற்ற மாற்றம்
வாழ்விலே ஒரு புதிய தோற்றம். மகிழ்ச்சியான ஒரு மாற்றம்.
நாள்முழுவதும் உங்கள் எழிலுக்கு அழகூட்டும். மனமகிழ்வூட்டும்.
கச்சிதமாக பொருந்தும், ஸ்பான்டெக்ஸ் பிளவுஸ் துணிகள்.
கவர்ச்சியான வண்ணங்கள்.
நாகரீக மங்கையரின் விருப்பம்.
இதோ ஒரு
மாற்றம்
லக்ஷ்மி நிறுவனத்தாரிடமிருந்து
லக்ஷ்மி மில்ஸ்
கோயமுத்தூர்.

DDA/LM / 003

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

முடிசூடா மங்கோலா மன்னர் இதோ வருகிறார்!



மாம்பழ பானங்களில் மன்னன்

Duke's
Mangola
அதிக அல்:.பான்ஸோ கொண்டது

விற்பனையில் முதலிடம் வகிக்கும் மாம்பழ பானம் இதோ உங்களுக்கும் கிடைக்கிறது!